# அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2024

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

**இலங்கை**

2023 நவம்பர் 13

# அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2024

**ரணில் விக்கிரமசிங்க**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர், இலங்கை

2023 நவம்பர் 13

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் கீழ், அரசிறை உபாயக் கூற்று - 2024 (4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கிணங்க ) வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2024 (7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கமைவாக) கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**ISBN 978-624-5674-18-3**

கொழும்பு 8, இல 118, டாக்டர் டானிஸ்டர் சில்வா மாவத்தையில் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, இலங்கை, கொழும்பு 01, செயலகத்தில் அமைந்துள்ள நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


பக்கம்

முக்கிய பொருளாதார குறிகாட்டிகள் vii

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் viii

இணக்கப்பாடு - 2023 ix

அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2024 xi

### பகுதி I

அரசிறை மூலோபாயக் கூற்று -2024 3

**01. நடுத்தரக் கால அரசிறை மூலோபாயம்**

1.1 மேன்நோக்கு 7

1.2 நடுத்தரக் காலத்தில் அரசிறை மூலோபாயம் 10

### பகுதி II

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2024 17

**01. அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதிளிப்பு**

1.1 மேன்நோக்கு 21

1.2 அரசாங்க வருமானம் 24

1.3 அரசாங்க செலவினம் 41

1.4 திறைசேரி செயற்பாடுகள் 44

1.5 வெளிநாட்டு நிதியுதவி 46

**02. பொருளாதார முன்நோக்குகைகள்**

2.1 மேன்நோக்கு 53

2.2 பொருளாதார வளர்ச்சி 53

2.3 நாணயத் துறை அபிவிருத்திகள் 61

2.4 பங்குச் சந்தை 63

2.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் 64

2.6 உலக பொருளாதார பார்வைகள் 67

**03. அரசுடமை தொழில்முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகைகள்**

3.1 மேன்நோக்கு 71

3.2 பத்து பிரதான அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மீளாய்வு 71

**04. 2024 வரவு செலவுத் திட்ட தயாரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்**

## அட்டவணைகள்

பக்கம்


**பகுதி I**

அட்டவணை 1.1 நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டகம் 2023 - 2028 13

**பகுதி II**

அட்டவணை 1.1 அரசிறைத் தொழிற்பாடுகளின் கருக்கம் 22

அட்டவணை 1.2 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2023 23

அட்டவணை 1.3 அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் 25

அட்டவணை 1.4 வருமான வரியின் செயலாற்றுகை 26

அட்டவணை 1.5 பெறுமதிசேர்வரியின் செயலாற்றுகை 26

அட்டவணை 1.6 உற்பத்தி வரியின் செயலாற்றுகை 27

அட்டவணை 1.7 மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு 28

அட்டவணை 1.8 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/ இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி 29

அட்டவணை 1.9 சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் 30

அட்டவணை 1.10 அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (2023 சனவரி - செப்தெம்பர்) 31

அட்டவணை 1.11 அரசாங்க செலவின செயலாற்றுகை 42

அட்டவணை 1.12 அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2022 - 2023 42

அட்டவணை 1.13 2023 சனவரி முதல் செப்தெம்பர் வரை நலன்புரி செலவினம் 43

அட்டவணை 1.14 அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று 44

அட்டவணை 1.15 2023 சனவரி - செப்தெம்பர் வரையான மொத்த உள்நாட்டுக் கடன்கள் 45

அட்டவணை 1.16 விதிமுறைகளுடன் வெளிநாட்டு நிதியுதவி கடப்பாடுகள் -2023 சனவரி 1 முதல் செப்தெம்பர் 30 வரை 47

அட்டவணை 1.17 2023 சனவரி முதல் செப்டம்பர் 30 வரை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கல்கள் 49

அட்டவணை 2.1 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்) 54

அட்டவணை 2.2 சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் 59

அட்டவணை 2.3 சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை 60

அட்டவணை 2.4 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%) 61

அட்டவணை 2.5 நுகர்வோர் விலைப் பணவீக்கம் 63

அட்டவணை 2.6 மூலதனச் சந்தை அசைவுகள் 64

அட்டவணை 2.7 வெளிநாட்டு வர்த்தகம் 66

அட்டவணை 2.8 உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2023 (கணிப்பு) 68

அட்டவணை 3.1 மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி மற்றும் ஆற்றல் 73

அட்டவணை 3.2 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டல் தன்மை 76

அட்டவணை 3.3 அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் அறவீடுகள் / பங்கிலாபம் 77

## வரைபுகள்

பக்கம்

## பகுதி II


| | |
|---|---|
| வரைபு 1.1 மொத்த வருமானத்தின் வகுதிகள் (2023 சனவரி - செப்தெம்பர்) | 24 |
| வரைபு 1.2 வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (2023 சனவரி - செப்தெம்பர் ) | 24 |
| வரைபு 1.3 உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2023 சனவரி - செப்தெம்பர்) | 28 |
| வரைபு 1.4 உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை மாற்றத்திற்கு பின்னரான மொத்த உள்நாட்டுப் படுகடன் (2023 சனவரி - செப்தெம்பர்) | 45 |
| வரைபு 1.5 2023 சனவாரி 01 - செப்தெம்பர் 30 வரையில் துறைரீதியாக வழங்கப்பட்ட நிதிப் பகிர்வுகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | 50 |
| வரைபு 1.6 பிரதான அபிவிருத்திப் பங்காளர்களினால் (2023 செப்தெம்பர் 30 அன்று உள்ளவாறு) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உறுதியளிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாத மீதி (ஐ. அ. டொ. மில்லியன்) | 50 |
| வரைபு 1.7 பிரதான அபிவிருத்திப் பங்காளர்களினால் (2023 செப்தெம்பர் 30 அன்று உள்ளவாறு) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு துறை ரீதியாக உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி (ஐ.அ.டொ.மில்லியன்) | 50 |
| வரைபு 2.1 மொ.உ.உ. வளர்ச்சி | 53 |
| வரைபு 2.2 மொ.உ.உற்பத்தி வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு | 53 |
| வரைபு 2.3 விவசாயத்துறை வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு | 56 |
| வரைபு 2.4 கைத்தொழிற் துறை வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு | 57 |
| வரைபு 2.5 உற்பத்தித் துறை வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு | 57 |
| வரைபு 2.6 சேவைத் துறை வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு | 57 |
| வரைபு 2.7 தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம் | 60 |
| வரைபு 2.8 விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி | 62 |
| வரைபு 2.9 தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் (அடிப்படை 2013 = 100) | 62 |
| வரைபு 2.10 வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு | 65 |
| வரைபு 2.11 ஏற்றுமதிகளின் வகுதி | 65 |
| வரைபு 2.12 இறக்குமதிகளின் வகுதி | 66 |


## கட்டங்கள்


| | |
|---|---|
| கட்டங்கள் 1.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (2023 சனவரி – நவம்பர் 01 வரை) | 35 |


## இணைப்புகள்


| | |
|---|---|
| இணைப்பு I 2023 செப்தெம்பர் 30 வரையில் பொதுத் திறைசேரியினால் வியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரப்பட்டியல் | 83 |
| இணைப்பு II பேரின பொருளாதார குறிகாட்டிகள் | 85 |
| இணைப்பு III வருமான மதிப்பீடுகளுக்கான அனுமானங்கள் - 2024 | 92 |

## முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி 2022 | 2023 |
|---|---|---|---|---|
| **மெய்த் துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் அரையாண்டு | % | -3.6 | -7.9 |
| விவசாயம் | முதல் அரையாண்டு | % | -6.2 | 2.2 |
| கைத்தொழில் | முதல் அரையாண்டு | % | -6.6 | -18.3 |
| சேவைகள் | முதல் அரையாண்டு | % | 0.2 | -3.2 |
| பணவீக்கம் (புள்ளிக்குப் புள்ளி) - CCPI (2013=100) | ஒக் இறுதி | % | 66.0 | 1.5(அ) |
| பணவீக்கம் (சராசரி) - CCPI (2013=100) | ஒக் இறுதி | % | 38.3 | – |
| வேலையின்மை வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 4.6 | 5.2 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 50.1 | 48.6 |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - செப் | ரூபா. பில். | -1,244 | -1,614 |
| மொத்த வருமானம் | சன - செப் | ரூபா. பில். | 1,448 | 2,110 |
| வரி வருமானம் | சன - செப் | ரூபா. பில். | 1,283 | 1,934 |
| வரியல்லாத வருமானம் | சன - செப் | ரூபா. பில். | 165 | 176 |
| மொத்த செலவினம் | சன - செப் | ரூபா. பில். | 2,695 | 3,732 |
| மீண்டெழும் செலவினம் | சன - செப் | ரூபா. பில். | 2,300 | 3,328 |
| அரசாங்க முதலீடு | சன - செப் | ரூபா. பில். | 418 | 443 |
| அரசாங்க படுகடன் | யூன் இறுதி | ரூபா. பில். | 24,264 | 26,916 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 9,992 | 8,982 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 1,940 | 1,945 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 8,012 | 6,998 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 4,577 | 3,689 |
| ஏனையவை | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 3,435 | 3,309 |
| இறக்குமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 14,085 | 12,323 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 2,147 | 2,243 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 9,497 | 8,105 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 3,694 | 3,476 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 2,433 | 1,963 |
| வர்த்தக மீதி | சன - செப் | ஐ.அ.டொ.மில் | -4,093 | -3,342 |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன - செப் | எண். | 526,232 | 1,016,256 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 873 | 1,457 |
| தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 2,574 | 4,345 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன - செப் | ஐ.அ.டொ.மில் | 138 | 11 |
| மொத்த சென்மதி நிலுவை | சன - செப் | ஐ.அ.டொ.மில் | -2,927 | 1,863 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்கங்கள் | செப் இறுதி | ஐ.அ.டொ.மில் | 1,779 | 3,540 |
| நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்) | ஒக் இறுதி | டொலர் ஒன்றிற்கான ரூபா | 363.30 | 327.38 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன - ஒக் | டொலர் ஒன்றிற்கான ரூபா | 363.15 | 324.73 |
| **நாணயத்துறை** | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) | ஒக் இறுதி | % | 14.50 | 10.00 |
| துணைநில் கடன் வசதி வீதம் (SLFR) | ஒக் இறுதி | % | 15.50 | 11.00 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | செப் இறுதி | % | 4.00 | 2.00 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் - வாராந்தம் (AWPR) | செப் இறுதி | % | 25.95 | 14.67 |
| திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (91 நாட்கள்) | செப் இறுதி | % | 31.94 | 17.42 |
| திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (364 நாட்கள்) | செப் இறுதி | % | 29.85 | 13.30 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | 2022 செப்/ 2023 செப் | % | 14.9 | 6.3 |
| தனியார துறை கடன் வளர்ச்சி | 2022 செப்/ 2023 செப் | % | 11.0 | -5.4 |

*(அ) அடிப்படை ஆண்டு (2021=100)*

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்**

| பிரிவு | தேவைப்பாடு | உள்ளடக்கங்கள் | இணக்கப்பாடுகள் |
|---|---|---|---|
| பிரிவு 4, 5 மற்றும் 6 | அரசிறை உபாயக் கூற்று சமா்ப்பிப்பு* | அரசின் அரசிறைக் கொள்கைகளின் பால் மக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கு அரசிறை உபாயக் கூற்று மற்றும் அரசாங்கத்தின் அரசிறை உபாய மதிப்பீட்டுச் செயற்பாட்டு நியமங்களின் ஸ்தாபிப்பு | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2 ஆவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 7,8 மற்றும் 9 | வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை சமா்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கான வரவு செலவுத்திட்டம், பொருளாதாரம் மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2 ஆவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 10, 11 மற்றும் 12 | நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை சமா்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக, ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடா்புடைய அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறை வேற்றுகையின் திகதியிலிருந்து 6 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னா் அல்லது யூன் மாதம் இறுதித் தினம் வருடாந்தம் வெளியடப்பட வேண்டியுள்ளதுடன் இத்திகதிகளில் எத்திகதி பிந்தியதாக இருந்தபோதும் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 2 வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 13, 14 மற்றும் 15 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) சமா்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடா்புடைய அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) | நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து 5 மாதங்களுக்குள் பொது மக்களின் பாா்வைக்காக வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 16,17,18 மற்றும் 19 | தோ்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை சமா்ப்பிப்பு ** | தோ்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய தகவல்களை இற்றைப்படுத்தி வழங்குகின்றது. | பாராளுமன்ற உறுப்பினா்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தோ்தல் ஒன்றை நடாத்துவதாக அறிவித்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பொது மக்களுக்காக வெளியிடப்படு வதுடன் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமா்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளு மன்றத்தில் சமா்பிக்கப்படும். |

* நிதி அமைச்சரினால்
** நிதி அமைச்சின் செயலாளரினால்

## இணக்கப்பாடு – 2023

- **இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் வருடாந்த அறிக்கை – 2022**

இவ்வறிக்கையானது 2022 ஆம் ஆண்டின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையினைக் குறிப்பிடுவதுடன் 2023 மே மாத இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டு, 22 யூன் 2023 இல் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை – 2023**

2023 இன் முதல் நான்கு மாதங்களின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமை, 2022 யூன் இறுதியில் மக்களுக்காக வெளியிடப்பட்டதுடன், 2023 யூலை 19 ஆம் திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### இந்த அரசிறை முகாமைத்துவ அறிக்கை – 2024 இல் அடங்கியுள்ள விடயங்கள்

- **அரசிறை மூலோபாயக்கூற்று – 2024**

முழுமையான அரசிறை கொள்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசாங்கத்தினால் கருதப்படும் பிரதான அரசிறை நடவடிக்கைகளை குறித்துக்காட்டும் பரந்த மூலோபாய முன்னுரிமைகளை அரசாங்கத்தின் இவ் அரசிறை மூலோபாய சுருக்கம் குறிக்கின்றது. மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புத் தினத்தன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- **வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2024**

அரசாங்கத்தின் வருமானம், செலவுகள் மற்றும் அரச படுகடன்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகளுடன், அதன் அரசிறை மூலோபாயத்திற்கெதிரான அரசாங்கத்தின் அரசிறை செயற்திறனை மதிப்பிடுவதற்கான அடிப்படைகளை இப்பகுதி விபரிக்கின்றது மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படவுள்ளது.

# அரசிறை முகாமைத்துவ அறிக்கை – 2024

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி I அரசாங்கத்தின் அரசிறை மூலோபய கூற்று - 2024 இனையும் பகுதி II அரசாங்கத்தின் அரசிறை மூலோபாய அறிக்கைக்கு எதிராக அதன் அரசிறை மூலோபாய செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

# பகுதி - I

# அரசிறை மூலோபாயக் கூற்று – 2024

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் வெளியிடப்பட்டது.**

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயக் கூற்று அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் நிதி அமைச்சர் கேட்கப்பட்டதற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது அமுல்படுத்தப்படவிருக்கும் முழுமையான அரசிறை கொள்கை மற்றும் மூலோபாய நோக்கில் அரசாங்கம் முக்கியமானதாகக் கருதும், பிரதான அரசிறை நடவடிக்கைகளைக் குறிப்பிடும் அதேவேளை வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பரந்த மூலோபாய முன்னுரிமைகளை விளக்குகின்றது.

# நடுத்தர கால அரசிறை மூலோபாயம் | 01

**1.1 மேன்நோக்கு**

அரசாங்கமானது, தனது வரலாற்றில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைத் தணிப் பதற்காக விரிவான மறுசீரமைப்புக்கள் மற்றும் கொள்கைத் தலையீடுகள் ஆகியவற்றின் மூலம் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பப் பொருளாதார ஸ்திரத்தன்மையின் அறிகுறிகள் இலங்கைப் பொருளா தாரத்தில் பிரதிபலிக்கத் துவங்கின. முக்கிய கொள்கைத் தலையீடுகளில் ஒன்றாக, 2023 ஆம் ஆண்டு மாச்சு 20 ஆம் திகதியன்று, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF-EFF) நான்காண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தில் அரசாங்கம் நுழைந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தின் நோக்கங்களில் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் படு கடன் பேண்தகுநிலையை மீட்டெடுத்தல், நிதித் துறை ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், நிருவாகத்தை வலுப்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு வலைத் திட்டங் களைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். எவ்வாறாயினும், ஆழமாக வேரூன்றியதும் நெடுங்காலமாக புறக்கணிக்கப் பட்டதுமான பேரண்டப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் சிக்கலான பாதிப்புகளுக்கு மத்தியில் பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருவதால், பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்கு இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது அவசியமாகும்.

வலுவான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை செயற் படுத்துவதன் காரணமாக, பேரினப் பொருளாதாரத்தின் முக்கிய கூறுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. பரந்தளவிலான வருமான மேம்பாடு மற்றும் செலவின முகாமைத்துவ நடவடிக்கை களைத் தொடர்ந்து, அரசாங்கம் ஆரம்ப வரவுசெலவுத் திட்ட மிகையாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 123.8 பில்லியனினை அடையப் பெற்றது. இத்தொகையானது 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமான ஆரம்பப் பற்றாக்குறையிலிருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை பிரதிபலிக்கின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI) படி பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தீர்க்கமான நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் பயனாக, 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம், 2023 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாத இறுதிக்குள் ஒற்றை இலக்க மட்டத்திற்கு, அதாவது 1.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. அந்நியச் செலாவணித் திரவநிலையில் ஏற்பட்ட மேம்பாடுகளின் காரணமாக, 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை ரூபாய், 296 ஐ.அ.டொ. எனும் மட்டத்திற்கு உயர்வடையத் துவங்கி, ஒக்தோபர் மாத இறுதியில் 327 ஐ.அ.டொ. எனும் மட்டத்தினை அடைந்துள்ளது. தொழிலாளர்களின் பண அனுப்பல்களின் வலுவான மீளெழுச்சி, ஏற்றுமதிகளிலிருந்து ஓரளவு வருமான மீட்சி மற்றும் சுற்றுலாத்துறை வருவாயின் படிப்படியான அதிகரிப்பு ஆகியவற்றால் உந்தப்பட்டு, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் திரட்சி மேம்படத் துவங்கியது. மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொ. 1,898 மில்லியனிலிருந்து 2023, செப்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொ. 3,540 மில்லியனாக வளர்ச்சியடைந்தது. இருப்பினும், பொருளாதார வளர்ச்சியானது 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பதிவுசெய்யப்பட்ட 3.6 சதவீத சுருக்கத்தைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 7.9 சதவீதமாக மேலும் சுருக்கமடைந்தது. கொள்வனவு முகாமைச் சுட்டெண் (PMI) தரவு போன்ற முன்னோக்கிப் பார்க்கும் உயர் அதிர்வெண் குறிகாட்டிகள் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து சாதகமான வளர்ச்சிக்கான சாத்தியமான மீட்சியைப் பரிந்துரைப்பு செய்கின்றன.

வளர்ச்சிக் கண்ணோட்டம் பலவீனமாக இருப்பினும், உலகப் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் எதிர்பார்த்ததை விட மிகவும் நெகிழ்ச்சியுடன் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சீனாவின் எதிர்பார்த்ததை விட பலவீனமான மீட்சி, தொடர்ச்சியான பணவீக்கம், அதிக வட்டி வீதங்கள், பூகோள அரசியல் பதட்டங்கள் மற்றும் நிலைத்திராத உலகளாவிய பொதுப் படுகடனின் உயர்ச்சி நிலை ஆகியவை உலகப் பொருளாதார வளர்ச்சியின் பின்தங்கிய செயலாற்றுகைக்கான அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் 2023, ஒக்தோபர் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படி, உலகப் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 2.9 சதவீதமாகக் குறைவதற்கு முன், 2023 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இலங்கை பொருளாதாரத்தின் மீது பரவலான விளைவைக் கொண்டிருக்கின்றது.

வரி முறைமை மற்றும் வரி நிருவாகத்தை சீரமைப்பதற்கான பல்வேறு மாற்றங்களை உள்ளடக்கிய, கட்டமைப்புப் பலவீனங்களைச் சரிசெய்து, தவறான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தெரிவுகளை நிவர்த்தி செய்யும் வகையில் வருமானத் திரட்டல் மறுசீரமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. முக்கியமான சில வரி சீரமைப்புக்களில் பெறுமதி சேர் வரியை 2022, யூன் மாதத்தில் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும், பின்னர் 2022, செப்தெம்பர் மாதத்தில் 15 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டமை மற்றும் 2022, ஒக்தோபர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரியின் பதிவிற்கான ஆரம்ப எல்லையை ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மில்லியன் வரை குறைக்கப்பட்டமை ஆகியவை உள்ளடங்கும். 2022, ஒக்தோபர் முதல், துறை சார்ந்த நிறுவன வருமான வரி விலக்குகளும் சலுகை விகிதங்களும் அகற்றப்பட்டு, நியமமான நிறுவன வருமான வரி விகிதம் 24 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. ஒவ்வொரு ரூபா 500,000 இற்கும் ஆண்டொன்றிற்கு 6 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாக எல்லை உயர்த்தப்பட்டு முற்பண தனியாள் வருமான வரி வீத அட்டவணையும் திருத்தப்பட்டது. தனியாள் வருமான வரியற்ற கொடுப்பனவு ஆண்டொன்றிற்கு ரூபா 3 மில்லியனிலிருந்து ஆண்டொன்றிற்கு ரூபா 1.2 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. 2023, சனவரி தொடக்கத்திலிருந்து பங்கிலாபங்களைத் தவிர மற்ற அனைத்து கொடுப்பனவுகளுக்கும் கட்டாய இறுதி அல்லாத பிடித்துவைத்தல் வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பங்கிலாபங்களுக்கான இறுதி பிடித்துவைத்தல் வரியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், பின்தங்கிய பொருளாதார செயற்பாடுகள், எதிர்பார்த்ததை விட வேகமான பணவீக்கம், அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள், நாணயத்தின் பெறுமதித் தேய்வு மற்றும் வரி நிருவாகம் தொடர்பான குறைபாடுகள் ஆகியவற்றின் காரணமாக வருமானத் திரட்டல் அதன் முழுத் திறனை அடையமுடியவில்லை. 2025 ஆம் ஆண்டில் மொ. தே. உற்பத்திக்கான – வரியின் விகிதாசாரத்தினை குறைந்தபட்சம் 14 சதவீதமாக உயர்த்தும் நோக்கத்துடன், 2024 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் கிட்டத்தட்ட அனைத்துப் பொருள்-குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி விலக்குகளையும் நீக்குவதன் மூலம் பெறுமதி சேர் வரி முறைமையில் மேலும் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாகவும், மற்றும் வலுவான பெறுமதி சேர் வரி தொடர்பான மீளளிப்பு முறைமையை நிறுவும் அதேவேளை இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாகவும் வருமானத் திரட்டல் முயற்சிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. அத்துடன், 2025 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆதன வரியை வடிவமைக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த மறுசீரமைப்புக்கள் வரி அடிப்படையை விரிவுபடுத்தும் அதே வேளையில், வருமானத்தைத் திரட்டுவதற்கான மேலும் முற்போக்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மேலும், வருவாயை அதிகரிக்கும் நடவடிக்கைகளுக்குத் துணையாக, வருமான சேகரிப்பு நிறுவனங்களின் நிறுவன மறுசீரமைப்புக்களுக்கு விசேட முக்கியத்துவமளித்து, வரி நிருவாகத்தை வலுப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

2022, யூன் முதல் முக்கிய வருமான மேம்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலம், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பணவீக்க விளைவு ஆகியவற்றுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்க வருமானம் ரூபா 2,118.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 1,450.4 பில்லியனினை விட 46.1 சதவீத அதிகரிப்பாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமான வரி வருவாய், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 431.8 பில்லியனிலிருந்து 53.7 சதவீதம் அதிகரித்து ரூபா 663.6 பில்லியனினையும் ஆண்டுக்குரிய வருமான மதிப்பீட்டில் 72.8 சதவீதத் தேறலையும் கொண்டிருந்தது. முக்கியமாக, உழைக்கும்போது செலுத்தும் வரி 497.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 107.0 பில்லியனினையும், பிடித்து வைத்தல் வரி 672.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 110.4 பில்லியனினையும் கொண்டிருந்தமை இதற்கு காரணமாகவுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி வருமானம் ரூபா 1,004.3 பில்லியனினைப் பதிவுசெய்ததுடன் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 597.6 பில்லியனிலிருந்து 68.1 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெறுமதி சேர் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 62.6 சதவிகிதத்தினால் அதிகரித்து ரூபா 505.0 பில்லியன் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்து ரூபா 158.4 பில்லியன் பெறப்பட்டமை, இத்தகைய அதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 266.0 பில்லியன் ஆகும். இத்தொகையானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 254.0 பில்லியனினை விட 4.7 சதவீத அதிகரிப்பாகும். வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளின் குறை செயலாற்றத்திற்கு 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் வரி ஆகியவற்றினை படிப்படியாக குறைப்பதற்காக எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானங்களும் வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்கான இறக்குமதி கட்டுப்பாடுகள், நாணயப் பெறுமதியேற்றம் மற்றும் உலகப் பண்டங்களின் விலைக் குறைப்பு ஆகியன உள்ளன. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி அல்லாத வருமானமானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 165.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 6.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 176.5 பில்லியனினைப் பதிவுசெய்ததுடன், ஆண்டுக்குரிய வருமான மதிப்பீட்டில் 63.5 சதவீதத்தை எட்டியுள்ளதனைக் குறிக்கிறது.

வருமான - மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஏற்ப, சிறந்த தரமான செலவினங்களில் கவனம் செலுத்துவதற்கும், பொது முதலீடுகளில் பணத்திற்கான பெறுமதியை உறுதி செய்வதற்கும், அரசாங்கம் செலவின முகாமை நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. அவசரமல்லாத மூலதனச் செலவுகள் மற்றும் மீண்டெழும் செலவினங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் 2022, ஏப்பிரல் முதல் திறைசேரியால் வெளியிடப்பட்ட தொடர்ச்சியான சுற்று நிருபங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 2,694.8 பில்லியனாகக் காணப்பட்ட அரசாங்க செலவினம், வட்டிச் செலவின் அதிகரிப்பு காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 3,732.3 பில்லியன் வரை 38.5 சதவீதத்தினால் அதிகரித்தது. அதன்படி, அரசாங்கச் செலவினமானது ஆண்டுக்குரிய மதிப்பீடாகிய ரூபா 5,819.0 பில்லியனில் 64.1 சதவீதத்தை எட்டியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மீண்டெழும் செலவினத்தைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 2,300.2 பில்லியனிலிருந்து 44.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 3,327.7 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 927.4 பில்லியனாகக் காணப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1,737.3 பில்லியன் வரை 101.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 87.3 சதவிகிதம் அதிகரித்ததன் மூலம், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் முழு ஆண்டு மதிப்பீட்டின் 79.2 சதவிகிதத்தை வட்டிக் கொடுப்பனவுகள் எட்டியுள்ளன. 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து அதிக பணவீக்கம் மற்றும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவு காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவு ரூபா 208.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 118.1 பில்லியனினை விட 76.8 சதவீத அதிகரிப்பாகும்.

2026 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கும் குறைவாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை படிப்படியாகக் கட்டுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. சமீபத்திய ஆண்டுகளில் அரசாங்கச் செலவினங்களுக்கும் வருமானத்திற்கும் இடையிலான இடைவெளி கணிசமாக விரிவடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில்

18 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை கொண்டுள்ள அரசாங்கச் செலவினம் பெரும்பாலும் கடினமானதாகவும், உவப்பற்றதாகவும் இருந்தபோதிலும், இது வருமான மற்றும் பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது அதிகமாக இல்லை. அரசாங்க வருவாயில் கூரான சரிவு வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை அதிகரிக்கத் தூண்டியது. இதன் விளைவாக, 2020 ஆம் ஆண்டு முதல், வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையானது, தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்திற்கும் அதிகமாகப் பதிவாகியுள்ளது. 2022, யூன் முதல் துவங்கப்பட்ட வருமான அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு முயற்சிகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதன் மூலம், 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.7 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் 7.6 சதவீதமாகவும் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஒற்றை இலக்க மட்டத்தில் கட்டுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெயரளவிலான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 1,613.6 பில்லியன் ஆகும். இப்பற்றாக்குறை 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1,244.4 பில்லியனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 317.0 பில்லியன் ஆரம்பப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 123.8 பில்லியன் ஆரம்ப மிகையாக மாறியது. 2023 ஆம் ஆண்டில், ஆரம்பப் பற்றாக்குறை இலக்கான ரூபா 209.0 பில்லியனை அடைய உதவும். மேம்படுத்தப்பட்ட வருமானமானது ஆரம்பப் பற்றாக்குறை 2023 ஆண்டு மற்றும் அதற்குப் பிறகு குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், கணிசமானளவு அதிக வட்டி கொடுப்பனவுகள் காரணமாக ஒட்டுமொத்த நிலுவை உயர்த்தப்படும். இருப்பினும், நடுத்தர காலத்தில், கடன் மறுசீரமைப்பு முடிவடைந்து, வருவாய் அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு முழுமையாக நிறுவப்படுவதன் மூலம் ஒட்டுமொத்த நிலுவை குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலுடன், அரசிறைப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக அரசாங்கம் உள்நாட்டு மூலங்களைப் பெரிதும் நம்பியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசிறைப் பற்றாக்குறையை நிரப்புவதற்கான தேறிய உள்நாட்டு நிதியளிப்பு ரூபா 1,516.8 பில்லியனாகவும் தேறிய வெளிநாட்டு நிதியளிப்பு ரூபா 96.7 பில்லியனாகவும் இருந்தது.

நிலுவையிலுள்ள மத்திய அரசாங்கப் படுகடன் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 27,492.0 பில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டு யூன் இறுதிக்குள் ரூபா 26,916.2 பில்லியன் வரை 2.1 சதவீதத்தினால் சரிவடைந்தது. 2023 ஆம் ஆண்டு யூன் இறுதியில், மொத்த உள்நாட்டுப் படுகடன் 6.2 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 15,961.4 பில்லியனினையும் நிலுவையில் உள்ள வெளிநாட்டுப் படுகடன் 12.1 சதவீதத்தினால் விழ்ச்சியுற்று ரூபா 10,954.8 பில்லியனினையும் பதிவுசெய்தது. உயர்வானதும் நிலையற்றதுமான படுகடன் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இலங்கைக்கு ஏற்பட்டது.

உள்நாட்டு அந்நிய செலாவணிச் சந்தையில் திரவநிலையில் தொடர்ச்சியான முன்னேற்றம், நாணய நிதியளிப்பினைக் குறைத்தல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட நம்பிக்கை ஆகியவற்றின் பயனால் 2023, சனவரி-மே மாதங்களில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாய் 22 சதவீதத்திற்கும் மேலாக குறிப்பிடத்தக்க பெறுமதியுயர்வினை வெளிப்படுத்தியது. இருப்பினும், அதைத்தொடர்ந்து 2023, மே-ஓகத்து காலப்பகுதியில் நாணயம் படிப்படியாக சுமார் 8 சதவீதம் வரை தேய்வடைந்தது. உள்நாட்டு படுகடன் மேம்பத்துகையினை தொடர்ந்ததான பூச்சிய நிகர திறந்த நிலையை அடைய வங்கித்துறை சந்தையிலிருந்து மேலதிக அன்னிய செலாவணியை கொள்வனவு செய்ததால் உள்நாட்டு கடன் மேம்படுத்துகையை சென்மதி நிலுவையின் நிதிக் கணக்கின் மீதான மாற்றத் தாக்கம் முக்கிய காரணமாகின்றது.

இலங்கை மத்திய வங்கி, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக 950 அடிப்படைப் புள்ளிகளாலும், 2023 மார்ச் மாதத்தில் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் கொள்கை விகிதங்களை உயர்த்தியது. வீழ்ச்சியடைந்த பணவீக்கத்திற்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கியானது 2023 யூன் மாதத்தில் 250 அடிப்படைப் புள்ளிகளால் வீதங்களைக் குறைத்ததுடன் 2023 யூலை மாதத்தில் மேலும் 200 அடிப்படைப் புள்ளிகளாலும் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் 2023 ஒக்தோபர் மாதத்தில் 100 குறைந்த நாணயக் கொள்கையை இலகுபடுத்தத் தொடங்கியது. இதன்படி, 2023 யூலை மாதத்தில் துணைநில் கடன் வசதி வீதம் (SLFR) 11 சதவீதமாகவும், துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) 10 சதவீதமாகவும் காணப்பட்டது. பலவீனமான கேள்வி மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகளை நிலைப்படுத்துதல் ஆகியவற்றின் மத்தியில், பணவீக்கமானது இலக்கு நடுத்தர ஒற்றை இலக்க இலக்கு மட்டத்தில் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. நாணய நிதியளிப்பு மற்றும் பணவீக்கத்திற்கு இட்டுச்செல்லும் ஆளுகைச் சட்டத்தை படிப்படியாக அகற்றல் ஆகியவை நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு இலக்கு மட்டங்களில் பணவீக்கத்தை நிலைநிறுத்த உதவும்.

இந்தச் சூழலில், மேற்கூறிய விரிவான மறுசீரமைப்புக்கள் மற்றும் கொள்கை முன்முயற்சிகளின் செயற்திறனுடன், 2025 ஆம் ஆண்டளவில் நடுத்தர காலத்திலும் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத ஆரம்ப மிகையைப் பராமரிக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. வலுவான வருவாய் திரட்டல் நடவடிக்கைகள் மற்றும் கவனம்மிக்க செலவின முகாமைத்துவ நடவடிக்கைகளின் மூலம் இது அடையப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்வதற்கும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் திட்ட அளவுருக்களை அடைவதற்கும் அரசாங்கம் உறுதியாக உள்ளது. ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட வருமான நடவடிக்கைகளின் தொடர்ச்சி, தற்போதுள்ள வருமான நடவடிக்கைகளுக்குப் புதிய மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல், வரி அடிப்படையையும் வரி இணக்கத்தையும் வலுப்படுத்த வருமான நிருவாக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வரி தவிர்ப்பு, ஏய்ப்பு மற்றும் வருமானச் கசிவைக் குறைத்தல் ஆகியவை இந்த உறுதிப்பாட்டின் முக்கிய கூறுகளாகும். மேலும், பொதுப் படுகடன் பேண்தகு தன்மையை மீட்டெடுக்க கடன் மறுசீரமைப்பு செயன்முறையை விரைவுபடுத்தி, செலவினங்களின் தரத்தை உயர்த்துவதற்கான செலவின முகாமைத்துவ நடவடிக்கைகளைத் தொடர்தல் மற்றும் சமூக பாதுகாப்பு வலைத் திட்டத்தை மேலும் வலுப்படுத்துதல் ஆகியவை ஏனைய அம்சங்களாகும்.

அரசுடைமைத் தொழில்முயற்சிகளிலிருந்து எழும் அரசிறை அபாயங்களைக் குறைக்க அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்புத் திட்டத்தை அரசாங்கம் தொடரும். கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, எண்மியம் மயமாக்கல், காலநிலை மாற்றம் குறைப்பு மற்றும் பசுமைப் பொருளாதாரம் போன்ற முக்கியமான மற்றும் முன்னுரிமைப் பகுதிகளில் செலவினங்கள் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய பொது முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

### 1.2 நடுத்தர காலத்தில் அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைகள், 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின், அடுத்தடுத்த திருத்தங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கான இலக்குகள், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசு உத்தரவாதங்கள் மற்றும் மொத்த அரசாங்க பொறுப்புகள் போன்ற அரசிறை விதிகள், பேண்தகு மட்டங்களில் அரசிறை நடவடிக்கைகளை நிருவகிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், வரலாற்று ரீதியாக, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அரசிறை விதிகள் திருப்திகரமான முறையில் பின்பற்றப்படவில்லை. 2003 ஆம் ஆண்டில் கோடிட்டுக் காட்டப்பட்ட இலக்குகள் திருத்தப்பட்டு 2013, 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அரசிறை விதிகள் திருத்தப்பட்டன. இதனால், அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடுகளின் விவேகமான நிருவாகத்தினை உறுதிசெய்வதற்கு, அரசிறை விதிகள் ஒருபோதும் உண்மையான பிணைப்பு விளைவைக் கொண்டிருக்கவில்லை. அரசிறை ஒழுக்கத்தை மீட்டெடுக்கவும், அரசிறை ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும் அரசிறை விதிகளைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய அரச நிதி முகாமைத்துவ சட்டமொன்றினை இயற்றும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்தப் புதிய சட்டம் தற்போதுள்ள அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தினை இரத்துச் செய்து, 2025 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்திலிருந்து நடைமுறைக்கு வரும் புதிய அரசிறை விதிகளை உருவாக்கும். இந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலுக்கிணங்க, வரவுசெலவு திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான மூலோபாய வழிகாட்டுதலை வழங்குவதற்காக நடுத்தர கால அரசிறைச் சட்டகத்தினை உள்ளடக்கிய புதிய அரசிறை மூலோபாய கூற்றறிக்கையை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, அரசாங்கம் புதிய அரசிறை மூலோபாய கூற்றறிக்கையொன்றினைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதுடன், அவ்வறிக்கை 2024, யூன் இறுதிக்குள் வெளியிடப்படும்.

அரசாங்கத்தின் முக்கிய நடுத்தர கால அரசிறை நோக்கங்கள், சமூகத்தின் மிகவும் பின்தங்கிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் நல்வாழ்வை உறுதி செய்யும் அதே வேளையில், நீண்ட கால வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு வருமான அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு மற்றும் செலவின முகாமைத்துவம் மூலம் நிதித்துறைகளை மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டத்தினால் ஒத்துழைக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்திற்கு ஏற்ப கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அரசிறை இலக்குகளை அடைவதில் அரசாங்கம் முழுமையாக உறுதிபூண்டுள்ளது. அவற்றுள், 2022 யூன் 1 ஆம் திகதியன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்ட விரிவான வருமான மேம்பாட்டு மறுசீரமைப்புக்களின் உதவியுடன், 2025 ஆம் ஆண்டுக்குள்ளும் அதற்குப் பின்னரும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீதத்திற்கும் மேலாக ஆரம்ப மிகையை அடைதல் முக்கிய அரசிறை இலக்குகளில் ஒன்றாகும். இந்த இலக்கை அடைய, அரசாங்க வருமானம் மானியங்கள் உள்ளடங்களாக 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.1 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.1 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.0 சதவீதமாகவும் விரிவுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர காலத்தில் அரசாங்க செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் மூலம் வரவுசெலவு திட்டப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.7 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.6 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.3 சதவீதமாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பொருளாதாரத்தின் பெரும்பாலான துறைகளில் மீட்சிக்கான ஆரம்ப அறிகுறி களை வெளிப்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும், அரசிறை இடத்திலுள்ள உள்ளார்ந்த ஆழமான கட்டமைப்பு சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, பேண்தகுநிலை உருவாக்க மேலதிக நடவடிக்கைகள் அவசியமாகும். வருமான மேம்பாட்டு நடவடிக்கைகளில், வரி நிருவாகத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, வரி அடிப்படையை விரிவுபடுத்தல் மற்றும், தேவையான நிறுவன மறுசீரமைப்புக்கள் மூலம் அமுலாக்கத்தை மேம்படுத்தல் ஆகியவை வருவாய் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கு மிக முக்கியமானதாகும். மேலும், அரசிறைப் பேண்தகுநிலையை மீட்டெடுப்பதற்கும், அரசிறை ஒழுக்கத்தை வலுப்படுத்துவதற்கும், பொதுப் படுகடனின் பேண்தகுநிலையை மீட்டெடுக்க இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பிற்கும் செலவு-பிரதிபலிப்பு எரிசக்தி விலை நிர்ணயத்தினை தொடர வேண்டியது அவசியம். 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருவாயில் 82.0 சதவீதத்தினை வட்டிச் செலவினம் உட்கொண்டதால், தற்போது சம்பளம் மற்றும் படிகள், ஓய்வூதியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகள் போன்ற கட்டாயக் கொடுப்பனவுகளை நிறைவேற்றுவது சவாலாக உள்ளமை, அரசாங்கத்தின் அரசிறை இடத்தினை மிகவும் கட்டுப்படுத்தியுள்ளது. எனவே, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் அதிக பொது முதலீடுகளை செயற்படுத்த, நடுத்தர காலத்தில் பொருளார்ந்த அரசிறை இடத்தினை விரிவுபடுத்த வேண்டும். நிலையான உயர்தர பொது முதலீடு நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு முக்கியமானதாக இருக்கும். இது அரசிறை மற்றும் படுகடன் பேண்தகுநிலை ஆகிய இரண்டிற்கும் இன்றியமையாத அங்கமாகும்.

### 1.2.1 அரசிறை மூலோபாயம்

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடனான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட அரசிறை இலக்குகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை மூலோபாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, தேவையான நிறுவன மறுசீரமைப்புக்களுடன் வருவாய் அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு இலக்குகளை அடைவதற்கும், அரசாங்கம் உறுதியாக உள்ளது. இந்த இலட்சிய வருமான ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு, மேம்பட்ட ஆளுகை மற்றும் ஊழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுடன், சமூகப் பாதுகாப்பு வலைத் திட்டங்களை வலுப்படுத்துதல், விலை ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்தல், நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், சர்வதேச ஒதுக்குகளை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் விரிவான கட்டமைப்புச் சீரமைப்புக்கள் மூலம் இலங்கையின் வளர்ச்சித் திறனை வெளிப்படுத்துதல் ஆகியவை துணைபுரிகின்றன.

வெளிநாட்டுக் கடனை மீள்கட்டமைப்பு செய்வதற்கான உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடனும் வர்த்தகக் கடன் வழங்குநர்களுடனும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளை நடாத்துவதன் ஊடாக, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக் கொள்ளப்பட்ட படுகடன் பேண்தகுநிலை இலக்குகள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் திட்டத்தின் முக்கிய கூறுகள் நிதி முறைமையின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் அதே வேளையில், சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த கடன் குறைப்பு இலக்குகளுடன் ஒத்துப்போகும் வகையில் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட விரிவான பொருளாதார மறுசீமைப்புப் தொகுப்பினை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. மேலும் நிகழ்ச்சித்திட்ட அளவுருக்களின் அரசிறை இலக்குகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயம் வரைவுசெய்யப்பட்டுள்ளது.

2023-2028 ஆண்டிற்கான அரசிறை நிலைதகு நிலையை மீட்டெடுப்பதற்கான அரசிறை மார்க்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**அரசிறை மார்க்கம்:**

- முக்கிய வரிகளை மையமாகக் கொண்டு அடிப்படை விரிவாக்கத்திற்கான வலுவான வருவாயை மேம்படுத்தும் முயற்சிகள், வரி முறைமையை இலகுபடுத்துதல், எண்மிய மயமாக்கல் ஊடாக வரி நிருவாகம் மற்றும் இணக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் வரி ஏய்ப்பு மற்றும் தவிர்ப்பு ஆகியவற்றைக் குறைத்தல் ஆகியவற்றினைக் கொண்டு 2025 ஆம் ஆண்டிலும் மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத ஆரம்ப மிகையை அடைதல்.

- 2025 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு அப்பால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 15 சதவீதத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி வருவாயை அதிகரித்தல், இலக்கு வருவாய் திரட்டலைத் தொடர்ந்து தற்போதுள்ள வருமான நடவடிக்கைகளின் மூலம், ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட வருவாயை மேம்படுத்தும் முயற்சிகளை நிறைவு செய்ய மேலதிக முற்போக்கான வருமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்.

- வரி இணக்கத்தை வலுப்படுத்த வருமான நிருவாக சீரமைப்புக்கள் எண்மிய மயமாக்கல், நிறுவன சீர்திருத்தங்கள், மேம்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான கணக்காய்வு, மூன்று முக்கிய வருமான சேகரிப்பு நிறுவனங்களுக்கான முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அறிமுகம் மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்காக நான்கு முன்னுரிமை மறுசீரமைப்புப் பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன: அவை (i) பெரிய வரி செலுத்துவோர் இணக்கம், விரிவாக்கப்பட்ட வரி அடிப்படை மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருமானம் மற்றும் வரி இணக்கத்தை அதிகரித்தல் (ii) ஊழல் பாதிப்புகளை நிவர்த்தி செய்தல் (iii) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிலையான நவீனமயமாக்கல் மற்றும் (iv) திறனான முகாமை மற்றும் நிருவாகம்.

- வரி தளத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும், வரி செலுத்தாதவர்களை வரி முறைமையில் இணைத்துக்கொள்ளவும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தனியாட்களையும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவுசெய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டின் தொழில் வல்லுநர்களை மையமாகக் கொண்டு வரி செலுத்தாதவர்களுக்கான வரிக் கோப்புகளைத் திறக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

- கணக்காய்வு, வரி அறிக்கை தாக்கல், சேகரிக்கக்கூடிய வரிகளை திரும்பப் பெறுதல் மற்றும் பதிவு செய்வதில் கவனம் செலுத்தும் 7 முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- அனைத்து வரி சேகரிப்புக்களின் செயல்முறையும் வருமான நிருவாக முகாமைத்துவ முறைமை மூலம் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை ஊடாக மேலும் மேம்படுத்தப்படும்.

- அரசாங்க செலவினங்களைக் கண்காணித்தல், கட்டுப்படுத்துதல், ஒழுங்கமைத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல் மூலம் அரசாங்க செலவினங்களை முகாமை செய்தல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 16 சதவீதத்தில் மீண்டெழும் செலவினங்களைப் பராமரித்தல். ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் முழுமையான வெளிப்பாட்டின் மூலம் மேம்படுத்தப்பட்ட அர்ப்பணிப்புக் கட்டுப்பாடுகள் செலவின ஒழுக்கத்திற்கு மையமாக இருக்கும்.

- அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அரசிறை இடத்தை அதிகரிப்பதற்காக செலவினங்களின் தரத்தை மேம்படுத்தி அதன் மூலம் 2024

ஆம் ஆண்டும் அதற்குப் பிறகும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதத்திற்கு மேலாக அரசாங்க முதலீட்டினை படிப்படியாக அதிகரித்துப் பராமரித்தல்.

- 2026 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சத வீதத்திற்குக் குறைவாக வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை படிப்படியாகக் கட்டுப் படுத்துதல். குறுகிய கால நிதிக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தடையில்லா கடன் சேவை, சம்பளம் மற்றும் ஓய்வூதியம் போன்ற கட்டாயச் செலவினங்களை உரிய நேரத்தில் சரிசெய்தல், நிலுவைத் தொகைகள் குவிவதைத் தவிர்த்தல் போன்றவற்றில் திறைசேரி காசு நிருவாகத்தில் அதிகூடிய விடாமுயற்சி காணப்படும்.

- 2018 ஆம் ஆண்டின் எரிபொருள் விலை சூத்திரத்தால் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்த சில்லறை எரிபொருள் விலை சரிசெய்தல் உள்ளடங்கலாக தன்னியக்க எரிபொருள் மற்றும் மின்சார விலை நிர்ணய பொறிமுறையை தொடர்ந்து நடைமுறைப்படுத்துதல். எரிசக்தி தொடர்பான அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதி நம்பகத்தன்மை, போட்டித் திறன் மற்றும் நிருவாகம் ஆகியவற்றினை வலுப்படுத்த வழக்கமான செலவு-மீட்பு அடிப் படையிலான மின்சார விலை சரிசெய்தலை நடைமுறைப்படுத்துதல்.

- மேலும், சிறந்த நிதி நிலையை உறுதி செய்வதற்கும், மேம்பட்ட ஆளுகையுடன் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் முக்கிய அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மறுசீரமைப்புக்களின் தொடர்ச்சி. இதில் அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் தொழில்முறை தலைமையை உறுதி செய்வதற் கான நடவடிக்கைகள், கொள்முதல், கடன் வாங்குதல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட ஒழுக்கங்கள் மற்றும் அரசுடைமைத் தொழில்முயற்சிகளுக்கு அரசாங்க உத்தரவாதங்களை வழங்குவதில் கடுமையான வரம்புகள் ஆகியவை உள்ளடங்கும்.

- சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை இலக்காகக் கொண்டு பாதுகாப்ப தற்காக சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்த அதிக நிதி திரட்டுதல் மற்றும் வழிசெலுத்துதல். சமூகப் பாதுகாப்பு வலைத் திட்டத்திற்கான நிறுவன பொறிமுறையானது பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான புறநிலை அளவுகோல் மற்றும் வலுவான குறைகளைக் கையாளும் பொறிமுறையுயொன்றுடன் வலுப்படுத்தப்படும்.

- துல்லியமான மதிப்பீடு, வெளிப்படைத்தன்மை மற்றும் வரவுசெலவுத் திட்டத்தைச் செயற்படுத்துவதை விடாமுயற்சியுடன் கண்காணிப்பதை உறுதி செய்யும் அதே வேளையில் நடுத்தர கால வேலைச் சட்டகத்திற்கிணங்க வருடாந்த வரவு செலவுத் திட்டங்களை தயாரிப்பதன் மூலம் வரவுசெலவுத் திட்ட ஒழுக்கத்தை மேம்படுத்துதல்.

- படுகடன் மறுசீரமைப்பின் முடிவைத் தொடர்ந்து, அரச படுகடனை கவனமாக நிருவாகம் செய்வதன் மூலம் அரச கடன் நிலையான பாதையில் இருப்பதை உறுதி செய்தல். உத்தேச அரச கடன் முகாமை அலுவலகமானது, தொழில்முறை கடன் நிருவாகத்தை பொருத்தமான இடர் குறைப்பு கட்டமைப்புகளுடன் உறுதி செய்வதற்கான நிறுவன ரீதியான சட்டகத்தினை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயமானது, வரிக் கொள்கை மறுசீரமைப்புக்கள், நிறுவன பலவீனங்களை நிவர்த்தி செய்யும் வரி நிருவாக சீர்திருத்தங்கள், வரி இணக்கச் சீரமைப்புக்கள் மற்றும் செலவின முகாமைத்துவத்தில் சீர்திருத்தங்கள் உள்ளடங்கலாக முழுமையான வருமான மேம்பாட்டு சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. இவ்வரசிறை மூலோபாயமானது வர்த்தகம் செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளில் முதலீடுகளுக்கு நிதியளிப்பதற்குப் போதுமான மூலவளங்களை உருவாக்குவதற்காக நுகர்வு மற்றும் சேமிப்பிற்கு இடையே பொருத்தமான சமநிலையுடன் கூடிய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு உதவ வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி, மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு உட்பட கடனை உருவாக்காத வரவுகளை எளிதாக்குவதற்கு ஒரு நிலையான பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு முக்கியமானதாகும். வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கான பிராந்திய மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளில் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளுடனான அதிக ஈடுபாட்டின் மூலம் இத்தகைய நடவடிக்கைகள் மேலும் எளிதாக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட வருமான இலக்குகளை அடைவதில் மேம்படுத்தப்பட்ட வருமான நிருவாகம் மற்றும் இணக்கம் முக்கிய பங்கு வகிக்கும். வரி இணக்கம், இடர் அடிப்படையிலான வரி கணக்காய்வுகள், ஊழல் பாதிப்புகளை அகற்றுவதற்கான நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் இணக்கத்தை மேம்படுத்துவதற்கும் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும் முறைமைகளையும் செயன்முறைகளையும் எண்மிய மயமாக்குதல் ஆகியவற்றில் வருமான நிருவாக மறுசீரமைப்புக்கள் கவனம் செலுத்தும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை, இலங்கை சுங்கத்தில் உத்தேச ஒற்றைச் சாளர முறைமை, மதுவரி திணைக்களத்தில் வருமான நிருவாக முறைமை மற்றும் திறைசேரியில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை போன்ற பல்வேறு எண்மிய மயப்படுத்தல் தளங்கள் வலுப்படுத்தப்படும்.

வரவிருக்கும் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அரச நிதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு சட்டமியற்றும் சக்தி அளிக்கப்படும். புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் மூலம், அரசிறை விதிகள் வேலைச்சட்டகம், வரவுசெலவுத் திட்ட உருவாக்கம் மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்த விதிகள், வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு, மற்றும் அரசு கொள்முதல் மீதான ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதன் மூலம் அரசிறை ஒழுக்கம் பலப்படுத்தப்படும். புதிய படுகடன் முகாமைச் சட்டத்தின் சட்டவாக்கம் மற்றும்

சுயாதீன அரச கடன் முகாமை அலுவலகத்தின் நிறுவல் ஆகியவற்றின் ஊடாக அரச படுகடன் முகாமை மேம்படுத்தப்படும். பணவீக்க இலக்கு மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டத்திற்கான சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பை நிறுவும் புதிய மத்திய வங்கிச் சட்டம் ஏற்கனவே பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஐந்தொகைகளை மறுசீரமைத்தல், நிதி அமைச்சின் கீழ் உள்ள தலைமையின் அரசுடைமைத் தொழில்முயற்சி மறுகட்டமைப்பு அலகு ஒன்றினால் வழிநடாத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட அரசுடைமைத் தொழில்முயற்சிளின் மறுகட்டமைப்பு (வேறுபிரிப்பு உட்பட) உள்ளடங்கலாக சீரமைப்புக்களின் மூலம் அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் ஆளுகை பலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும். வெளிநாட்டுக் கடன்வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை முடிப்பதன் மூலமும், படுகடன் முகாமையின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலமும் அரச படுகடன் பேண்தகு மட்டத்திற்குக் கொண்டுவரப்படும்.

### 1.2.2 நடுத்தர கால பேரின அரசிறை வேலைச் சட்டகம்

2023 - இடைக்கால வரவுசெலவுத்துடன் வழங்கப்பட்ட நடுத்தர கால பேரின அரசிறை வேலைச்சட்டகம் தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள் காரணமாகத் திருத்தப்பட்டுள்ளது. நடுத்தர கால பேரின அரசிறை வேலைச்சட்டகத்திற்கேற்ப, 2023-2028 காலப்பகுதிக்கான அரசாங்கத்தின் முன்னுரிமைகள் வருமாறு;

- 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கு வருவாயை 15 சதவீதமாக உயர்த்தி அதன் பின்னர் குறைந்தபட்சம் இந்த மட்டத்தில் அல்லது அதனை விட அதிக மட்டத்தில் பராமரித்தல்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதத்திற்குள் செலவினங்களை முகாமை செய்தல், சுகாதாரம், கல்வி, பொதுப் போக்குவரத்து மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட முன்னுரிமைப் பகுதிகளுக்கு உரிய முறையில் செலவினங்கள் ஒதுக்கப்படுவதை உறுதி செய்தல்.
- வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை 2026 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கும் குறைந்தளவில் கட்டுப்படுத்துதல்.
- 2025 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் குறைந்தபட்சம் 2.3 சதவீத ஆரம்ப மிகையை அடைதல்.
- சர்வதேச நாணய நிதியம் - நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகளுக்கு ஏற்ப மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதாசாரத்தில் மத்திய அரசின் கடன் விகிதம், மொத்த நிதித் தேவைகள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் சேவை ஆகியவற்றை பேண்தகு மட்டத்திற்குக் குறைத்தல்.

நடுத்தர கால அரசிறைப் பாதையினைக் கைக்கொள்ளுதல், பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களின் முன்னேற்றத்தைச் சார்ந்துள்ளது. அரசிறைத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சில சீரமைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையிலுள்ளன. மேலும் நடைமுறைப்படுத்தப்பட்ட சில சீரமைப்புக்களின் முழு தாக்கம் இன்னும் அடையப்படவில்லை. ஏற்கனவே நடைமுறையிலுள்ள பொருளாதார உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் ஊடாக நம்பகத்தன்மை அதிகரிக்கும் அதேவேளை, படுகடன் மறுசீரமைப்பின் முடிவைத் தொடர்ந்து இருதரப்பு மற்றும் பலதரப்பு வளர்ச்சிப் பங்காளிகளிடமிருந்து நிதியுதவியை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசிறை, நாணய, வெளித்துறை மற்றும் நிதித் துறைகளில் கட்டமைப்பு ரீதியான சரிசெய்தல்களைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம், கடனை உருவாக்காத வரவுகளுடன் குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும்.

**அட்டவணை 1.1 : நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டகம் – 2023 இலிருந்து 2028 வரை (மொ.உ.உ. சதவீதத்தில்)**

| குறிகாட்டி | உண்மையான 2022 | திருத்தப்பட்ட மதிப்பீடு 2023 | மதிப்பீடு 2024 | எதிர்வு கூறல்கள் 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|---|
| **மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்** | **8.3** | **10.1** | **13.1** | **15.0** | **15.0** | **15.1** | **15.2** |
| மொத்த வருமானம் | 8.2 | 10.1 | 13.0 | 14.9 | 15.0 | 15.1 | 15.2 |
| வரி வருமானம் | 7.3 | 9.2 | 12.1 | 14.0 | 14.0 | 14.1 | 14.2 |
| வரியல்லா வருமானம் | 0.9 | 0.9 | 0.9 | 0.9 | 0.9 | 1.0 | 1.0 |
| **மானியங்கள்** | **0.14** | **0.04** | **0.06** | **0.04** | **0.04** | **0.04** | **0.04** |
| **மொத்த செலவினம்** | **18.5** | **18.9** | **20.7** | **20.3** | **19.7** | **19.3** | **19.4** |
| மீண்டெழும் செலவினம் | 14.6 | 16.0 | 16.8 | 15.9 | 15.4 | 14.9 | 14.9 |
| வட்டிக் கொடுப்பனவு | 6.5 | 8.0 | 8.4 | 7.6 | 7.0 | 6.5 | 6.5 |
| மூலதன செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள் | 3.9 | 2.9 | 4.0 | 4.4 | 4.4 | 4.4 | 4.5 |
| **நடைமுறைக்கணக்கு மிகை (+)/ பற்றக்குறை (-)** | **(6.4)** | **(5.9)** | **(3.7)** | **(0.9)** | **(0.4)** | **0.2** | **0.3** |
| **முதன்மைக்கணக்கு மிகை (+)/ பற்றக்குறை (-)** | **(3.7)** | **(0.7)** | **0.8** | **2.3** | **2.3** | **2.3** | **2.3** |
| **வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை மிகை (+)/பற்றக்குறை (-)** | **(10.2)** | **(8.7)** | **(7.6)** | **(5.3)** | **(4.7)** | **(4.2)** | **(4.2)** |

*மூலம் : அரசிறை கொள்கைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்ட அளப்புருக்கள்*

# பகுதி - II

**வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2024**

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் வெளியிடப்பட்டது.**

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் வெளியிடப்பட்டது. இது அரசிறை உபாய கூற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன், பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சமர்ப்பிக்கப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், கொடுப்பனவு மீதி, வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளுக்கான அடிப்படை ஊகங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இதற்கமைவாக, இவ்வறிக்கையானது அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் 2023 இன் முதல் ஒன்பது (9) மாதங்களில் பெறுகைகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கியுள்ளதுடன், இக்காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை தொழிற்பாடுகளுக்குள் முழு மொத்த பொருளாதார நிலைமையினை விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பிரதான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை வழங்குகிறது. மேலும் இவ்வறிக்கை பொருளாதாரம் மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிற ஊகங்கள் பற்றிய அடிப்படை தகவல்களை வழங்குவதுடன், இந்த ஊகங்களுடன் தொடர்பான பின்னோக்கிய இடர்வுகளும் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்களவு தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடிய பிற தகவல்களையும் கொண்டுள்ளது.

# அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு | 01

## 1.1 மேன்நோக்கு

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் அமைக்கப்பட்ட ஆரம்ப வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை இலக்காகிய ரூபா 160.0 பில்லியன் தொகையானது ரூபா 123.8 பில்லியன் ஆரம்ப மிகையாகப் பரிமாற்றமடைந்தது. 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் நன்கு முகாமைசெய்யப்பட்ட அரசாங்கச் செலவினங்களுடன் இணைந்து, வரிசைப்படுத்தப்பட்ட வருமான நடவடிக்கைகளின் தொகுப்பினை, தொடர்ந்து நடைமுறைப்படுத்தியமையே இதற்குக் காரணமாகும்.

மானியங்கள் உட்பட அரசாங்கத்தின் மொத்த வருமானத்தினைப் பொறுத்தவரை, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 2,118.8 பில்லியனினைப் பதிவுசெய்து, 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 1,450.4 பில்லியனிலிருந்து 46.1 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி வருமானம் 50.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,934.0 பில்லியனாகவும், வரி அல்லாத வருமானம் 6.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 176.5 பில்லியனாகவும் காணப்பட்டது. வருடாந்த மதிப்பீடாகிய ரூபா 3,415.0 பில்லியனுக்கு எதிராக மானியங்கள் உட்பட மொத்த அரசாங்க வருமானத்தின் தேறல் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 62.0 சதவீதமாக இருந்தது.

தனியாள் வருமான வரி கட்டமைப்பின் திருத்தம், நிறுவன வருமான வரி வீதத்தின் அதிகரிப்பு மற்றும் துறை சார்ந்த நிறுவன வருமான வரிச் சலுகை வீதங்கள் மற்றும் வரி விலக்குகளை நீக்குதல், கட்டாய முற்பண தனியாள் வருமான வரியையும் பிடித்துவைத்தல் வரியையும் மீண்டும் அறிமுகப்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர் வரி வீதங்களின் அதிகரிப்பு உள்ளடங்கலாக வரிக் கொள்கை நடவடிக்கைகள் இந்த வருமான உயர்விற்குப் பங்களித்துள்ளன.

இருப்பினும், முதல் மூன்று காலாண்டுகளில் வரி வருமானத்தின் சேகரிப்பு சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விடக் குறைவாக இருந்தது. தொடரப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள், பலவீனமான வரி நிருவாகம் மற்றும் பேரண்டப் பொருளாதார மாறிகளில் எதிர்பாராத மாற்றங்கள் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட, இறக்குமதி அடிப்படையிலான வரிகளின் குறைவான செயலாற்றுகையே இதற்கான முக்கிய காரணமாகும். எனவே, வரி இணக்கத்தை அதிகரிக்கவும், வரி ஏய்ப்பு மற்றும் தவிர்ப்பைத் தணிக்கவும், மூன்று வருமான சேகரிப்பு நிறுவனங்களில் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதில் அதிக முக்கியத்துவமளித்து, வருமானத்தினை மீட்டெடுப்பதற்காக மேலதிக வருமான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2023 - வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரி திணைக்களம் ஆகியவற்றில் தொழில்நுட்பம், ஒழுங்குவிதிகள், செயன்முறை மேம்பாடுகள் மற்றும் மனித வளங்களில் முதலீடு ஆகியவற்றின் மேம்பாடுகள் மூலம் வரி நிருவாக நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, 18 வயதிற்கு மேற்பட்ட தனியாட்கள் அனைவருக்கும் வரிக் கோப்பைத் திறக்கும் கொள்கையுடன், தொழில் வல்லுனர்களை மையமாகக் கொண்டு, வரி செலுத்தாதவர்களை வரி முறைக்குக் கொண்டுவருவதன் மூலம் வரி அடிப்படையை விரிவுபடுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பெரிய வரி செலுத்துவோர் பிரிவு மற்றும் புதிதாக தாபிக்கப்பட்ட உயர் தேறிய பெறுமதியுள்ள தனியாட்கள் பிரிவை வலுப்படுத்துவதன் மூலம் அமுலாக்கல் மேலும் மேம்படுத்தப்படும். வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை - 2.0 மேம்படுத்தப்பட்டதன் மூலம், பெரிய/செல்வந்த வரி செலுத்துவோரின் வரி தாக்கல், மற்றும் மதிப்பீட்டின் தற்போதைய காலகட்டத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது. இனிமேல், அனைத்து வரி சேகரிப்புக்களின் செயலாக்கமும் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை ஊடாக மாத்திரமே செயற்படுத்தப்படும். மேலும், தனியாள் வரி அடையாள இலக்கத்திற்கான பதிவு மற்றும் தனியாள் வருமான வரி ஆகியவற்றுக்கான நிகழ்நிலைத் தளம் இலகுபடுத்தப்படும். மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணக்காய்வு-செயற்திறனை மேம்படுத்துதல், வரி அறிக்கை தாக்கல் செய்தல், சேகரிக்கக்கூடிய வருமானத்தினை மீட்டெடுத்தல் மற்றும் பதிவுசெய்தலை அதிகரித்தல் ஆகியவற்றில் முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்படும்.

அட்டவணை 1.1 | அரசிறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்

ரூபா மில்லியன்

| விபரம் | சன - செப் | |
|---|---|---|
| | 2022 | 2023[அ] |
| **வருமானமும் மானியங்களும்** | **1,450,381** | **2,118,755** |
| **வருமானம்** | **1,448,482** | **2,110,487** |
| வரி | 1,283,368 | 1,933,980 |
| வரி அல்லாத | 165,114 | 176,507 |
| **மானியங்கள்** | **1,899** | **8,269** |
| **செலவினம்** | **2,694,788** | **3,732,331** |
| **நடைமுறை** | **2,300,171** | **3,327,685** |
| சம்பளங்கள் | 714,280 | 696,995 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 927,366 | 1,737,338 |
| பிற | 658,525 | 893,351 |
| **அரசாங்க முதலீடுகள்** | **417,527** | **442,906** |
| **பிற** | **-22,910** | **-38,260** |
| **வருமான பற்றாக்குறை(-)/மிகை (+)** | **-851,689** | **-1,217,198** |
| **மொத்த வரவுசெலவுதிட்ட பற்றாக்குறை (-)/ மிகை (+)** | **-1,244,407** | **-1,613,576** |
| **நிதியளிப்பு** | **1,244,407** | **1,613,576** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | -59,125 | 96,745 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 1,303,531 | 1,516,831 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் ரூபா 3,732.3 பில்லியனாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 2,694.8 பில்லியனினை விட 38.5 சதவீத அதிகரிப்பாகும். மீண்டெழும் செலவினத்தைப் பொறுத்தவரை 44.7 சதவீதம் அதிகரித்து ரூபா 3,327.7 பில்லியனினையும், அதே சமயம் மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன் வழங்குதல் ஆகியவை 2.5 சதவீதம் அதிகரித்து ரூபா 404.6 பில்லியனினையும் கொண்டிருந்தன. வட்டிச் செலவினத்திற்காக மாத்திரம் அரசாங்க வரி வருமானத்தில் 89.8 சதவீதத்திற்கும் அதிகமாக உறிஞ்சப்படுவதால் செலவினங்களை முகாமைத்துவம் செய்வது சவாலாகவே உள்ளது.

முக்கியமாக வட்டி கொடுப்பனவுகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மற்றும் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் ஆகியவற்றின் மீதான அதிகரித்த செலவினங்களின் காரணமாக மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்திருந்தன. 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், வட்டி கொடுப்பனவுகள் ரூபா 1,737.3 பில்லியன் வரை 87.3 சதவீதத்தினால் உயர்ந்துள்ளது. மொத்த உள்நாட்டுக் கடனில் சுமார் 95 சதவீதமாகவிருந்த திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளைக் கொண்ட அரசாங்கப் பிணையங்கள் மீதான அதிக வட்டி விகிதங்கள் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல் 101.6 சதவீதம் அதிகரித்து ரூபா 1,652.1 பில்லியனினை அடைந்துள்ளது. அதே சமயம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி கொடுப்பனவு 21.0 சதவீதத்தால் சரிந்து ரூபா 85.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. எரிபொருள், மின்சாரம் மற்றும் இதர பொருட்களின் விலை அதிகரிப்புடன் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினமானது ரூபா 208.7 பில்லியன் வரை 76.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கிடையில், முக்கியமாக சமூகப் பாதுகாப்புவலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மானியங்கள் மற்றும் மாற்றல்களுக்கான செலவினம் ரூபா 684.6 பில்லியன் வரை 26.7 சதவீதம் அதிகரித்தது. இருப்பினும், அரச துறைக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டதன் விளைவாகவும், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நாட்டிற்குள் அல்லது வெளியே செலவிடும் விடுமுறையை வழங்குவதற்கான அரசாங்கத்தின் முடிவின் விளைவாகவும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவு 2.4 சதவீதம் குறைந்து ரூபா 697.0 பில்லியனினைக் கொண்டிருந்தது. கட்டாய ஓய்வு வயதை அறுபது ஆண்டுகளாகத் திருத்தியதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஓய்வூதியத்திற்கான செலவினம் ரூபா 264.0 பில்லியன் வரை 15.5 சதவீதம் அதிகரித்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பொது முதலீடானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீதம் அதிகரித்து ரூபா 442.9 பில்லியனாகக் காணப்பட்டது. இருப்பினும், அரசாங்க முதலீடுகள், முக்கியமாக வெளிநாட்டு கருத்திட்ட நிதியளிப்பின் பற்றாக்குறை காரணமாக வருடாந்த மதிப்பீட்டில் 36.3 சதவீதத்தை மட்டுமே எட்டியுள்ளன.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1,244.4 பில்லியனாகக் காணப்பட்ட வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையானது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் ரூபா 1,613.6 பில்லியனால் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 810.0 பில்லியன் வரை கிட்டத்தட்ட இரு மடங்காக வட்டிச் செலவுகள் அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். இருப்பினும், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 317.0 பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஆரம்ப வரவுசெலவுத் திட்ட மீதி, ரூபா 123.8 பில்லியன் மிகையாக மேம்பாடடைந்துள்ளது. எனவே, அரசாங்கமானது 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் ரூபா 209.0 பில்லியன் ஆரம்ப மீதி பற்றாக்குறை இலக்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 1.2 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் – 2023**

ரூபா பில்லியன்

| விபரம் | வருடாந்த மதிப்பிடப் பட்ட | சன – செப் உண்மையான[அ] | அடைவு % |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **3,408.0** | **2,110.5** | **61.9** |
| **வரி வருமானம்** | **3,130.0** | **1,934.0** | **61.8** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | | |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 912.0 | 663.6 | 72.8 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய) | 553.0 | 351.6 | 63.6 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (உள்நாட்டு) | 0.0 | 0.04 | - |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (உள்நாட்டு) | 186.0 | 122.0 | 65.6 |
| **உப மொத்தம்** | **1,651.0** | **1,137.24** | **68.9** |
| **சுங்கத் திணைக்களம்** | | | |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய) | 355.0 | 153.4 | 43.2 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (உள்நாட்டு) | 0.0 | 0.2 | |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (உள்நாட்டு) | 64.0 | 36.4 | 56.9 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 220.0 | 123.6 | 56.2 |
| செஸ் அறவீடு | 85.0 | 39.5 | 46.5 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் பிற | 70.0 | 36.8 | 52.5 |
| இறக்குமதித் தீர்வை | 80.0 | 66.1 | 82.6 |
| **உற்பத்தி விசேட ஏற்பாடுகள்** | | | |
| சிகரெட்டுகள் | 140.0 | 90.0 | 64.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 142.0 | 72.3 | 50.9 |
| மோட்டார் வாகன வரிகள் மற்றும் ஏனையவை | 64.0 | 24.6 | 38.4 |
| **உப மொத்தம்** | **1,220.0** | **642.9** | **52.7** |
| **மதுவரித் திணைக்களம்** | | | |
| மதுபானம் | 214.0 | 124.0 | 58.0 |
| **உப மொத்தம்** | **214.0** | **124.0** | **58.0** |
| **ஏனையவை** | | | |
| தொலைதொடர்பு அறவீடு | 20.0 | 13.8 | 69.1 |
| உரிமப் பத்திர வரி மற்றும் பிற | 25.0 | 16.1 | 64.3 |
| **உப மொத்தம்** | **45.0** | **29.9** | **66.4** |
| **வரி அல்லாத வருமானம்** | **278.0** | **176.5** | **63.5** |
| **மொத்த செலவினம்** | **5,819.0** | **3,732.3** | **64.1** |
| **நடைமுறைச் செலவினம்** | **4,609.0** | **3,327.7** | **72.2** |
| சம்பளங்களும் படிகளும் | 1,002.0 | 697.0 | 69.6 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 2,193.0 | 1,737.3 | 79.2 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 376.0 | 264.0 | 70.2 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 738.0 | 420.6 | 57.0 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் | 300.0 | 208.7 | 69.6 |
| **மூலதன செலவினம் தேறிய கடன் வழங்கலும்** | **1,210.0** | **404.6** | **33.4** |

*மூலங்கள் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

### 1.2 அரசாங்க வருமானம்

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த அரசாங்க வருமானமானது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,448.5 பில்லியனிலிருந்து 45.7 சதவீதம் அதிகரித்து ரூபா 2,110.5 பில்லியனாக இருந்ததுடன், அத்தொகை 2023 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீட்டில் 61.9 சதவீதமாகும்.

வரி வருமானத்தினைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1,283.4 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 50.7 சதவீதம் அதிகரித்து ரூபா 1,934.0 பில்லியனினைப் பதிவுசெய்தது. வரி வருமான சேகரிப்பானது மொத்த வருமானத்தில் 91.6 சதவீதத்தினைப் பங்களித்ததுடன், 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் 61.8 சதவீதத்தினை எட்டியுள்ளது.

வரைபு 1.1 : மொத்த வருமானத்தின் வகுதிகள் (2023 சனவரி - செப்தெம்பர்)




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமான வரி மூலம் கிடைத்த வருவாய் ரூபா 663.6 பில்லியன் ஆகும். இது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் ரூபா 431.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 53.7 சதவீத அதிகரிப்பாகும். இவ் மேம்பாடு நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அதிகரித்த வருவாயைப் பிரதிபலிக்கிறது. வருமான வரிக்கு முக்கிய பங்களிப்பினை வழங்கும் நிறுவன வரி மூலம் சேகரிக்கப்படும் வருமானமானது, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2022 ஆம் ஆண்டின் இதே காலத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 382.2 பில்லியனிலிருந்து 8.7 சதவீதம் அதிகரித்து ரூபா 415.6 பில்லியனினை அடையப்பெற்றுள்ளது. வரியற்ற வரம்பெல்லையின் குறைப்பு மற்றும் வரி அடிப்படையை விரிவுபடுத்தல் ஆகியவற்றின் பயனாக, உழைக்கும்போது செலுத்தும் வரி /முற்பண தனியாள் வருமான வரி மற்றும் தனியாள் வருமான வரி ஆகியவற்றை உள்ளடக்கிய, நிறுவனமல்லாத வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 291.7 சதவீதம் அதிகரித்து ரூபா 137.4 பில்லியனினை அடையப்பெற்றது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உழைக்கும்போது செலுத்தும் வரி/முற்பண வருமான வரி ஆகியவற்றின் வருமானம் 497.8 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ரூபா 107.0 பில்லியனினை அடையப்பெற்று, வருடாந்த மதிப்பீட்டில் 107.0 சதவீதத்தினை எட்டியுள்ளது. நிறுத்திவைத்தல் வரி/முற்பண வருமான வரி ஆகியவை கட்டாயமாக்கப்பட்டதன் பயனாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நிறுத்திவைத்தல் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 672.7 சதவீதம் அதிகரித்து ரூபா 110.4 பில்லியனினைப் பதிவுசெய்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமானத்தினைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 310.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 62.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 505.0 பில்லியனாகக் காணப்பட்டது. இதேபோல், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உற்பத்தி வரிகளின் வருமானம் ரூபா 310.9 பில்லியனாகக் காணப்பட்டதுடன், அத்தொகையானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 262.1 பில்லியனினை விட 18.6 சதவீத அதிகரிப்பாகும். சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு மொத்த வருமானத்திற்கு ரூபா 158.4 பில்லியன் பங்களிப்பு செய்துள்ளது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 254.0 பில்லியனிலிருந்து 4.7 சதவீதம் மிதமாக அதிகரித்து ரூபா 266.0 பில்லியனினை அடையப்பெற்றது.

வரி அல்லாத வருமானமானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 176.5 பில்லியன் வரை 6.9 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த வருமானத்தில் 8.4 சதவீதம் பங்களித்தது. இவ்வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 165.1 பில்லியன் ஆகும்.

வரைபு 1.2 : வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (2023 சனவரி - செப்தெம்பர் )




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**அட்டவணை 1.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா மில்.

| விபரம் | சன – செப் 2022 | சன – செப் 2023(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,283,368** | **1,933,980** | **50.7** |
| **வருமான வரி** | **431,795** | **663,586** | **53.7** |
| **உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி** | **405,914** | **690,731** | **70.2** |
| பெறுமதிசேர் வரி | 193,829 | 351,591 | 81.4 |
| உற்பத்தி வரி | 211,766 | 217,118 | 2.5 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | – | 121,982 | – |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 319 | 40 | -87.4 |
| **இறக்குமதி அடிப்படையிலான வரி** | **421,050** | **549,770** | **30.6** |
| இறக்குமதித் தீர்வை | 36,587 | 66,100 | 80.7 |
| பெறுமதிசேர் வரி | 116,686 | 153,420 | 31.5 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | – | 36,412 | – |
| தேசக் கட்டமைப்பு வரி | 23 | 171 | 638.9 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 135,434 | 123,625 | -8.7 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 29,232 | 36,783 | 25.8 |
| உற்பத்தி வரி | 50,337 | 93,738 | 86.2 |
| செஸ் | 52,751 | 39,521 | -25.1 |
| **உரிமப் பத்திர வரிகள் மற்றும் பிற** | **24,609** | **29,893** | **21.5** |
| **வரி அல்லாத வருமானம்** | **165,114** | **176,507** | **6.9** |
| **மொத்த வருமானம்** | **1,448,482** | **2,110,487** | **45.7** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

**வருமான வரி**

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமான வரி வருமானம் ரூபா 663.6 பில்லியனாக இருந்ததுடன், இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 431.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 53.7 சதவீத அதிகரிப்பாகவும் ஆண்டு மதிப்பீட்டில் 72.8 சதவீத அடைவாகவும் காணப்பட்டது. 2023, சனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும்வகையில் வருமான வரி கட்டமைப்பு திருத்தப்பட்டு பிடித்துவைத்தல் வரி/முற்பண வருமான வரி ஆகியவற்றை கட்டாயமாக்குதல் மற்றும் 2022, ஒக்தோபர் 01 முதல் நடைமுறைக்கு வருமாறு நிறுவன வருமான வரி விகிதத்தை 30 சதவீதமாக உயர்த்துதல் மற்றும் நிறுவன வருமான வரி விலக்குகளையும் சலுகைகளையும் நீக்குதல் உட்பட வரிக் கொள்கை சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை இதற்கான முக்கிய காரணங்களாகும்.

நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரிகளின் வருமானமானது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் ரூபா 399.4 பில்லியனினை விட 11.7 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 445.9 பில்லியனினைப் பதிவுசெய்தது. நிறுவன வருமான வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 415.6 பில்லியனாகவும் 2022 ஆம் ஆண்டின் இதே காலத்தின் ரூபா 382.2 பில்லியனிலிருந்து 8.7 சதவீதம் அதிகரித்தும் காணப்பட்டது. மேலும், முற்பண தனியாள் வருமான வரி வருவாய், 497.8 சதவீதத்தினால் அதிகரித்து 2023 முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 107.0 பில்லியனினைக் கொண்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 17.9 பில்லியனினைப் பதிவுசெய்திருந்தது. தனியாள் வருமான வரியற்ற வரம்பு ஆண்டொன்றிற்கு ரூபா 3.0 மில்லியனிலிருந்து ரூபா 1.2 மில்லியன் வரை குறைக்கப்பட்டமையும் வரி நிவாரணத்தைத் தாண்டும் ஒவ்வொரு ரூபா 500,000 இற்கும் 6 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரை வரி விகிதங்கள் திருத்தப்பட்டமையும், இதற்குப் பங்களிப்பு செலுத்தியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் முற்பண தனியாள் வருமான வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம், வருடாந்த மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 100.0 பில்லியனை ஏற்கனவே தாண்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 14.3 பில்லியனாகக் காணப்பட்ட பிடித்துவைத்தல் வரி/முற்பண வருமான வரி ஆகியவற்றின் வருமானம், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 672.7 சதவீதம் அதிகரித்து ரூபா 110.4 பில்லியனினைப் பதிவுசெய்தது. பிடித்துவைத்தல் வரி/முற்பண வருமான வரி ஆகியவற்றின் வருமான சேகரிப்பு ஆண்டுக்குரிய மதிப்பீடாகிய ரூபா 90.0 பில்லியனினை ஏற்கனவே தாண்டியுள்ளது. எவ்வாறாயினும், உழைக்கும்போது செலுத்தும் வரி/முற்பண தனியாள் வருமான வரி ஆகியவை தவிர தனிநபர் வருமான வரியின் வருவாய், வருமான மதிப்பீட்டில் 26.4 சதவீதமாகிய ரூபா 30.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. இது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான நிருவாகத்தினை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றமையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில், வருவாயைத் திரட்ட ஒருங்கிணைந்த முயற்சியொன்று தேவையாகும்.

அட்டவணை 1.4 | வருமான வரியின் செயலாற்றுகை

ரூபா.மில்

| வரி அடிப்படை | சன - செப் | | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| | 2022 | 2023(அ) | |
| கூட்டுறவு மற்றும் கூட்டுறவற்ற | 399,372 | 445,916 | 11.7 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 17,907 | 107,045 | 497.8 |
| வட்டி வருமானத்திற்கான வரி | 14,290 | 110,422 | 672.7 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 226 | 203 | -9.8 |
| **மொத்தம்** | **431,795** | **663,586** | **53.7** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

**பெறுமதி சேர் வரி**

பெறுமதி சேர் வரியின் ஊடாக அரசாங்கம் அடையப்பெற்ற வருமானமானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 505.0 பில்லியன் ஆகும். இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 310.5 பில்லியனினை விட 62.6 சதவீத அதிகரிப்பாகவும், 2023 ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர் வரி வருமானத்தின் மதிப்பீட்டில் 55.6 சதவீத தேறலாகவும் உள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதிகள் ஆகிய இரண்டினதும் பெறுமதி சேர் வரி வருமானம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டு நடவடிக்கைகளுக்கான பெறுமதி சேர் வரி விகிதமானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 193.8 பில்லியனினைவிட 81.4 சதவீதம் அதிகரித்து ரூபா 351.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. அதே சமயம் 2023 - முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதியிலிருந்து பெறப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா 153.4 பில்லியன் ஆகும். இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 116.7 பில்லியனினை விட 31.5 சதவீத அதிகரிப்பாகவிருந்தது.

முக்கியமாக விகித அதிகரிப்புகள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரிக்கு பதிவுசெய்வதற்கான வரம்பைக் குறைத்தல் ஆகியவற்றின் காரணமாக பெறுமதி சேர் வரி வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. பெறுமதி சேர் வரி விகிதமானது 2022, யூன் 01 முதல் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு, மீண்டும் 2022, செத்தெம்பர் 01 முதல் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. பெறுமதி சேர் வரிக்காக பதிவுசெய்யும் வரம்பும் 2022, ஒக்தோபர் 01 முதல் ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. இந்த வருமான நடவடிக்கைகளின் விளைவாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் ஒட்டுமொத்த வருமான செயலாற்றுகைக்கு 23.9 சதவீதத்தினை பெறுமதி சேர் வரி வருமானம் பங்களிப்பு செய்தது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெரும்பான்மையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதால், பெறுமதி சேர் வரியின் சீர்திருத்தங்களின் தாக்கங்கள் இறக்குமதியின் மீதான பெறுமதி சேர் வரி வருமான அதிகரிப்பில் முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. மேலும், பெறுமதி சேர் வரியிலிருந்து வருவாய் திரட்டலை அதிகரிக்கவும், பெறுமதி சேர் வரியின் செயற்திறனை அதிகரிக்கவும 2023, திசெம்பர் முதல் பெறுமதி சேர் வரி விலக்களிக்கப்பட்ட 137 பொருட்களில் 87 பொருட்களுக்கு பெறுமதி சேர் வரி விலக்குகளை நீக்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

அட்டவணை 1.5 | பெறுமதிசேர் வரியின் செயலாற்றகை

ரூபா மில்லியன்

| வரி அடிப்படை | சன - செப் | | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| | 2022 | 2023 (அ) | |
| உள்நாட்டு | 193,829 | 351,591 | 81.4 |
| இறக்குமதிகள் | 116,686 | 153,420 | 31.5 |
| **மொத்தம்** | **310,516** | **505,011** | **62.6** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

**உற்பத்தித் தீர்வை**

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 262.1 பில்லியனினை பதிவு செய்த உற்பத்தித் தீர்வையின் மொத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 18.6 சதவீதம் அதிகரித்து ரூபா 310.9 பில்லியனினைப் பதிவுசெய்தது. மதுபானங்கள் மற்றும் ஏனைய உற்பத்தித் தீர்வை விதிக்கத்தக்க பண்டங்களாகிய இனிப்புப் பானங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் போன்றவற்றின் வருமானம் சிறிதளவு குறைந்திருந்தாலும், முக்கியமாக பெற்றோலியப் பொருட்கள், சிகரெட்டுகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் வருமானம் அதிகரித்தமை இதற்குப் பங்களித்துள்ளது. இது வருடாந்த மதிப்பீட்டில் 55.5 சதவீதமாக இருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த வருவாயில் 14.7 சதவீத பங்களிப்பு உற்பத்தித் தீர்வை வருமானத்தின் மூலம் கிடைக்கப்பெற்றதாகவும் இருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தித் தீர்வை வருமானத்தினைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 36.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 97.1 சதவீதம் அதிகரித்து ரூபா 72.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து அரசாங்க திறைசேரிக்கு மாற்றப்பட்ட பொறுப்புகளுக்கு நிதியளிப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீத மேலதிக வருவாயை ஈட்டும்நோக்கில் 2023, சனவரி 01 முதல் லீற்றரொன்றிற்கு ரூபா 25 எனும் விதமாகவும் அதனைத் தொடர்ந்து இரண்டாவது தடவை 2023, யூன் 01 முதல் லீற்றரொன்றிற்கு ரூபா 25 எனும் விதத்தில், அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான உற்பத்தித் தீர்வை உயர்த்தப்பட்டமை இவ்வதிகரிப்பிற்கு வழிவகுத்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2,203.9 மில்லியன் குச்சிகளாக இருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 1,743.0 மில்லியன் குச்சிகளாகக் குறைவடைந்து சிகரெட் விற்பனை 20.9 சதவீதம் வீழ்ச்சியடைந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சிகரெட் மீதான உற்பத்தி வரி வருமானம் 8.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 90.0 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ்வருமானம் ரூபா 82.6 பில்லியனினைப் பதிவு செய்திருந்தது. முக்கியமாக 2023, சனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிகரெட் மீதான உற்பத்தி வரி 20 சதவீதத்தாலும் 2023, யூலை 01 முதல் மேலும் 20 சதவீதத்தாலும் உயர்த்தப்பட்டமை இதற்குக் காரணமாகும்.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் ரூபா 21.5 பில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 13.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ் 57.1 சதவீத அதிகரிப்பிற்கு, மின்சார வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பதன் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஊக்கங்களை வழங்குவதற்கான அரசாங்கத்தின் முடிவு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

இருப்பினும், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 124.6 பில்லியனாகக் காணப்பட்ட மதுபானங்கள் மீதான மது வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 0.4 சதவீதத்தினால் சற்றே குறைவடைந்து ரூபா 124.0 பில்லியனைக் கொண்டிருந்தது. வருமானத்தில் வீழ்ச்சியேற்பட்டிருப்பினும் மதுபானங்கள் மீதான மது வரியானது உற்பத்தித் தீர்வை வருமானத்தில் 39.9 சதவீத மிகப்பெரிய பங்களிப்பினைப் பதிவு செய்கிறது. மதுபானத்தின் மீதான மது வரி 2023, சனவரி 03 முதல் 20 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து 2023, யூலை 01 முதல் இரண்டாவது 20 சதவீத அதிகரிப்பு இடம்பெற்றது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மதுபானத்தின் மீதான வரி வருவாய் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 58.0 சதவீதமாக இருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மதுசார உற்பத்தி 13.4 சதவீதம் விழ்ச்சியடைந்து 27.0 மில்லியன் முழுச்செறிவுடைய லீற்றர்களாக இருந்த அதேசமயம் இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 31.2 மில்லியன் முழுச்செறிவுடைய லீற்றர்களாகக் காணப்பட்டது. மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த பொருட்களிலிருந்து வரி வருவாயை அதிகரிக்க வருமான நிருவாக நடவடிக்கையாக 2022, சனவரி 03 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமையானது உரிமம் பெற்ற உற்பத்தியாளர்களாலும் இறக்குமதியாளர்களாலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும், நாட்டின் பல பகுதிகளில் போலியான /கள்ளமான ஒட்டுத்துண்டுகள் கிடைக்கப் பெற்றமை எதிர்பார்க்கப்பட்ட வருவாயைப் பாதிக்கச் செய்தது. எனவே, மதுபானத்திலிருந்து உரிய வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள இப்பாதுகாப்பு முறைமையை கடுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

**அட்டவணை 1.6 | உற்பத்தி தீர்வையின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | சன – செப் | | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| | 2022 | 2023 (அ) | |
| மதுபானம் | 124,558 | 124,035 | -0.4 |
| சிகரெட் மற்றும் புகையிலை | 82,630 | 90,015 | 8.9 |
| மோட்டார் வாகனங்கள் | 13,672 | 21,484 | 57.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 36,665 | 72,254 | 97.1 |
| ஏனையவை | 4,577 | 3,067 | -33.0 |
| **மொத்தம்** | **262,103** | **310,856** | **18.6** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

இனிப்புப் பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் பாம் எண்ணெய் கொழுப்பமிலம் போன்ற பிற உற்பத்தித் தீர்வை விதிக்கக்கூடிய பொருட்களின் வருமானம், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 3.1 பில்லியனாக இருந்தது, 2022 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 4.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ் 33.0 சதவீதத்திலான வீழ்ச்சியானது அத்தியாவசியமற்ற பொருட்களின் மீது விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளின் விளைவை பிரதிபலிப்பதாகவிருந்தது.

வரைபு 1.3 : உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2023 சனவரி - செப்தெம்பர்)




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு**

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடானது 2022, ஒக்தோபர் 01 முதல் ஆண்டொன்றிற்கு ரூபா 120.0 மில்லியனினைத் தாண்டும் புரள்வினைக் கொண்ட இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து ஆண்டொன்றிற்கு 2.5 சதவீதத்தில், புரள்வு மீது அறவிடப்படுகிறது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டின் மொத்த வருமானம் ரூபா 158.4 பில்லியன் ஆகும். இத்தொகை, 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 63.4 சதவீதமாவும் மொத்த வருமானத்தில் 7.5 சதவீதமாகவும் இருந்தது.

**தொலைதொடர்பு அறவீடு**

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொலைதொடர்பு அறவீட்டிலிருந்து அடையப்பெற்ற வருமானமாகிய ரூபா 10.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022, யூன் 01, முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தொலைதொடர்பு அறவீடு 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டதன் பகுதியளவு விளைவாக 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 29.4 சதவீதம் அதிகரித்து ரூபா 13.8 பில்லியனினைப் பதிவுசெய்தது.

**சுங்க இறக்குமதித் தீர்வை**

சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்து அடையப்பெற்ற வருமானம், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 66.1 பில்லியனாக இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 36.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 80.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை மற்றும் பால் மா, கோதுமை மா மற்றும் கோதுமை தானியங்கள் மீதான சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்கள் உயர்த்தப்பட்டமை முக்கிய காரணங்களாகும். மேலும், உத்தேச காப்பு - வரிகளை படிப்படியாக நீக்கும் முயற்சிக்கு இடமளிப்பதற்காக 2023, மார்ச்சு 29 முதல் சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்களை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் முதல் 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதம் என உயர்த்தியமை சுங்க இறக்குமதித் தீர்வை வருமானத்திற்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

**அட்டவணை 1.7 | மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு**

| விபரம் | இறக்குமதிகள் | | | | புதிய பதிவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சன – செப் | | | | சன – செப் | | | |
| | 2022 | 2023 | மாற்றம் | % | 2022 | 2023 | மாற்றம் | % |
| மோட்டார் கார்கள் | 198 | 596 | 398 | 201 | 1,141 | 1,376 | 235 | 21 |
| பயணிகள் வேன்கள் மற்றும் பேருந்துகள் | 37 | 380 | 343 | 927 | 275 | 584 | 309 | 112 |
| முச்சக்கர வண்டிகள் | 223 | 34 | -189 | -85 | 27 | 30 | 3 | 11 |
| மோட்டார் சைக்கிள்கள் | 10,017 | 4,193 | -5,824 | -58 | 7,067 | 12,518 | 5,451 | 77 |
| பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் (அ) | 236 | 92 | -144 | -61 | 1,401 | 264 | -1,137 | -81 |
| நில வாகனங்கள் (ஆ) | 52 | 5 | -47 | -90 | 6,025 | 2,399 | -3,626 | -60 |
| ஏனையவை (இ) | – | – | - | - | 755 | 376 | -379 | -50 |
| **மொத்தம்** | **10,763** | **5,300** | **-5,463** | **-51** | **16,691** | **17,547** | **856** | **5** |

*மூலம் : இலங்கைச் சுங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

*(அ) லொறிகள், ஏனைய பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்க வாகனங்கள்*

*(ஆ) ட்ராக்டர், கை ட்ராக்டர்கள் மற்றம் ஏனைய வாகனங்கள்*

*(இ) ஒற்றை வண்டி, இருநோக்க வாகனங்கள், குவாட்ரிசைக்கிள், மோட்டார் வீடுகள், அம்பூலன்ஸ் வண்டி, ஹய்யஸ் வண்டி*

**விசேட வியாபாரப்பண்ட அறவீடு**

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் விசேட வியாபாரப்பண்ட அறவீட்டு வருமானத்தினைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 29.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 25.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 36.8 பில்லியனாகக் காணப்பட்டது. முக்கிய பொருட்களின் இறக்குமதியின் அளவு அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாகும்.

**அட்டவணை 1.8 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/ இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சன – செப் 2023 | | |
|---|---|---|---|
| | தீர்வை சலுகை வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை | இறக்குமதி பெறுமதி (CIF / ரூபா. மில்லியன்) | இறக்குமதி பெறுமதி (CIF / ரூபா. மில்லியன்) |
| இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 5,329 | 122,506 | 28,447 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 6,200 | 10,547 | 2,029 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) | 5,932 | 20,069 | 1,197 |
| ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 808 | 46,308 | 1,612 |
| மொத்தம் | **18,269** | **199,430** | **33,285** |

மூலம் : சுங்கத் திணைக்களம் மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

**துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு**

துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 135.4 பில்லியனினை விட 8.7 சதவீதம் சரிவடைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 123.6 பில்லியனாகக் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்திற்கிணங்க, வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துவதுடன், பொருளாதார போட்டித்தன்மைக்கு உதவும் பொருட்டு காப்பு-வரிகளை ஒழுங்கமைக்கும் திட்டத்திற்கேற்ப, துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை 05 ஆண்டுகளுக்குள் படிப்படியாக அகற்றும் நோக்கத்துடன், 2023, ஏப்ரல் 04 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிற்கு ஏற்புடைய மொத்த பொருட்களில் 20 சதவீதம் அல்லது 1,631 பொருட்கள் தொடர்பாக இவ் அறவீடு நீக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாகும்.

**செஸ் அறவீடு**

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் செஸ் அறவீடு மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 52.8 பில்லியன் ஆகும். இது 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 39.5 பில்லியன் வரை 25.1 சதவீதத்தினால் குறைந்துள்ளது. முக்கியமாக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவிற்கிணங்க, 03 ஆண்டுகளுக்குள் செஸ் அறவீட்டினை நீக்கும் நோக்கத்துடன், 2023 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2,618 பொருட்களுக்குப் பொருந்தக்கூடிய செஸ் விகிதங்கள் குறைக்கப்பட்டமையை இது பிரதிபலிக்கின்றது. இருப்பினும், கிளிங்கர் மற்றும் சீமெந்து இறக்குமதிக்கான செஸ் விகிதம் 2023, யூன் 16 முதல் அதிகரிக்கப்பட்டது.

ஏற்றுமதி மீதான செஸ் அறவீடு மூலம் கிடைக்கும் வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1.73 பில்லியனாகவும், இத்தொகை 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 1.71 பில்லியனிலிருந்து 0.8 சதவீதம் அதிகரித்தும் உள்ளது. இருப்பினும், இறக்குமதியின் மீதான செஸ் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 37.8 பில்லியனாக இருந்தது, இவ் வருமானம், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 51.0 பில்லியனினை விட 26.0 சதவீதம் வீழ்ச்சியுற்றது.

**அட்டவணை 1.9| சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்**

ரூபா மில்.

| விபரம் | சன - ஆகஸ் | |
|---|---|---|
| | **2022** | **2023**(அ) |
| **ஏற்றுமதிகள் மீதான செஸ்** | **2,243** | **1,167** |
| தேயிலை - தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் | 465 | 249 |
| இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ் | 10 | 2 |
| தேங்காய் - தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 189 | 97 |
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம் | 1,579 | 820 |
| **இறக்குமதிகள் மீதான செஸ் –** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 66,990 | 25,563 |
| **மொத்தம்** | **69,232** | **26,730** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

**வரியல்லாத வருமானம்**

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி அல்லாத வருமானமானது ரூபா 176.5 பில்லியனினைப் பதிவுசெய்து 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 165.1 பில்லியனினை விட 6.9 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த வருவாயில் 8.4 சதவீதம் பங்களித்தது. முக்கியமாக அபராதம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், வட்டி வருமானம் மற்றும் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாயின் அதிகரிப்பு இதற்கான முக்கிய காரணமாகும்.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 56.8 பில்லியன்களைப் பதிவுசெய்த அபராதம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் வருமானம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் ஆகியவற்றின் கட்டணங்களினதும் அறவீடுகளினதும் திருத்தம் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 50.3 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து, மொத்த வரி அல்லாத வருவாயில் 48.4 சதவீத பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் ரூபா 85.4 பில்லியனினைப் பதிவுசெய்தது.

அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் இலாபம் மற்றும் பங்கிலாபங்களைப் பொறுத்தவரை 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 22.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில பதிவுசெய்யப்பட்ட ரூபா 18.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இத்தொகையானது 20.6 சதவீத அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 4.6 பில்லியனாகக் காணப்பட்ட வட்டி வருமானம் 212.0 சதவீதத்தினால் அதிகரித்து, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 14.3 பில்லியனினை அடையப்பெற்றது.

இருப்பினும், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 27.7 பில்லியனினைக் கொண்டிருந்த சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டின் வரி அல்லாத வருமானமானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 3.6 சதவீதத்தினால் குறைந்து ரூபா 26.7 பில்லியனாக உள்ளது. ஆண்டுக்குரிய மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 278.0 பில்லியனுக்கெதிராக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி அல்லாத வருமானத்தின் தேறல் 63.5 சதவீதமாக இருந்தது.

**அட்டவணை 1.10 : அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (2023 சனவரி – செப்தெம்பர்)**

(ரூபா பில்லியன்)

| விடயம் | 2022 (சனவரி – செத்தெம்பர்) | 2023 ஆண்டு மதிப்பீடு | 2023 (சன – செப்) (தற்காலிக) | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | 431.8 | 912.0 | 663.6 | 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், வருமான வரிகளின் வருமானமானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 431.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 663.6 பில்லியன் வரை, 53.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 72.8 சதவிகித தேறலாகும். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட வரிக் கொள்கை சீர்திருத்தங்களுடன் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி, உழைக்கும்போது செலுத்தும் வரி/முற்பண தனியாள் வருமான வரி மற்றும் பிடித்துவைத்தல் வரி ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் இதற்கான முக்கிய காரணமாகும். நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 445.9 பில்லியன் ஆகும். இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 399.4 பில்லியனினை விட 11.7 சதவீத அதிகரிப்பாகும். தனியாள் வருமான வரி விகிதக் கட்டமைப்பின் திருத்தம் காரணமாக, தனியாள் வருமான வரி விகிதங்களை 6 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாக படிப்படியாக உயர்த்தியமையால் உழைக்கும்போது செலுத்தும் வரி/ முற்பண தனியாள் வருமான வரி ஆகியவை ரூபா 17.9 பில்லியனிலிருந்து 497.8 சதவீதத்தினால் ரூபா 107.0 பில்லியன் வரை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. பிடித்து வைத்தல் வரியும் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 14.3 பில்லியனிலிருந்து 672.7 சதவீதம் அதிகரித்து 2023 - முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 110.4 பில்லியனினைக் கொண்டிருந்தது. மேலும், மீளாய்வு காலத்தில் மூலதன ஈட்டுகை வரியின் வருமானம் 140.7 சதவீதத்தினால் ரூபா 3.2 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. |
| பெறுமதி சேர் வரி | 310.5 | 908.0 | 505.0 | 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா 505.0 பில்லியனாகும். இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 310.5 பில்லியனிலிருந்து 62.6 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 55.6 சதவிகிதத்தினை அடைந்துள்ளது. 2022, யூன் 01 முதல் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும், 2022, செப்தெம்பர் 01 முதல் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி விகிதம் இதற்கு முக்கிய காரணமாகும். மேலும், பெறுமதி சேர் வரிக்கான பதிவு வரம்பை 2022 ஒற்றோபர் 01 முதல் ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து ரூபா 300 மில்லியன் வரை உயர்த்தியமை இந்தச் செயலாற்றுகைக்குப் பங்களித்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மீது பெறுமதி சேர் வரி மூலம் கிடைக்கும் வரி வருமானம் முறையே 81.4 சதவீதம் அதிகரித்து ரூபா 351.6 பில்லியனும் மற்றும் 31.5 சதவீதம் அதிகரித்து ரூபா 153.4 பில்லியனும், மீளாய்விற்கான காலத்தில் அடையப்பெற்றுள்ளது. |

**அட்டவணை 1.10 : அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (2023 சனவரி – செப்தெம்பர்)**

(ரூபா பில்லியன்)

| விடயம் | 2022 (சனவரி – செத்தெம்பர்) | 2023 ஆண்டு மதிப்பீடு | 2023 (சன – செப் (தற்காலிக) | காரணம் |
|---|---|---|---|---|
| உற்பத்தித் தீர்வை | 262.1 | 560.0 | 310.9 | 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உற்பத்தித் தீர்வை வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 262.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 18.6 சதவீதத்தினால் ரூபா 310.9 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. இது, 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 55.5 சதவிகிதம் ஆகும். மதுபானம் மற்றும் ஏனைய உற்பத்தி தீர்வைப் பொருட்களின் மூலம் வருமானம் ஓரளவு குறைந்திருந்தாலும் சிகரெட், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றிலிருந்து வருமானம் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும். உற்பத்தித் தீர்வைக்கு அதிக வருவாயை அளிக்கும் மதுபானத்தின் மீதான மது வரி வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலத்தில் ரூபா 124.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 0.4 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 124.0 பில்லியனினை அடையப்பெற்றுள்ளது. மதுபானங்கள் மீதான மது வரி 2023, ஜனவரி 03 முதல் அதிகரிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து 2023, ஜூலை 01 முதல் இரண்டாவது அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வுக் காலத்தில் சிகரெட் மீதான உற்பத்தி வரி வருமானம் 8.9 சதவீதம் அதிகரித்து ரூபா 90.0 பில்லியனாகக் காணப்பட்டது. முக்கியமாக 2023, ஜனவரி 01 முதல் சிகரெட் மீதான உற்பத்தி வரியை 20 சதவிகிதமும் 2023, ஜூலை 01 அன்று 20 சதவிகிதமும் மேலும் உயர்த்தியமை இதற்குப் பங்களித்துள்ளது. மேலும், 2023 முதல் ஒன்பது மாதங்களில் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருவாய் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 13.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 57.1 சதவீதம் அதிகரித்து ரூபா 21.5 பில்லியனாக இருந்தது. மின்சார வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிப்பதன் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானமே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும், பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 2023 - முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 72.3 பில்லியனாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 36.7 பில்லியனினை விட 97.1 சதவீத அதிகரிப்பாகும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து திறைசேரிக்கு மாற்றப்பட்ட பொறுப்புகளுக்கு நிதியளிப்பதற்காகவும் 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீத மேலதிக வருவாயை ஈட்டுவதற்காகவும் அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான உற்பத்தி வரி 2023, ஜனவரி 01 முதல் லீற்றரொன்றிற்கு ரூபா 25, மற்றும் மீண்டும் 2023 ஜூன் 01 முதல் லீற்றரொன்றிற்கு ரூபா 25 எனும் தொகைகளில் அதிகரிக்கப்பட்டமை இதற்குப் பங்களிப்பு செய்துள்ளது. |

**அட்டவணை 1.10 : அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (2023 சனவரி – செப்தெம்பர்)**

| விடயம் | 2022 (சனவரி – செத்தெம்பர்) | 2023 ஆண்டு மதிப்பீடு | (ரூபா பில்லியன்) 2023 (சன – செப் (தற்காலிக) | காரணம் |
|---|---|---|---|---|
| இறக்குமதித் தீர்வைகள் | 36.6 | 80.0 | 66.1 | இறக்குமதித் தீர்வை வருமானம் 2023 - முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 66.1 பில்லியனாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 36.6 பில்லியனினை விட 80.7 சதவீத அதிகரிப்பாகவும் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 82.6 சதவிகித தேறலாகவும் காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கியமை, பால் மா, கோதுமை மா மற்றும் கோதுமைத் தானியங்கள் மீதான சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்களின் அதிகரிப்பு காணப்பட்டது. மேலும், சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்களை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதத்தில் இருந்து 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதம் என 2023 மாச்சு 29 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உயர்த்தியமை சுங்க இறக்குமதித் தீர்வை வருமானத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தது. |
| துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 135.4 | 220.0 | 123.6 | 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 135.4 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டு வருமானம் 8.7 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 123.6 பில்லியனாக இருந்து 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 56.2 சதவிகிதத்தை அடைந்துள்ளது. 2023 - வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக்கு இணங்க 05 ஆண்டுகளுக்குள் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டை படிப்படியாக நீக்கும் நோக்கத்துடன் 2023, ஏப்ரல் 04 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிற்கு ஏற்புடைய மொத்த பொருட்களில் 20 சதவீத பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டதே இதற்கு முக்கிய காரணமாகும். |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 29.2 | 70.0 | 36.8 | 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 29.2 பில்லியனிலிருந்து 25.8 சதவீதம் அதிகரித்து ரூபா 36.8 பில்லியனாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 52.6 சதவிகிதத்தனை எட்டியுள்ளது. பிரதான பண்டங்களின், இறக்குமதியளவு அதிகரித்தமை இதற்குப் பங்களித்துள்ளது. |
| சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு | 0.0 | 250.0 | 158.4 | சமூகப் பாதுகாப்பு உதவுதொகை மூலம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 158.4 பில்லியன் பதிவுசெய்யப்பட்டு மொத்த வருவாயில் 7.5 சதவிகிதத்தினைப் பங்களித்ததுடன் சமூகப் பாதுகாப்பு உதவுதொகைக்கான 2023 - வருடாந்த மதிப்பீட்டில் 63.4 சதவிகிதத்தினை அடைந்துள்ளது. |

**அட்டவணை 1.10 : அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (2023 சனவரி – செப்தெம்பர்)**

(ரூபா பில்லியன்)

| விடயம் | 2022 (சனவரி – செத்தெம்பர்) | 2023 ஆண்டு மதிப்பீடு | 2023 (சன – செப்) (தற்காலிக) | காரணம் |
|---|---|---|---|---|
| ஏனைய வரிகள் | 77.7 | 130.0 | 69.6 | 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஏனைய வரிகளின் வருமானம் ரூபா 69.6 பில்லியனினைக் கொண்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் இதே மீளாய்வுக் காலத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 77.7 பில்லியனினை விட 10.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2023 இற்கான வருடாந்த மதிப்பீட்டில் 53.6 சதவிகிதத் தேறலை அடைந்தது. 2023 ஆம் ஆண்டு மாச்சு 29 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2,618 பொருட்களுக்கு, அடுத்த 03 ஆண்டுகளுக்குள் செஸ் வரியை நீக்கும் நோக்கத்துடன் 2023 - வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க, காப்புவரி-கட்டணங்களை ஒழுங்கமைக்கும் திட்டத்திற்கு ஏற்ப. செஸ் அறவீடு குறைக்கப்பட்டதன் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் செஸ் அறவீட்டு வருமானம் 25.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 39.5 பில்லியனினை அடையப்பெற்றது. இருப்பினும், தொலைத்தொடர்பு அறவீட்டிலிருந்து வருமான சேகரிப்பானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 10.6 பில்லியனிலிருந்து 29.4 சதவீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 13.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2022, ஜுன் 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அறவீட்டு விகிதங்கள் உயர்த்தப்பட்டமையே இதற்குக் காரணமாகும். |
| வரியல்லாத வருமானம் | 165.1 | 278.0 | 176.5 | வரி அல்லாத வருமானமானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 176.5 பில்லியன் வரை 6.9 சதவீதம் அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 63.5 சதவிகிதம் ஆகும். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கட்டணங்களினதும் அறவீடுகளினதும் மீள்திருத்தத்துடன் அபராதம், கட்டணம் மற்றும் அறவீடுகளின் மூலம் ரூபா 85.4 பில்லியன் வருமானம் பதிவுசெய்யப்பட்டது, இது முன்னைய ஆண்டினை விட 50.3 சதவீத அதிகரிப்பாகும். மேலும், அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் இலாபங்களும் பங்கிலாபங்களும், வட்டி வருமானம் மற்றும் வாடகை ஆகியவற்றிலிருந்து மேம்படுத்தப்பட்ட வருமானம் பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும், சமூகப் பாதுகாப்பு உதவுதொகை வருமானம் 3.6 சதவீதம் வீழ்ச்சியடைந்து மீளாய்வு காலத்திற்காக ரூபா 26.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. |
| **மொத்தம்** | **1,448.5** | **3,408.0** | **2,110.5** | |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.*

**கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி – 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்** | |
| 01.06.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 - இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வதிவுடையோருக்கும், அவர்களின் ஆண்டு வருமானம் மற்றும் வரி விலக்கு வரம்புகளைக் கருத்திற்கொள்ளாமல் உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தில் கட்டாய வரிப் பதிவை அறிமுகப்படுத்துதல். |
| **2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்** | |
| 01.01.2023 | தனியாள் வருமான வரி |
| | ஆண்டொன்றிற்கான வரி விதிக்கத்தக்க வருமானம் |
| | முதலாம் ரூபா 1,200,000 – விலக்களிப்பு<br>ரூபா 500,000 – ரூபா 1,000,000 - 6%<br>ரூபா 1,000,000 - ரூபா 1,500,000 - 12%<br>ரூபா 1,500,000 - ரூபா 2,000,000 - 18%<br>ரூபா 2,500,000 – ரூபா 3,000,000 - 24%<br>ரூபா 3,000,000 – ரூபா 3,500,000 - 30%<br>ரூபா 3,500,000 இற்கு மேல் - 36% |
| 01.01.2023 | **பிடித்துவைத்தல் வரி** |
| | **வரி விகிதங்கள்** |
| | பங்கிலாபம் – 15%<br>செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பீடு – 5%<br>மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேற்படும் வாடகைக் கொடுப்பனவுகள் – 10%<br>சேவைக் கொடுப்பனவுகள் மாதமொன்றிற்கு ரூபா 100,000 – 5%<br>ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் – 14% |
| **2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்** | |
| 08.05.2023 | i. தனியாள் வருமான வரி செலுத்துவொர்களுக்காக இலத்திரனியல் வரி தாக்கல் முறையை தாக்கலை கட்டாயப்படுத்துதல்.<br>ii. வதிவோர் தனிநபர்களால் வரி பொறுப்பிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை மீளளிப்புச் செய்வதற்கு மீளளிப்பு செயன்முறையை விரைவுபடுத்தல் மற்றும் நெறிப்படுத்தல்.<br>iii. காசுக்கொடுக்கல் வாங்கல்களைக் குறைத்தல் ஒரே நாளில் அல்லது ஒரு கொடுக்கல் வாங்கல்களில் அல்லது ஒரே நிகழ்வில் மொத்தமாக ரூபா 500,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை வரி நோக்கத்திற்காக செலவுகளாக கழிக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது.<br>iv. வரி செலுத்துவோரின் கொடுக்கல், வாங்கல் தகவலை தனிப்பட்ட அளவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க நிதி நிறுவனங்களை கட்டாயப்படுத்தல்.<br>v. இலங்கை அரசாங்கத்தின் கருத்திட்டமொன்றிலிருந்து வதிவோர் அல்லாத ஆளொருவரால் பெறப்படும் தொகைக்கு விலக்களிப்பு. |
| **2023 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்** | |
| 01.04.2023 | ஊழியர் நம்பிக்கை நிதியம் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப அல்லது ஓய்வூதிய நிதியம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்துகை நிதியம் ஒன்றின் நிதியை ஆகியவற்றுக்கு பொருந்தும் வருமான வரி வீதத்தை 30 சதவீதம் வரை அதிகரிக்கவும் மற்றும் உள்நாட்டு படுகடன் மேம்படுத்தல் செயன்முறையில் திறனான முறையில் பங்குகொண்டு நிதியங்களுக்குப் பொருத்தமான வருமான வரி வீதத்தை 14 சதவீதமாக தொடர்தல். |
| **பந்தையம்பிடித்தல் மற்றும் சூதாடல் அறவீடு – 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தையம்பிடித்தல் மற்றும் சூதாடல் அறவீட்டுச் சட்டம்** | |
| 01.04.2023 | **2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பந்தையம்பிடித்தல் மற்றும் சூதாடல் அறவீட்டு (திருத்தச்) சட்டம்**<br>i. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற புதிய சீட்டாட்ட விடுதிகளை பந்தைய மற்றும் சூதாட்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அறவீடுகளை செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில், பதிவுசெய்வதற்கான தடையை நீக்குவதற்கு<br>ii. புரள்வு மீதான மொத்த சேகரிப்பு அறவீட்டினை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்துதல்.<br>iii. சூதாட்டத் தொழிலிடத்திற்குள் நுழையும் ஒவ்வொரு இலங்கைப் பிரஜையிடமிருந்தும் அறவிப்படும் சீட்டாட்ட நுழைவு வரியை ஐ.அ.டொ. 100 இலிருந்து (இதுவரை சேரிக்கப்படவில்லை) ஐ.அ.டொ. 50 அல்லது அதற்கு சமனான இலங்கை ரூபாயிலான தொகைக்குக் குறைத்தல்.<br>iv. சூதாட்டத் தொழிலை மேற்கொள்பவர் செலுத்த வேண்டிய வருடாந்த அறவீட்டுத் தொகையை 2023, ஏப்பிரல் 01, அன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டிற்காகவும் ரூபா 200 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியன் வரை அதிகரித்தல். |

கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | v. பந்தயம் கட்டும் தொழிலை நடாத்தும் ஆளொருவர் செலுத்தவேண்டிய வருடாந்த அறவீட்டினை 2023, ஏப்பிரல் 01, அன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டிற்காகவும் பின்வருமாறு அதிகரித்தல்;<br>– முகவரொருவர் ஊடாக, ரூபா 4 மில்லியனிலிருந்து ரூபா 5 மில்லியன் வரை<br>– ஒளிபரப்பு வசதிகளின் உதவியுடன், ரூபா 600,000 இலிருந்து ரூபா 1,000,000 வரை<br>– ஒளிபரப்பு வசதிகளின் உதவியின்றி, ரூபா 50,000 இலிருந்து ரூபா 75,000 வரை<br>vi. இணையவழி செயற்பாடுகளை உள்ளடக்குவதற்காக “பந்தயம் கட்டுபவர்” (புக் மேக்கர்) மற்றும் “சூதாடல்” எனும் சொற்களை மீள்வரைவிலக்கணம் செய்தல்.<br>vii. தற்போது நடைமுறையிலுள்ள பிற சட்டங்களுக்கான குறிப்புகளை வழங்குவதற்கு பந்தைய மற்றும் சூதாட்ட அறவீட்டுச் சட்டத்தின், தொடர்புடைய பிரிவுகளை மீண்டும் வரைவுசெய்தல். |
| **சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு – 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டம்** | |
| 08.09.2023 | **2023 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுத் (திருத்தச்) சட்டம்**<br>1. பின்வரும் பண்டங்களுக்கு சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்காக சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 1அ - பிரிவைத் திருத்துதல்<br>i. வரிக்கட்டமைப்பினை இலகுபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுவரியாக உற்பத்தித் தீர்வையைக் கருத்திற் கொண்டு 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தித் தீர்வை பொருந்தும் ஏதேனும் மோட்டார் வாகனங்களின் மீதான இறக்குமதி<br>ii. மாற்றுத்திறனாளிகளினால் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அத்தகைய நபர்கள் மீதான வரிச்சுமையைக் குறைப்பதற்காக.<br>iii. வரிச்சுமையைக் குறைப்பதன் மூலம் உலகச் சந்தையில் இலங்கையின் அத்தகைய தொழில்களின் போட்டித் தன்மையைப் பேணுவதற்காக வெட்டி பட்டை தீட்டப்பட்ட பின்னர் மீண்டும் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் கடினமான பதனிடப்படாத இரத்தினக் கற்கள்.<br>iv. தீர்வையற்ற கடைகளின் விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருட்கள், ஏனைய இறக்குமதி வரிகளைப் போன்ற.<br>v. உயரும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல்லிலிருந்து தயாரிக்கப்படும் அரிசி.<br>2. விநியோக உரிமமொன்றின் கீழல்லாத மின்சார வழங்கல் தவிர்ந்த, மின்சார உற்பத்தி மற்றும் வழங்கலுக்கு சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்து விலக்களிப்பு வழங்க, சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் இரண்டாம் பாகத்தின் விடய இலக்கம் (i) திருத்துதல்.<br>3. பொது விற்பனை முகவர்களின் சிறிய இலாப எல்லைகளைக் கருத்திற் கொண்டு சிவில் விமான போக்குவரத்துச் சட்டத்தில் 97 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வான்வழிப் போக்குவரத்துச் சேவை உரிமம் ஒன்றினைக் கொண்டுள்ள பொது விற்பனை முகவர் ஒருவரால் வழங்கப்படும் சேவைகளுக்கு விலக்களிக்க, சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் இரண்டாம் பாகத்தினை திருத்துதல் |
| **பெறுமதி சேர் வரி – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2023 | 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம்<br>- தொடர்மாடி குடியிருப்புக்களுக்கான பெறுமதி சேர் வரி விலக்களிப்பினை நீக்குதல். |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை – 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/உப பிரிவாக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் உற்பத்தித் தீர்வையை குறித்தொதுக்குவதற்காக.<br>- பெற்றோலியப் பொருட்களுக்குப் பொருந்தும் உற்பத்தித் தீர்வையை அதிகரிப்பதற்காக.<br>- சிகரெட்டுகளுக்குப் பொருந்தும் உற்பத்தித் தீர்வையை அதிகரிப்பதற்காக. |
| 01.06.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- எரிபொருள் (பெற்றோல் மற்றும் டீசல்) மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடு) தீர்வை விகிதத்தை ஒவ்வொன்றினதும் லீற்றரொன்றிற்கு ரூபா 25 ஆல் அதிகரித்தல். |
| 17.06.2023 | 2023.06.16 ஆம் திகதிய 2336/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பல்மிரிக் அமிலம் (இ.மு. குறியீடு 2915.70.10) மற்றும் லோரிக் அமிலம் (இ.மு. குறியீடு 2915.90.10) ஆகியவற்றின் மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடு) தீர்வையை கி.கா.ச. பெறுமதியில் 29 சதவீதமாக விதிப்பதற்காக. |

**கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.07.2023 | 2023.06.30 ஆம் திகதிய 2338/58 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பன்னாட்டு நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி நிகழ்ச்சித்திற்கேற்ப அனைத்து வகையான சிகரெட்டுக்களின் மீதான உற்பத்தி வரியை 20 சதவீதத்தால் உயர்த்துவதற்கு |
| **மதுவரி (கட்டளைச்சட்ட) தீர்வை – மதுவரி கட்டளைச்சட்டம் (52 ஆம் அத்தியாயம்)** | |
| 03.01.2023 | 07/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.12.31 ஆந் திகதிய 2312/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மதுபானம் மீதான தீர்வையை அதிகரிப்பதற்காக. |
| 17.06.2023 | 01/2023 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2023.06.16 ஆந் திகதிய 2336/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- உரிமத்துடன் மற்றும் உரிமமின்றி வைத்திருக்கக் கூடியவாறு ஐசோபிரைல் மதுசாரத்தின் தற்போதைய எல்லைகளை உயர்த்துவதற்கு. |
| 01.07.2023 | 02/2023 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2023.06.30 ஆந் திகதிய 2338/57 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திற்கேற்ப அனைத்து வகையான மதுபானங்களின் மீதான உற்பத்தி வரியை 20 சதவீதத்தால் உயர்த்துவதற்கு. |
| **புகையிலை வரி – 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டம்** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/71 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பீடிகள் மீது குச்சியொன்றிற்கு ரூபா 2.00 வரியொன்றை விதித்தல் |
| **சுங்க மிகைக்கட்டணம் – சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்)** | |
| 05.01.2023 | 2023.01.04 ஆம் திகதிய 2313/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 ஆம் ஆண்டின் புதிய இ.மு. பதிப்புடன் இ.மு. குறியீடுகள் 2017 பதிப்பினைக் கொண்ட தற்போதைய கட்டளைகளை மீண்டும் வெளியிட. |
| 01.06.2023 | 2023.05.31 ஆந் திகதிய 2334/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான சுங்க இறக்குமதி வரியின் சதவீதமாக மேலதிக கட்டணத்தை 2023, திசெம்பர் 31 வரை மேலும் ஆறு மாதங்களுக்குத் தொடரும்பொருட்டு, 2022.11.30 ஆம் திகதிய 2308/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினை மீண்டும் வெளியிடுவதற்கு. |
| **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/67 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/உப பிரிவாக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டினை குறித்தொதுக்குவதற்காக. |
| 04.04.2023 | 2023.04.03 ஆம் திகதிய 2326/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023 - வரவுசெலவு திட்டத்தின் முன்மொழிவின்படி, ஐந்தாண்டு காலத்தில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து நீங்கும் முதல் படியாக, 1631 தீர்வை பொருந்தக்கூடிய பொருட்களுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிக்க. |
| 22.09.2023 | 2023.09.21 ஆம் திகதிய 2350/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பால் மா இறக்குமதி மீது பொருந்தும், 2021 ஆகஸ்ட் முதல் விலக்களிக்கப்பட்ட 10 சதவீத துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவிட்டினை விதிப்பதற்காக. |
| **செஸ் அறவீடு – 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்** | |
| 01.01.2023 | 2023.01.01 ஆம் திகதிய 2312/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/வகைப்படுத்தப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தக்கூடிய செஸ் வரியை குறித்தொதுக்குவதற்காக. |
| 29.03.2023 | 2023.03.28 ஆம் திகதிய 2325/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023– வரவுசெலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு மூன்று ஆண்டுகளுக்குள் செஸ் வரியை படிப்படியாக நிறுத்துவதற்கான முதல் படிமுறையாக, 8,155 இ.மு. குறியீடுகளில் 2,668 இ.மு. குறியீடுகளுக்கு செஸ் வரியைக் குறைப்பதற்காக. |
| 17.06.2023 | 2023.06.16 ஆம் திகதிய 2336/71 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- போர்ட்லண்ட் சீமெந்தின் இறக்குமதி மீதான செஸ் வரியை அதிகரித்தல் மற்றும் கிளிங்கர் இறக்குமதியில் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1.00 செஸ் வரியை விதித்தல். |
| 22.07.2023 | 2023.07.21 ஆம் திகதிய 2341/63 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>தீர்வை முரண்பாட்டை அகற்றுவதற்காக உள்ளூர் அச்சு மை உற்பத்திக்கான மூலப்பொருட்கள் இறக்குமதியின் மீதான செஸ் வரியில் இருந்து விலக்குதல் அளிப்பதற்காக |

**கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **செஸ் அறவீடு – 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்** | |
| 31.01.2023 | 2023.01.26 ஆம் திகதிய 2316/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பிணையப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஓவர் தி கவுண்டர் (OTC) தளத்தின் மீதான பெருநிறுவனக் கடன் பிணையங்களில் மீள்கொள்வனவு பரிமாற்றத்தின் (REPO) மீது 0.006% செஸ் வரியை விதிப்பதற்காக. |
| **சுங்க இறக்குமதித் தீர்வை – 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 01.01.2023 | 07/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.01.01 ஆம் திகதிய 2312/75 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சட்டப்பூர்வமான சர்வதேச வர்த்தக செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு 5 வருடங்களுக்கொரு தடவை இ.மு. குறியீட்டு முறைமையை இற்றைப்படுத்துதல். இலங்கையில் 08 இலக்கங்களில் மொத்தம் 7,842 இ.மு. குறியீடுகளுள்ளன, இருப்பினும், இ.மு குறியீடு 2022 பதிப்பு காரணமாக, மொத்த இ.மு. குறியீடுகளின் எண்ணிக்கை 8155 வரை அதிகரித்துள்ளன. |
| 29.03.2023 | 01/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.03.28 ஆம் திகதிய 2325/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சுங்க இறக்குமதித் தீர்வையின் மூன்றடுக்கு கட்டண முறையை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதத்திலிருந்து 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக திருத்துவதன் ஊடாக செஸ் அறவீடு 20 சதவிகிதத்தினால் குறைக்கப்பட்டதனால், வருமான நடுநிலையைப் பராமரிக்க குறிப்பிட்ட பொருட்களுக்கான சுங்க இறக்குமதித் தீர்வை விகிதத்தை அதிகரிப்பதற்காக. |
| 17.06.2023 | 02/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.06.16 ஆம் திகதிய 2336/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- பல்மிற்றிக் அமிலம் மற்றும் லோரிக் அமிலத்திற்கான புதிய இ.மு. குறியீடுகளை (தேசிய உப பிரிவுகள்) உருவாக்குதல் மற்றும் உள்ளூர் ஒப்பனைத் தொழிலுக்கு வசதியாக பாம் எண்ணெய் கொழுப்பமிலத்தின் தீர்வைக் கட்டமைப்பைப் போன்ற ஒரு தீர்வைக் கட்டமைப்பை விதித்தல். |
| 01.07.2023 | 03/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (30.06.2023 ஆம் திகதிய 2338/54 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 1,238 தீர்வை நிரல்கள் தொடர்பாக சுங்க இறக்குமதித் தீர்வையின், தீர்வை தாராளமயமாக்கல் திட்டத்தின் “6” ஆம் வகையின் கீழ் ஆறு வருடாந்த தவணைகளில் முதலாம் தவணையை நீக்குதல். |
| 22.07.2023 | 04/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.07.21 ஆம் திகதிய 2341/64 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- தீர்வை முரண்பாட்டை அகற்றுவதற்காக உள்ளூர் அச்சு மை உற்பத்திக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் சுங்க இறக்குமதித் தீர்வையின் 5 சதவீத சலுகை விகிதத்தை அறிமுகப்படுத்துதல். |
| 30.08.2023 | 05/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.08.29 ஆம் திகதிய 2347/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- கோதுமை மாவின் இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வையை கிலோ கிராமொன்றிற்கு 15 சதவீதம் அல்லது ரூபா 16, முதல் கிலோ கிராமொன்றிற்கு 20 சதவீதம் அல்லது ரூபா 27 எனும் விதமாக அதிகரித்தல். |
| **விசேட வியாபாரப்பண்ட அறவீடு – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 05.01.2023 | 2023.01.04 ஆம் திகதிய 2313/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 ஆம் ஆண்டின் புதிய இ.மு. பதிப்புடன், இ.மு குறியீடுகள் 2017 பதிப்பைக் கொண்டுள்ள, நடைமுறையிலுள்ள கட்டளைகளை மீண்டும் வெளியிடுவதற்கு. |
| 26.01.2023 | 2023.01.25 ஆம் திகதிய 2316/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- விவசாய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் கீழ், உள்நாட்டுக் கால்நடைத் தீவன உற்பத்தித் தொழிலை வசதிப்படுத்துவதற்காக மக்காச்சோளத்தின் சரக்கேற்றல் 2023, சனவரி 15 அளவில் துறைமுகங்கள்/விமான நிலையங்களை அடைவதற்குட்பட்டு சலுகை நீடிக்கப்பட்டது. |
| 21.02.2023 | 2023.02.20 ஆம் திகதிய 2320/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- முட்டைகளின் இறக்குமதி தொடர்பாக முட்டையொன்றிற்கு ரூபா 50.00 விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெதுப்பகத் தொழிலுக்கு நியாயமான விலையில் முட்டைகள் கிடைக்கச்செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு முட்டையொன்றிற்கு ரூபா 1.00 மாத்திரம் சலுகை விகிதத்தை அளித்தல். |
| 04.03.2023 | 2023.03.04 ஆம் திகதிய 2321/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உளுந்து, கௌபி, குரக்கன் மற்றும் மற்றொரு வகை தினை மீது விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு.. |

கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 08.03.2023 | 2023.03.07 ஆம் திகதிய 2322/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்நாட்டு விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான சந்தை விலையை உறுதி செய்வதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கிலோ கிராமொன்றிற்கு ரூபா 50.00 வரை உயர்த்துதல். |
| 08.03.2023 | 2023.03.07 ஆம் திகதிய 2322/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ரமலான் பண்டிகைக் காலத்தில் நன்கொடையாகவோ அல்லது அன்பளிப்பாகவோ பெறப்படும் பேரீச்சம் பழங்களை இறக்குமதி செய்ய கிலோ கிராமொன்றிற்கு ரூபா 1.00 என்ற சலுகை விகிதத்தைப் பயன்படுத்துதல். |
| 18.03.2023 | 2023.03.17 ஆம் திகதிய 2323/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வர்த்தக அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்குட்பட்டு, உறைந்த முழு முட்டை திரவத்தை இறக்குமதி செய்வதற்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 200.00 என்ற சலுகை விகிதத்தைப் பயன்படுத்துதல். |
| 18.05.2023 | 2023.05.17 ஆம் திகதிய 2332/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்காகவும், அரிசி இறக்குமதி மீது கிலோ கிராமொன்றிற்கு வி.வி.ப. அறவீட்டினை 25 சதத்திலிருந்து ரூபா 65 வரை உயர்த்துதல், மக்காச்சோள இறக்குமதிக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 75 வி.வி.ப. அறவீட்டினை விதித்தல் திரிபோஷ உற்பத்திக்காக மக்காச்சோள இறக்குமதிக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 50 வி.வி.ப. அறவீட்டினை தள்ளுபடி செய்தல் மற்றும் பிற 34 பொருட்களின் செல்லுபடியாகும் காலத்தை அதே தீர்வை விகிதத்தில் நீடித்தல். |
| 21.05.2023 | 2023.05.20 ஆம் திகதிய 2332/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- முட்டைகளின் இறக்குமதி தொடர்பாக முட்டையொன்றிற்கு ரூபா 50.00 விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினைத் தொடருதல் மற்றும் வெதுப்பகத் தொழிலுக்கு நியாயமான விலையில் முட்டைகள் கிடைக்கச்செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு முட்டையொன்றிற்கு ரூபா 1.00 மாத்திரம் சலுகை விகிதத்தை அளித்தல். |
| 23.06.2023 | 2023.06.22 ஆம் திகதிய 2337/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உணவுக் கொள்கைக் குழுவின் தீர்மானத்தினைக் கருத்திற்கொண்டு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்குட்பட்டு, உறைந்த முழு முட்டை திரவத்தை இறக்குமதி செய்வதற்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 200.00 என்ற சலுகை விகிதத்தை அளித்தல். |
| 14.07.2023 | 2023.07.13 ஆம் திகதிய 2340/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- திரிபோஷ உற்பத்திக்கான இறக்குமதி விலை மற்றும் கேள்வி விலையிலுள்ள வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு சோளத்தை இறக்குமதி செய்வதில் வழங்கப்பட்ட சலுகைகளை நீக்கி, வழக்கமான தீர்வைக் கட்டமைப்பைப் பயன்படுத்துதல். |
| 01.08.2023 | 2023.07.31 ஆம் திகதிய 2343/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 6 பொருட்களுக்கான செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கவும், மருந்துப்பொருள் உற்பத்தி நோக்கத்திற்காக இறக்குமதிசெய்யப்படும் 6 வகையான உப்பு இறக்குமதி தொடர்பான தீர்வை தள்ளுபடியைத் தொடரவும் மற்றும் மயிலை (Sail) மீன், கொப்பறா குல்லா (Marlin) மீன் மற்றும் கட்டா (Queen) மீன் போன்ற மீன் வகைகளை இறக்குமதி செய்வதில் தீர்வை தள்ளுபடி வழங்கப்படும் இ.மு. குறியீடுகளைத் திருத்துதல். |
| 18.08.2023 | 2023.08.17 ஆம் திகதிய 2345/64 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மக்காச்சோளத்தை இறக்குமதி செய்வதற்கு ரூபா 25 என்ற விகிதத்தில் சலுகை ரீதியான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டு விகிதத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் உளுந்து மற்றும் பச்சைப்பயறு இறக்குமதிக்கான தீர்வை விகிதத்தைத் திருத்துதல். |
| 21.08.2023 | 2023.08.21 ஆம் திகதிய 2346/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- முட்டை இறக்குமதியில் முட்டையொன்றிற்கு ரூபா 50/- என்ற விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினைத் தொடரவும், மற்றும் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கு முட்டையொன்றிற்கு ரூபா 1/- சலுகை விலையை மாத்திரம் வழங்குவதற்காகவும். |
| 08.09.2023 | 2023.09.08 ஆம் திகதிய 2348/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- விவசாய அமைச்சு மற்றும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான தீர்வையைத் தொடருவதற்காக. |
| 14.10.2023 | 2023.10.14 ஆம் திகதிய 2353/77 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மீன், மாசிக்கருவாடு, பருப்பு வகைகள், மங்குஸ்தான் மற்றும் கிவி பழங்களின் இறக்குமதி மீது, நடைமுறையிலுள்ள விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கும் மற்றும் உள்ளூர் ரின் மீன் கைத்தொழிலின் பயன்பாட்டிற்காக கெளுத்தி மீன் இறக்குமதிக்கான தீர்வைத் தள்ளுபடியை நீடிப்பதற்கும். |
| 02.11.2023 | 2023.11.01 ஆம் திகதிய 2356/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- சீனி மீதான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டு விகிதத்தினை கிலோ கிறாமொன்றிற்கு 25 சதத்திலிருந்து கிலோ கிறாமொன்றிற்கு ரூபா 50 வரை உயர்த்துவதற்கு. |

**கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்** | |
| 01.01.2023 | 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தினை ஒருங்கிணைப்பதற்காக. |
| 01.01.2023 | 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.01 ஆந் திகதிய 2312/78 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- தற்காலிக இடைநிறுத்தத்தினை ஒருங்கிணைப்பதற்காக. |
| 19.01.2023 | 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.19 ஆந் திகதிய 2315/46 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கட்டண விதிமுறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 22.02.2023 | 2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.02.22 ஆந் திகதிய 2320/46 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கட்டண விதிமுறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 22.02.2023 | 2023 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.02.22 ஆந் திகதிய 2320/47 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 24.03.2023 | 2023 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.03.24 ஆந் திகதிய 2324/45 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- வெளியேற்ற உமிழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தராதர ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 06.04.2023 | 2023 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.04.06 ஆந் திகதிய 2326/40 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கட்டண விதிமுறைகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 01.06.2023 | 2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.04.06 ஆந் திகதிய 2326/41 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- ஒரு தடவை பயன்படுத்தும் பிளாஸ்திக் பொருட்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக. |
| 10.06.2023 | 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.06.09 ஆந் திகதிய 2335/26 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளின் I ஆம் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளவாறு இ.மு. குறயீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்கள். |
| 14.06.2023 | 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.06.14 ஆந் திகதிய 2336/45 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கோதுமை அல்லது மெஸ்லின் மாவு மீதான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தைச் சேர்ப்பதற்கு. |
| 20.07.2023 | 2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.07.20 ஆந் திகதிய 2341/38 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் I ஆம் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி இ.மு. குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்கள். |
| 14.08.2023 | 2023 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.08.14 ஆந் திகதிய 2345/03 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- பயணிகள், சரக்குகள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் மற்றும் விசேட நோக்கத்திற்கான மோட்டார் வாகனங்கள் மீதான தற்காலிக இடைநீக்கத்தை ஒருங்கிணைப்பதற்கு. (2023.08.14 முதல் 1 மாதகாலம் வரை மாத்திரம் செல்லுபடியாகும்). |
| 29.08.2023 | 2023 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.08.29 ஆந் திகதிய 2347/08 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023.06.14 ஆம் திகதிய 2336/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விதிக்கப்பட்ட, கோதுமை மாவிற்கான உரிமத் தேவைப்பாட்டினை நீக்குவதற்காக |
| 09.10.2023 | 2023 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.10.09 ஆந் திகதிய 2353/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் I ஆம் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி இ.மு. குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்கள். |

கட்டம் 1.1 – பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் நவம்பர் 01 வரை

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **புறப்படுகை அறவீடு – 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம்** | |
| 12.01.2023 | 2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- விமான நிறுவனங்களிடமிருந்து புறப்படுகை அறவீட்டினைச் சேகரிப்பதற்காக. எவ்வாறாயினும், 2003 ஆம் ஆண்டு புறப்படுகை அறவீடு விதிக்கப்பட்டதிலிருந்து கப்பல்களுக்கான புறப்படுகை அறவீட்டினைச் சேகரிக்க ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவில்லை. எனவே, விமானத்தினைப் போன்று கப்பல் மூலமும் இலங்கையிலிருந்து புறப்படும் பயணிகளிடம் புறப்படுகை அறவீட்டினை சேகரிப்பதற்கான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதற்கு. |
| 25.04.2023 | 2023.04.25 ஆம் திகதிய 2329/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில், அட்டவணைப்படுத்தப்பட்ட விமான நடவடிக்கைகளைத் தொடங்கும் விமான நிறுவனங்களுக்கு 2023, ஏப்பிரல் 25 முதல் ஒரு வருட காலத்திற்கு புறப்படுகை அறவீட்டிற்குப் பொருந்தும் விகிதமாகிய ஐ.அ.டொ. 60 இலிருந்து 50 சதவீதம் (ஐ.அ.டொ. 30 வரை) கழிக்கப்படுவதைத் தொடருவதற்காக. |
| 25.07.2023 | 2023.07.25 ஆம் திகதிய 2342/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- யாழ்ப்பாண விமான நிலையத்திலிருந்து தொடங்கும் விமான நடவடிக்கைகளைக்கு 2023, யூலை 25 முதல் மேலும் ஆறு (06) மாத காலத்திற்கு புறப்படுகை அறவீட்டு விகிதமாகிய ஐ.அ.டொ. 60 இலிருந்து 50 சதவீதம் கழிக்கப்படுவதைத் தொடருவதற்காக. |
| **சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு – 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் –** | |
| 01.01.2023 | 2023.01.01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்வரும் சர்வதேச அழைப்புகள், குறிப்பிட்ட தொலைபேசி எண்களுக்கு உள்வரும் சர்வதேச அழைப்புகள், உள்வரும் உள்ளூர் அணுகல் கட்டணம், தொலைத்தொடர்பு மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் வெளிச்செல்லும் உள்ளூர் அணுகல் கட்டணம் ஆகியவற்றிற்காக செலுத்த வேண்டிய வரி விகிதத்தை 2023, சனவரி 01, முதல் 2024, திசெம்பர் 31 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக. |
| **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி – 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளித்து, புதிதாக உருவாக்கப்பட்ட/உப பிரிவாக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தக்கூடிய சொகுசு வரியைக் குறித்தொதுக்குவதற்காக. |
| 10.02.2023 | 2023.02.10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மின்சார கார்களை இறக்குமதி செய்யும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முழுவதுமாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களின் வரி விலக்கு வரம்பை ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியன் வரை உயர்த்துவதற்காக. |
| 31.05.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023.02.10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பணஅனுப்பீடுகள், நாணயக் கடிதங்களின் நிறுவல் மற்றும் மோட்டார் வாகனங்களின் பதிவு ஆகியவற்றின் பரிசீலனைக் காலத்தை நீடிப்பதற்காக. (புலம்பெயர் தொழிலாளர்களுக்கு முழு மின்சார மோட்டார் வாகனங்களின் வரி விலக்கு வரம்பு ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியனாக அதிகரிப்பு) |
| 13.07.2023 | 2023.07.13 ஆம் திகதிய 2340/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இராஜதந்திரிகள் மற்றும் இராஜதந்திர அமைப்புக்களால் 100% தீர்வையற்ற அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு பயன்படுத்தப்பட்ட, ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்ட அகற்றுதல் பொறிமுறையைத் தீர்மானிப்பதற்கு |

### 1.3 அரசாங்க செலவினம்

2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்க செலவினம் ரூபா 3,732.3 பில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 3,327.7 பில்லியன் மீண்டெழும் செலவினமாகக் காணப்பட்டதுடன், ரூபா 404.6 பில்லியன் மூலதன மற்றும் தேறிய கடன் பெறுகைச் செலவினமாகக் காணப்பட்டது. அரசாங்க செலவினமானது வருடந்தோறும் பாராளுமன்றத்தினால் அதிகாரமளிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. இதற்கமைவாக, 2023 இல் செலவினங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு முடியுமான வகையில் 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

படுகடன் மீள்கட்டமைப்புச் செயன்முறையினிற்குள் கடன்களை வழங்க வேண்டியதைக் கருத்திற்கொண்டு, 2023 ஆம் வருடத்திற்கான 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட அரசாங்க கடன் பெறுகை தொடர்பில் தற்பொழுது காணப்படும் வரையறை மற்றும் படுகடன் மீள் செலுத்தல் செலவினம் என்பன 2023 இன் 12 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டன.

#### ஆள்சார் வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகளின் ஊழியர்கள் உள்ளடங்களான அரசாங்க ஊழியர்களின் ஆள்சார் வேதனாதிகள் மீதான செலவினம் 2022 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட

**அட்டவணை 1.11 | அரசாங்க செலவின செயலாற்றுகை**

ரூபா.மில்

| விபரம் | சன – செப் | |
|---|---|---|
| | 2022 | 2023 (அ) |
| **மீண்டெழும் செலவினம்** | **2,300,171** | **3,327,685** |
| சம்பளங்கள் | 714,280 | 696,995 |
| ஓய்வூதியம் | 228,609 | 263,998 |
| வட்டி | 927,366 | 1,737,338 |
| ஏனைய | 429,916 | 629,354 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **394,617** | **404,647** |
| **மொத்த செலவினம்** | **2,694,788** | **3,732,331** |

*மூலம் : தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

ரூபா 714.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது ரூபா 697.0 பில்லியனாக 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2022 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 228.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 264.0 பில்லியனாக 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது பிரதானமாக அரசாங்க சேவையில் கட்டாய ஓய்வூதிய வயதினை 65 இலிருந்து 60 வருடங்களாக குறைப்பதற்கு எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். இந்த வகையில் 2022 இல் 60 வயதுக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் 2022.12.31 முதல் செயல்வலுப்பெறும் வகையில் இளைப்பாறியதன் காரணமாக 2022 இல் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஓய்வூதிய செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது ஓய்வூதிய கொடுப்பனவு மீதான மொத்தச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

**வட்டிக் கொடுப்பனவுகள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2022 இன் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 927.4 பில்லியனிலிருந்து 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1,737.3 பில்லியனாக 87.3 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இது உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 1,652.1 பில்லியனாக 101.6 சதவீதத்தினால் அதிகரித்ததனால் ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் 85.3 பில்லியனாக 21.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 1.12 : அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2022 – 2023**

| காலப்பகுதி | | திறைசேரி உண்டியல்கள் (%) | | | திறைசேரி முறிகள் (%) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா/ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| 2022 | சன | 8.63 | 8.55 | 8.55 | | 11.49 | | | 201.46 |
| | பெப் | 8.61 | 8.53 | 8.53 | | 12.25 | | 11.92 | 201.74 |
| | மார் | 12.92 | 12.25 | 12.28 | 14.41 | | | 14.70 | 255.81 |
| | ஏப் | 23.53 | 23.96 | 24.09 | | 22.01 | | 22.16 | 319.44 |
| | மே | 23.65 | 24.22 | 24.30 | | 22.38 | | 22.69 | 358.94 |
| | யூன் | 23.85 | 24.40 | 23.84 | | 23.77 | | 21.18 | 360.24 |
| | யூலை | 28.86 | 29.24 | 29.53 | | 28.45 | | | 360.87 |
| | ஆகஸ் | 32.89 | 31.28 | 30.50 | | 29.16 | | | 361.00 |
| | செப் | 31.94 | 30.59 | 29.85 | | 30.95 | | 31.50 | 362.38 |
| | ஒத் | 33.05 | 32.53 | 29.60 | 32.71 | 32.63 | | 31.78 | 363.15 |
| | நவ | 32.91 | 32.27 | 29.46 | 33.01 | 31.69 | | | 363.39 |
| | திசெ | 32.64 | 32.20 | 29.27 | 32.19 | 31.36 | | | 363.17 |
| 2023 | சன | 29.91 | 28.72 | 27.78 | | 30.85 | 29.21 | 29.79 | 362.42 |
| | பெப் | 29.72 | 28.67 | 27.67 | | | 29.37 | | 361.98 |
| | மார் | 25.99 | 25.79 | 24.31 | 29.99 | | 28.11 | | 329.47 |
| | ஏப் | 25.74 | 25.27 | 23.00 | | | | | 321.42 |
| | மே | 25.65 | 25.29 | 22.91 | | | | | 310.16 |
| | யூன் | 23.00 | 19.49 | 16.99 | | | | | 301.26 |
| | யூலை | 19.96 | 17.69 | 14.29 | | | | 15.74 | 319.29 |
| | ஆகஸ் | 18.48 | 15.36 | 13.58 | | 15.80 | | 15.03 | 321.58 |
| | செப் | 17.42 | 15.13 | 13.30 | | 15.64 | | 14.52 | 322.77 |

*மூலங்கள் : திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

**நலன்புரிச் செலவினம்**

நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அரசாங்க செலவினமானது சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்குணவு, கல்வி, வாழ்வாதார ஒத்துழைப்பு, சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் மீதான செலவினத்தை உள்ளடக்கியுள்ளது. நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட ரூபா 213.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 312.5 பில்லியனாக 46.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் சுகாதார பராமரிப்பு மீதான செலவினம் "அனைவருக்கும் இலவச மருத்துவம்", "திரிபோசா" மற்றும் "போசன மல்ல" என்பவற்றின் மீதான செலவினத்தினை உள்ளடக்கி ரூபா 97.1 பில்லியனாக காணப்பட்டது. "அனைவருக்கும் இலவச மருத்துவம்" நிகழ்ச்சித்திட்டம் சுகாதார மற்றும் போசாக்குணவு ஒத்துழைப்பு மீதான செலவினத்திற்கு பாரியளவு பங்களிப்புச் செய்துள்ளது. மருந்துப் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக 2022 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் இலவச மருத்துவம் மீதான செலவினம் 93.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

கல்வி தொடர்பான நலன்புரிச் செலவினங்கள் மீதான அரசாங்க செலவினம் 2022 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 12.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 35.1 பில்லியனாகக் காணப்பட்டது. அச்சுப் பொருட்களின் விலைகள் மற்றும் பொருட்கள் இறக்குமதிக்கான தீர்வைக் கொடுப்பனவுக்கான அதிகரிப்பு என்பன காரணமாக 2022 இன் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடுகையில் இலவச பாடப்புத்தகங்கள் மீதான செலவினம் ரூபா 836 மில்லியனிலிருந்து ரூபா 18.1 பில்லியனாக அதிகரித்தது.

வாழ்வாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2022 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 127.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 155.6 பில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது. சமுர்த்தி, முதியோர், அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகள் உள்ளடங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான காசு மானியங்கள் மீதான செலவினம் இரண்டு வகையான நன்மைகளைப் பெறுவதை தடுக்கும் வகையில் விஞ்ஞான ரீதியான அடிப்படையில் பயனாளர்கள் தேர்வு இடம்பெற்றதன் விளைவாக குறைவடைந்தது. இதற்கமைவாக 2023 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுக்காக ரூபா 114.3 பில்லியன் செலவிடப்பட்டது.

**அட்டவணை 1.13 : 2023 சனவரி முதல் செப்தெம்பர் வரை நலன்புரி செலவினம்**

ரூபா.மில்

| நிகழ்ச்சித்திட்டம் | சன – செப் 2022 | சன – செப் 2023 |
|---|---|---|
| **சுகாதாரம் மற்றும் போசாக்கு** | **51,827** | **97,074** |
| அனைவருக்கும் இலவச மருத்துவம் | 48,425 | 93,659 |
| திரிபோசா நிகழ்ச்சித்திட்டம் | 226 | 851 |
| முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு | 73 | 204 |
| போசன மல்ல | 3,103 | 2,360 |
| **கல்வி** | **12,770** | **35,127** |
| இலவச பாடப் புத்தகங்கள் | 836 | 18,074 |
| இலவச பாடசாலை சீருடைகள் | 1,993 | 2,536 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 3,407 | 5,200 |
| பாடசாலை போசணை உணவுத் திட்டம் | 3,342 | 7,228 |
| கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் | 900 | - |
| தரம் ஐந்து புலமைப் பரிசில்கள் | 321 | 586 |
| மகாபொல புலமைப் பரிசில்கள் | 650 | 508 |
| உதவுதொகைகள் | 710 | 896 |
| அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான உதவி | 611 | 99 |
| **வாழ்வாதார உதவி** | **127,043** | **155,614** |
| உர மானியம் | 33,038 | 39,905 |
| சமுர்த்தி நிவாரணம் | 93,337 | 114,299 |
| தேயிலை, இறப்பர், தென்னை, மரமுந்திரி மற்றும் ஏனைய பயிர்களுக்கான மானியம் | 557 | 1,258 |
| ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கான உதவி | 71 | 152 |
| கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவி | 40 | - |
| **சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலை** | **22,017** | **24,639** |
| மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி | 5,795 | 5,634 |
| முதியோருக்கான உதவி | 12,056 | 14,787 |
| ரணவிரு பெற்றோர் சமூகப் பராமரிப்பு | 1,726 | 1,694 |
| உணவு உதவி, வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 40 | 24 |
| வருமானம் ஈட்டாத பாதையில் பேரூந்து சேவை | 2,400 | 2,500 |
| **மொத்தம்** | **213,657** | **312,454** |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

பொது முதலீடு

நெடுஞ்சாலைகள், நீர்வழங்கல், நீர்ப்பாசனம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் கல்வித் துறை ஆகியவற்றை உள்ளடக்கிய முன்னுரிமைத் துறைகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான செலவினம் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய ரூபா 412 பில்லியனாக காணப்பட்டது. இவற்றில் பின்வருவன உள்ளடங்கும்.

- பாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் அதிவேகப் பாதைகள் அபிவிருத்திக்காக ரூபா 173 பில்லியன்.
- அனைவருக்கும் போதியளவு மற்றும் பாதுகாப்பான குடிநீரை உறுதிப்படுத்துவதற்காக ரூபா 29.5 பில்லியன்.
- போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறன், திறன்விருத்தி மற்றும் இணைப்பினை மேம்படுத்துவதற்காக ரூபா 44 பில்லியன்.
- நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிய விதை வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய பெறுமதிச் சங்கிலியின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக ரூபா 15.9 பில்லியன்.
- பல்நோக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் கால்வாய்கள் நிர்மாணத்தின் மூலம் விவசாயத் துறைக்குத் தேவையான நீரினை உறுதிப்படுத்துவதற்கு ரூபா 28 பில்லியன்.
- கல்வித்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தரமேம்பாட்டுக்காக ரூபா 18.6 பில்லியன்.

## 1.4 திறைசேரி செயற்பாடுகள்

### பொதுத் திறைசேரியின் காசுப் பாய்ச்சல் செயலாற்றுகை

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமானம் மற்றும் பிற வருமதிகள் வடிவில் பொதுத் திறைசேரி அடையப்பெற்ற காசு உட்பாய்ச்சல்கள் ரூபா 2,028.2 பில்லியன் ஆகிய அதேவேளை, இத் தொகையானது மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 2,446.5 பில்லியனில் இருந்து 82.9 சதவீதத்தை எட்டியுள்ளது. மேலும் இத் தொகை 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1,361.9 பில்லியனினை விட 49 சதவீத அதிகரிப்பாகும். இதற்கிடையில், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், மீண்டெழும் மற்றும் பொது முதலீடு ஆகிய இரண்டிற்குமான காசுப் பாய்ச்சல் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2,743 பில்லியனுடன் ஒப்பிடும்போது 43 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 3,936 பில்லியனாகக் காணப்பட்டது.

2022 செப்தெம்பர் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,381.1 பில்லியனாகக் காணப்பட்ட தேறிய பணப் பற்றாக்குறையானது, முக்கியமாக தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் பொது முதலீடு ஆகியவை முறையே 52.2 சதவீதமாகவும் 5.4 சதவீதமாகவும் அதிகரித்ததன் காரணமாக 2023 செத்தெம்பர் 30 ஆம் திகதி அன்று 38.1 சதவீத அதிகரிப்புடன் ரூபா 1,907.9 பில்லியனினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், 2023 செப்தெம்பர் 30 ஆம் திகதியன்று ரூபா 48.2 பில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டு செப்தெம்பர் 30 ஆம் திகதியன்று ரூபா 183.5 பில்லியன் வரையிலான இறுதியான எதிர்மறையான பண இருப்பு அதிகரிப்பு, ரொக்க வரவுகளின் அதிகரிப்பின் விளைவாக, இந்த காலகட்டத்தில் வருவாய் மற்றும் பிற பெறுகைகளுடன் நிகர கடன் வாங்குதலின் அதிகரிப்பைக் குறிக்கும்.

**அட்டவணை 1.14 : அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று**

ரூபா.பில்லியன்

| விபரம் | சனவரி – செப்தெம்பர் | | |
|---|---|---|---|
| | 2022 | 2023 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -831.6 | -84.2 | -84.2 |
| வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 1,361.9 | 2,446.6 | 2,028.1 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -2,232.2 | -3,556.7 | -3,397.5 |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல்* | -510.8 | -749.1 | -538.5 |
| தேறிய காசு மிகை/(பற்றாக்குறை) | -1,381.1 | -1,859.2 | -1,907.9 |
| மொத்த பெறுகை | 3,017.4 | 3,193.6 | 6,936.1 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | -995.3 | -1,228.7 | -4,773.7 |
| தேறிய பெறுகை | 2,022.1 | 1,964.8 | 2,162.4 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச பிணை முறிகளில் இருந்தான வருமான மீதி | 4.50 | - | - |
| சரிபடுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புகள், ஏனைய மாற்றல்கள் போன்றன) | 137.9 | - | 13.2 |
| **இறுதி காசு மீதி** | **-48.2** | **21.4** | **183.5** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

** 2023 செப்தெம்பர் 30 அன்றுள்ளவாறு கருத்திட்ட, நிகழ்ச்சித்திட்ட கடன் பகிர்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

**அரசாங்கப் படுகடன் முகாமைத்துவம்**

2023 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் வரையறையானது ரூபா 4,979 பில்லியனாக இருந்ததுடன், பின்னர் இது உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தை (Domestic Debt Optimization - DDO) செயல்படுத்துவதற்கு வசதியாக ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ரூபா 13,979 பில்லியனாக உயர்த்தப்பட்டது. 2023 சனவரி 01 ஆந் திகதி முதல் செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் அரசு வாங்கிய கடன்கள் ரூபா 6,833.9 பில்லியனாக (புத்தக மதிப்புக் காலம்) பதிவு செய்யப்பட்டுள்ளது, இது குறித்த காலப்பகுதியில் வங்கி மேலதிகப் பற்று மூலம் நிதியுதவி குறைந்ததைக் கருத்தில் கொண்டு ரூபா 6,732.7 பில்லியனாகக் கருதப்படலாம். ஆண்டின் தொடக்கத்தில் நிலவிய ரூபா 84.2 பில்லியனில் இருந்து, 2023 செப்தெம்பர் 30 நிலவரப்படி ரூபா 183.5 பில்லியன் நேர்மறையான மீதியாக இருந்தது. படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியைச் செயற்படுத்துவதற்கும் குறித்த காலப்பகுதியில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் பணப்புழக்கச் செயல்பாடுகளுக்கு நிதியளிப்பதற்காக 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி அன்றுள்ளவாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை உள்ளடக்கிய மொத்த கடன் பயன்பாடு முறையே ரூபா 6,732.7 பில்லியனாகவும் ரூபா 595.4 பில்லியனாகவும் காணப்பட்டது.

இவ்வாறு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் இருப்புக்கள் மற்றும் தற்காலிக முன்பணங்கள், இலங்கை அபிவிருத்தி முறி பங்குகளின் ஒரு பகுதி மற்றும் திறைசேரி முறிகளின் ஒரு பகுதி ஆகியன நீண்டகால முதிர்ச்சியுடன் திறைசேரி முறிகளாகத் தொடரப்படும்.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்தக் கடன் வாங்கியதில் இருந்து 90 சதவீதமாக இந்தக் காலகட்டத்தில் உள்நாட்டுக் கடன் பயன்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.15 : 2023 சனவரி – செப்தெம்பர் வரையான மொத்த உள்நாட்டுக் கடன்**

ரூபா. பில்லியன்

| மூலங்கள் | சன – செப் 2023 |
|---|---|
| திறைசேரி முறிகள் | 6,833.6 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 0.3 |
| **மொத்தம்** | **6,833.9** |
| வங்கி மேலதிகப்பற்றினைத் தீர்த்தல் | -84.2 |
| வெளிநாட்டு நாணய வங்கி அலகின் திருப்பிச் செலுத்துகை | -17.0 |
| **உள்நாட்டுக் கடன் பயன்பாடு** | **6,732.7** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**அட்டவணை 1.4: உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை மாற்றத்திற்கு பின்னரான மொத்த உள்நாட்டுப் படுகடன் (2023 சனவரி – செப்தெம்பர்)**




*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

### 1.5 வெளிநாட்டு நிதி உதவி

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆதாரவினை வலுப்படுத்துவதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை முறையே பொருளாதார உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமெரிக்க டொலர் 350.0 மில்லியனினையும் மீட்டெடுத்தல், உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத் திருப்பம் மேம்பாட்டுக் கொள்கை நிதி உதவி நிகழ்சித்திட்டத்தின் (RESET) கீழ் அமெரிக்க டொலர் 247.6 மில்லியனையும் வழங்கியுள்ளன.

இருதரப்பு திட்டத்தில், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் இந்தியா, நெதர்லாந்து, அரபு பொருளாதார அபிவிருத்திக்கான சவுதி நிதியம் மற்றும் ஜர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்க டொலர் 158.0 மில்லியன் மதிப்புள்ள வெளிநாட்டு நிதியுதவிகள் பெறப்பட்டுள்ளன. மேலும் இந்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற அவசர கடன் உதவித்திட்டமானது 2023 இன் முதல் காலாண்டில் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான வெளிநாட்டு நாணயத் தேவையை கணிசமாகக் குறைக்க உதவியது. ஆகவே, 2023 ஜனவரி 1 முதல் செப்தெம்பர் 30 வரை அமெரிக்க டொலர் 1,516.3 மில்லியன் பெறுமதிமிக்க கணிசமானளவான வெளிநாட்டு நிதியுதவிகளை அரசாங்கத்திற்கு பெற முடிந்தது.

#### வெளிநாட்டு நிதி கடப்பாடுகள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் மேற்கொண்டிருந்த 13 ஒப்பந்தங்கள் மூலம் அரசாங்கம் 1,479 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு நிதியுதவியாக பெற்றது. இது ஐஎம்எப்-இஎப்எப் ஏற்பாட்டின் கீழ் பெறப்பட்ட அமெரிக்க டொலர் 333.0 மில்லியன், ஆசிய அபிவிருத்தி வங்கியால் நீடிக்கப்பட்ட பொருளாதார உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறப்பட்ட அமெரிக்க டொலர் 350.0 மில்லியன், ரீசெட் அபிவிருத்தி கொள்கை நிதிஉதவிக்காக பெறப்பட்ட அமெரிக்க டொலர் 495.6 மில்லியன், சர்வதேச அபிவிருத்தி கழகத்தின் நீடித்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக பெறப்பட்ட அமெரிக்க டொலர் 196.3 மில்லியன் மற்றும் ஜப்பான் அரசாங்கம், கொரியா அரசாங்கம், அமெரிக்க அரசாங்கம் மற்றும் சர்வதேச அபிவிருத்தி கழகம் ஆகியவற்றுடன் மூன்றாவது காலாண்டின் முடிவில் ஒன்பது பாரிய ஒப்பந்தங்களில் நுழைந்ததன் மூலம் அதிகாரப்பூர்வ அபிவிருத்தி உதவி கடப்பாடுகளாக மொத்தமாக பெறப்பட்ட 73.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

அட்டவணை 1.16: விதிமுறைகளுடன் வெளிநாட்டு நிதியுதவி கடப்பாடுகள் -2023 சனவரி 1 முதல் செப்தெம்பர் 30 வரை

| அபிவிருத்தி பங்காளர்கள்மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் | சாதன வகைகள் | ஒப்பந்த திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் / சாதனப் பெயர் | கடப்பாட்டுத் தொகை (மில்லியன்) நாணயம் | நிதிப் பெறுமானத்தில் | | | | | | வேறு முறையில் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சாதன நாணயம் | ரூபா | அ.டொலர் | வட்டி வகை | ஆண்டு வீதம் (%) | வரம்பு (100 அடிப்படையிலான புள்ளிகள்) | பிற விதிப் பனவுகள் | கருணைக காலம் (வருடங்கள்) | ஒப்ப மிட்ட திகதி யிலிருந்து முதிர்ச்சி/ கிடைக்கக் கூடிய காலம் (வருடங்கள்) |
| இருதரப்பு | | | | | | | | | | | | | |
| ஜப்பான் | மானியம் | 2/22/2023 | ஜப்பானிய பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எரிபொருள் மானிய உதவி | ஜப்பான் யென் | 5,000.0 | 13,423.0 | 37.1 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| ஜப்பான் | மானியம் | 4/26/2023 | தொற்று கழிவு முகாமையை மேம்படுத்தற் கருத்திட்டத்திற்கு உதவி வழங்கல் | ஜப்பான் யென் | 503.0 | 1,211.7 | 3.8 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| ஜப்பான் | மானியம் | 8/9/2023 | மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசில் கருத்திட்டம் | ஜப்பான் யென் | 284.0 | 636.2 | 2.0 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| கொரியா | மானியம் | 5/31/2023 | இலங்கையின் தென் பகுதியில் மிதக்கும் சூரிய ஒளிமின்னழுத்த (PV) பைலட் திட்டம் (சந்திரிகா வெவா மற்றும் கிரிப்பன் வெவ, தலா 1 மெகா வாட்ஸ்) | வொன் | 6,830.0 | 1,524.5 | 5.2 | ஏற்புடையதல்ல | | | | | 1 |
| கொரியா | மானியம் | 5/12/2023 | இலங்கையில் நியகமவில் உள்ள தொழிற் சந்தை தேவை உந்துதல் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையை வலுப்படுத்துதல் | வொன் | 2,150.0 | 516.2 | 1.6 | ஏற்புடையதல்ல | | | | | 1 |
| கொரியா | மானியம் | 2/15/2023 | இலங்கையின் வடகிழக்கு மற்றும் மத்திய பிரதேசங்களில் சமூக அடிப்படையிலான சுற்றுலா அபிவிருத்தி திட்டம் | வொன் | 400.0 | 117.8 | 0.3 | ஏற்புடையதல்ல | | | | | 1 |

| அபிவிருத்தி பங்காளர்கள்மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் | சாதன வகைகள் | ஒப்பந்த திகதி | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் / சாதனப் பெயர் | கடப்பாட்டுத் தொகை (மில்லியன்) நாணயம் | நிதிப் பெறுமானத்தில் | | | | | | வேறு முறையில் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சாதன நாணயம் | ரூபா | அ.டொலர் | வட்டி வகை | ஆண்டு வீதம் (%) | வரம்பு (100 அடிப்படையிலான புள்ளிகள்) | பிற விதிப் பனவுகள் | கருணைக காலம் (வருடங்கள்) | ஒப்ப மிட்ட திகதி யிலிருந்து முதிர்ச்சி/ கிடைக்கக் கூடிய காலம் (வருடங்கள்) |
| ஐக்கிய அமெரிக்கா | மானியம் | 7/28/2023 | ஜனநாயகமிக்க, வளமான, மற்றும் நெகிழ்ச்சியான இலங்கை (அபிவிருத்தி) | ஐ.அ.டொ | 13.2 | 4,356.3 | 13.2 | ஏற்புடையதல்ல | | | | | 4 |
| ஐக்கிய அமெரிக்கா | மானியம் | 8/17/2023 | ஜனநாயகமிக்க, வளமான, மற்றும் நெகிழ்ச்சியான இலங்கை (அபிவிருத்தி) | ஐ.அ.டொ | 6.0 | 1,926.6 | 6.0 | ஏற்புடையதல்ல | | | | | 4 |
| **பல்தரப்பு** | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 5/29/2023 | பொருளாதார உறுதிப்பாட்டு திட்டம் | ஐ.அ.டொ | 350.0 | 104,689.1 | 350.0 | மாறக் கூடியது | எஸ்ஓஎப் ஆர் | 2 | அர்ப்பணிப்பு கட்டணம் 0.75% | 3.5 | 8 |
| சர்வதேச அபிவிருத்தி கழகம் | கடன் | 6/28/2023 | மீள்ச்சி, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதாரத் திருப்பம் (ரீசெட்) மேம்பாட்டுக் கொள்கை நிதியுதவி | சிங்கப்பூர். டொலர் | 371.2 | 153,049.4 | 495.6 | வட்டி இல்லை | | | அர்ப்பணிப்பு கட்டணம் 0.5% | 6 | 12 |
| சர்வதேச அபிவிருத்தி கழகம் | கடன் | 9/21/2023 | சமூக பாதுகாப்பு திட்டம் | சிங்கப்பூர். டொலர் | 148.5 | 63,724.8 | 196.3 | நிலையான | 1.25 | த.இ. | சேவை கட்டணம் 0.75%<br>அர்ப்பணிப்பு கட்டணம் 0.5% | 5 | 30 |
| சர்வதேச அபிவிருத்தி கழகம் | மானியம் | 7/6/2023 | இலங்கை - பொது நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் திட்டம் | ஐ.அ.டொ | 4.2 | 1,289.3 | 4.2 | ஏற்புடையதல்ல | | | | | 3 |
| சர்வதேச அபிவிருத்தி கழகம் | கடன் | 3/20/2023 | இலங்கையின் 2023-26 விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாடு Arrangement from IMF | சிங்கப்பூர். டொலர் | 254.0 | 122,055.3 | 364.0 | தொகை அடிப்படையில் | | | அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%<br>சேவைக் கட்டணம் 0.5% | 4.5 | 10 |
| **மொத்தம்** | | | | | | **468,520.2** | **1,479.3** | | | | | | |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
*குறிப்புகள் எஸ்ஓஎப்ஆர் =பாதுகாப்பான ஒரே இரவில் நிதியுதவி விகிதம்,*
*வேறுபட்ட நாணயங்களில் உள்ள நிதி மதிப்புகள் ஒவ்வொரு ஒப்பந்த தேதியின் நடைமுறையில் உள்ள நாணயமாற்று விகிதங்களில் ஐ.அ.டொலராகவும் மற்றும் இலங்கை ரூபாகவும் மாற்றப்பட்டுள்ளன.*

#### வெளிநாட்டு நிதி வழங்கல்கள் மற்றும் பயன்பாடு

2023 ஜனவரி 1 முதல் செப்டம்பர் 30 வரையிலான காலகட்டத்தில் மொத்த வெளிநாட்டு நிதி வழங்கல் 1,516.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதில், 2023-26 ஆம் ஆண்டுக்கான ஐஎம்எப்-இஎப்எப் திட்டத்தின் முதல் தவணையாக ஐ.அ.டொ 343.7 மில்லியன் பெறப்பட்டது, 1,006.1 மில்லியன் ஐ.அ.டொ ஏனைய பலதரப்பு ஏஜென்சிகளிடமிருந்தும் மீதமுள்ள 155.9 மில்லியன் ஐ.அ.டொலர் இருதரப்பு ஏஜென்சிகளிடமிருந்தும், 10.6 மில்லியன் ஐ.அ.டொலர்கள் மானியங்கள் மூலமாகவும் வழங்கப்பட்டது.

2023 இல் பதிவுசெய்யப்பட்ட பணப்பரிவர்த்தனைகளில் பெரும்பாலானவை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்டன, இது மொத்த வழங்கல்களில் 35 சதவீதம் ஆகும், அதைத் தொடர்ந்து உலக வங்கி (29 சதவீதம்) ஐஎம்எப் (23 சத வீதம்) மற்றும் இந்தியா (9 சதவீதம்) ஆக இருந்தன.

**அட்டவணை 1.17: 2023 சனவரி 1 முதல் செப்டம்பர் 30 வரை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கல்கள்**

| அபிவிருத்தி பங்காளி | வழங்கல்கள் * (அ.டொ மில்லியன்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **155.9** | **2.1** | **158.0** |
| இந்தியா | 142.5 | - | 142.5 |
| நெதர்லாந்து | 7.4 | - | 7.4 |
| அரபு பொருளாதார அபிவிருத்திக்கான சவூதி நிதியம் | 5.6 | - | 5.6 |
| ஜேர்மன் | - | 2.1 | 2.1 |
| பிரான்ஸ் | 0.4 | - | 0.4 |
| **பல்தரப்பு** | **1,349.8** | **8.5** | **1,358.3** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 529.7 | 0.1 | 529.8 |
| உலக வங்கி | 434.4 | 8.4 | 442.8 |
| சர்வதேச நாணய நிதியம் | 343.7 | – | 343.7 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 22.9 | - | 22.9 |
| ஓபெக் நிதி | 11.0 | - | 11.0 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 8.1 | - | 8.1 |
| **மொத்தம்** | **1,505.7** | **10.6** | **1,516.3** |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
*குறிப்பு: வெவ்வேறு நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதிவழங்கல்களை அமெரிக்க டொலரில் மாற்றுவதற்கு, 2023 செப்டம்பர் 27 இல் காணப்பட்ட நாணய மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன.*
* *தற்காலிகமானது.*

**வரைபு 1.5 : 2023 சனவாரி 01 – செப்தெம்பர் 30 வரையில் துறைரீதியாக வழங்கப்பட்ட நிதிப் பகிர்வுகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**




*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
**ஏனையவை = கல்வி மற்றும் பயிற்சி, பாதுகாப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், நீர்ப்பாசனம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள், சுற்றுச்சூழல், கிராமப்புற மேம்பாடு, மனிதாபிமான உதவி, பேரிடர் மேலாண்மை, SME அபிவிருத்தி, நில அபிவிருத்தி, தோட்டம்*

**உறுதியளிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாத மீதி**

2023 செப்டம்பர் 30 நிலவரப்படி, அடுத்த 3 - 5 ஆண்டுகளில் பயன்படுத்தப்படும் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட கடன்களில் இருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதியுதவியின் மொத்தம் 6.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். மீதியின் பெரும்பகுதி சீனாவுடனான கருத்திட்டங்களிலிருந்தும், மற்றவை முறையே உலக வங்கி, ஜப்பான், இந்தியா மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிலிருந்தும் வழங்கப்பட வேண்டும். உறுதியளிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாத மீதியில், கிட்டத்தட்ட 21 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையிலும், 15 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்காகவும், 11 சதவீதம் தரைவழிப் போக்குவரத்துத் துறைக்காகவும் பயன்படுத்தப்பட உள்ளது.

**வரைபு 1.6 : பிரதான அபிவிருத்திப் பங்காளர்களினால் (2023 செப்தெம்பர் 30 அன்று உள்ளவாறு) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உறுதியளிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாத மீதி (ஐ.அ.டொ.மில்லியன்)**




*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 1.7 : பிரதான அபிவிருத்திப் பங்காளர்களினால் (2023 செப்தெம்பர் 30 அன்று உள்ளவாறு) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு துறை ரீதியாக உறுதியளிக்கப்பட்டு பகிர்தளிக்கப்படாத மீதி (ஐ.அ.டொ.மில்லியன்)**




*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
** ஏனையவை = அவுஸ்ரேலியா, ஐக்கிய இராட்சியம், ஹங்கேரி, குவைட், கொரியா, ரஷ்யா, ஜேர்மன், டென்மார்க், ஸ்பெயின், ஆஸ்திரியா, ஐரோப்பிய முதலீட்டு வங்கி, IFAD*

**வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்**

2023 செப்டம்பர் இறுதியில் மத்திய அரசின் மொத்த வெளிநாட்டுக் கடன் 36.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

2023 ஜனவரி 1 முதல் செப்டம்பர் 30 வரையிலான மொத்தக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் அமெரிக்க டொலர் 912.8 மில்லியன் ஆகும், இதில் 631.9 மில்லியன் அமெரிக்க டொலர் முதன்மைத் தொகையினை திருப்பிச் செலுத்துதலுக்குப் பதிலாகவும், மீதமுள்ள 280.9 மில்லியன் அமெரிக்க டொலர் வட்டி செலுத்துவதற்காகவும் இருந்தது.

அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இடைக்காலக் கொள்கைக்கு இணங்க, இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட பாதிக்கப்பட்ட கடன்களின் வெளிநாட்டு கடனைச் செலுத்துவது 2022 ஏப்ரல் 12ஆந் திகதி தொடங்கும் இடைக்காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2023 செப்டம்பர் இறுதிக்குள் செலுத்தப்படாத கடன் சேவையாக முதன்மை தொகையான 4,229 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வட்டித் தொகையாக 1,819* மில்லியன் அமெரிக்க டொலர்களும் சேர்ந்துள்ளன.

# பொருளாதார முன்நோக்குகைகள் | 02

### 2.1 மேன்நோக்கு

இலங்கைப் பொருளாதாரம், குறிப்பாக நிதி, கடன் அல்லாத வரவுகள் மற்றும் நாணயத் துறைகளில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கட்டமைப்பு சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதன் மூலம் பணவீக்கம், கையிருப்பு நிலை மற்றும் அரசிறை மாற்றங்கள் உள்ளிட்ட பல பேரின பொருளாதார முனைகளில் ஸ்திரத்தன்மையைக் காட்டத் தொடங்கியுள்ளது. மீட்சிக்கான அறிகுறிகளாக காணப்பட்டவை: (i) 2023 ஒக்தோபரில் பணவீக்கமானது முந்தைய ஆண்டில் உச்சமாக இருந்த 70 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதமாகக் குறைந்துள்ளதுமை (ii) சர்வதேச கையிருப்பு 2022 செப்தெம்பரில் 1.8 பில்லியன் ஐ.அ.டொலரில் இருந்து 2023 செப்தெம்பரில் 1.7 பில்லியன் ஐ.அ.டொலரால் அதிகரித்து 3.5 பில்லியன் ஐ.அ.டொலராக உயர்ந்துள்ளதுமை. (iii) 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஆரம்ப வரவு செலவுத் திட்ட மீதியானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் 317.0 பில்லியன் ரூபா பற்றாக்குறையிலிருந்து 123.8 பில்லியன் ரூபா மிகையினைப் பதிசெய்துள்ளது. மற்றும் (iv) கடன் அல்லாத பணவனுப்பல்களின் உள்வருகை மற்றும் சுற்றுலாவும் இரட்டிப்பாகியுள்ளது.

எவ்வாறெனினும், பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளது. முக்கியமாக கைத்தொழில் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 3.6 சதவீத சுருக்கத்திலிருந்து 7.9 சதவீதமாக சுருங்கியது. வேலையின்மை வீதம் 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 4.6 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 5.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**வரைபு 2.1 : மொ.உ.உ. வளர்ச்சி**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

இலங்கை மத்திய வங்கியினால் ஏற்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாடு 2023 ஒக்தோபர் ஆரம்பத்தில் கொள்கை வீதங்களை 550 அடிப்படை புள்ளிகளால் குறைப்பதன் மூலம் 2023 யூன் முதல் தளர்த்தப்பட்டது. அதன்படி, துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி வீதம் (SLFR) முறையே 10.00 சதவீதம் மற்றும் 11.00 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. எவ்வாறாயினும், தனியார் துறைக்கான கடன் 2022 செப்தெம்பர் மாத இறுதியில் பதிவு செய்யப்பட்ட 7,577 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2023 செப்தெம்பர் இறுதியில் 5.4 வீதத்தால் சுருங்கி 7,168 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பங்குச்சந்தை கலவையான செயல்திறனைக் காட்டிய அதே வேளையில் கடந்த நான்கு மாதங்களில் ஏற்றம் கண்டது.

இதற்கிடையில் வெளிவாரித் துறை கலவையான செயல்திறனைக் காட்டியது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வணிக ரீதியான வர்த்தகப் பற்றாக்குறையானது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 4,093 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது ஏற்றுமதியை விட வணிக இறக்குமதி வேகமாக வீழ்ச்சியடைந்தமையால் 3,342 மில்லியன் டொலராகக் குறைந்தது.. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலாவிலிருந்து கிடைக்கும் வருவாய் 66.8 சதவீதம் அதிகரித்து 1,456.7 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை இரு மடங்காகி 1.0 மில்லியனாக உயர்ந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் 68.8 சதவீதம் அதிகரித்து 4,345.1 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. இருப்பினும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் திரட்சி குறைவடைந்துள்ளது.

**வரைபு 2.2 : மொ.உ உற்பத்தி வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

### 2.2 பொருளாதார வளர்ச்சி

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பொருளாதாரம் 7.9 சதவீத சுருக்கத்தைப் பதிவு செய்தது. கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் சுருங்கிய அதே நேரத்தில் விவசாயத் துறை சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்ததுள்ளது

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 6.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் கைத்தொழில்துறை 18.3 சதவீதம் சுருங்கியுள்ளது. இது கட்டுமானம், உற்பத்தி மற்றும் சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க சுருக்கத்தை பிரதிபலிக்கின்றது. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சேவைகள் துறை 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 0.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 3.2 சதவீதத்தால் ஓரளவு சுருங்கியுள்ளது. நிதிச் சேவைகள், தொழில்முறை சேவைகள் மற்றும் கணினி நிரலாக்க நடவடிக்கைகள் ஆகியவற்றின் வீழ்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகும். எவ்வாறெனினும், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் விவசாயத் துறை 2.2 சதவீதம் விரிவடைந்ததுள்ளது.

பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில் உற்பத்திப் பொருட்கள் மீதான வரிகளற்ற மானியம் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் 20.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 14.2 சதவீதம் சுருங்கியுள்ளது.

வரைபு 2.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்)

ரூபா.மில்லியன்

| | துறை | 2020 | 2021 | 2022(ஆ) | முதல் அரையாண்டு | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2022(ஆ) | 2023(அ) | 2022(ஆ) | 2023(அ) |
| | **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **941,046** | **949,929** | **906,505** | **444,471** | **454,251** | **-6.2** | **2.2** |
| 1 | தானியங்கள் (அரிசி நீங்கலாக) | 21,342 | 21,949 | 17,200 | 8,266 | 10,523 | -32.2 | 27.3 |
| 2 | நெல் | 121,663 | 107,359 | 93,377 | 40,664 | 52,702 | -30.6 | 29.6 |
| 3 | மரக்கறிகள் | 111,088 | 109,147 | 99,960 | 49,209 | 51,413 | -10.2 | 4.5 |
| 4 | கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 4,021 | 3,729 | 3,797 | 1,934 | 1,973 | 3.4 | 2.0 |
| 5 | பழங்கள் | 81,823 | 72,949 | 73,310 | 35,795 | 37,245 | -0.3 | 4.1 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும் பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 92,197 | 102,490 | 111,315 | 55,755 | 52,072 | 13.8 | -6.6 |
| 7 | தேயிலை (பச்சை இலை) | 67,971 | 73,741 | 62,005 | 32,839 | 32,877 | -17.4 | 0.1 |
| 8 | ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,613 | 1,352 | 1,229 | 614 | 614 | -9.1 | -0.1 |
| 9 | நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 93,776 | 98,021 | 101,235 | 46939 | 50,300 | 3.9 | 7.2 |
| 10 | இறப்பர் | 24,081 | 25,571 | 23,863 | 12052 | 12,342 | -13.5 | 2.4 |
| 11 | ஏனைய குறுங்காலப் பயிர்கள் | 29,781 | 26,963 | 27,513 | 13631 | 13,522 | 1.0 | -0.8 |
| 12 | விலங்கு வேளாண்மை | 86,907 | 94,039 | 81,874 | 43997 | 41,384 | -4.9 | -5.9 |
| 13 | தாவர வளர்ச்சி | 622 | 813 | 881 | 365 | 415 | 20.4 | 13.5 |
| 14 | விவசாயத் துறைக்கான ஒத்தழைப்புச் செயற்பாடுகள் | 26,102 | 29,810 | 34,202 | 14788 | 16,479 | 6.5 | 11.4 |
| 15 | காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 42,587 | 44,440 | 51,611 | 24,465 | 19,769 | 17.8 | -19.2 |
| 16 | சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 111,307 | 112,814 | 95,451 | 51,747 | 49,310 | -7.5 | -4.7 |
| 17 | நன்நீர் மீன் பிடிப்பு மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு | 24,166 | 24,742 | 27,682 | 11,407 | 11,313 | 1.4 | -0.8 |
| | **கைத்தொழில்** | **3,724,566** | **3,937,880** | **3,309,764** | **1,851,593** | **1,512,276** | **-6.6** | **-18.3** |
| 18 | கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும் | 284,079 | 287,969 | 198,661 | 124,366 | 77,899 | -13.4 | -37.4 |
| 19 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 980,863 | 1,014,150 | 869,715 | 455,050 | 433,410 | -9.8 | -4.8 |
| 20 | பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 416,312 | 473,911 | 512,399 | 269,466 | 235,823 | 10.2 | -12.5 |
| 21 | மரம் மற்றும் தயாரிப்புக்கள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 32,831 | 35,579 | 29,758 | 14,736 | 10,281 | -12.4 | -30.2 |
| 22 | காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 51,896 | 56,811 | 52,069 | 30,219 | 26,858 | -4.1 | -11.1 |
| 23 | கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 22,108 | 15,492 | 6,474 | 3,470 | 10,718 | -56.3 | 208.9 |
| 24 | இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 92,157 | 95,793 | 82,350 | 44,523 | 41,513 | -9.0 | -6.8 |
| 25 | இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 81,182 | 97,436 | 67,507 | 37,552 | 29,014 | -13.5 | -22.7 |
| 26 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 102,685 | 119,973 | 85,188 | 50,800 | 43,908 | -15.7 | -13.6 |
| 27 | அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலோக உற்பத்தி தயாரிப்புகள் | 77,859 | 81,174 | 58,781 | 32,262 | 22,276 | -18.5 | -31.0 |
| 28 | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள் | 65,187 | 73,090 | 59,181 | 27,816 | 21,157 | -3.1 | -23.9 |
| 29 | தளபாட உற்பத்திகள் | 81,651 | 82,694 | 60,837 | 44,481 | 34,519 | -8.3 | -22.4 |

வரைபு 2.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்)

ரூபா.மில்லியன்

| | துறை | 2020 | 2021 | 2022(ஆ) | முதல் அரையாண்டு | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2022(ஆ) | 2023(அ) | 2022(ஆ) | 2023(அ) |
| 30 | ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள் பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 87,586 | 101,048 | 79,088 | 47,051 | 38,718 | -9.5 | -17.7 |
| 31 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 180,176 | 188,924 | 177,783 | 94,476 | 86,674 | 2.2 | -8.3 |
| 32 | நீர் சேகரிப்பு, துப்புரவாக்கல் மற்றும் விநியோகம் | 15,908 | 13,083 | 13,168 | 6,852 | 6,531 | 13.8 | -4.7 |
| 33 | கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 28,960 | 27,992 | 29,088 | 13,374 | 13,417 | 3.2 | 0.3 |
| 34 | நிர்மாணம் | 1,123,127 | 1,172,761 | 927,719 | 555,101 | 379,559 | -7.5 | -31.6 |
| | **சேவைகள்** | **7,166,506** | **7,414,251** | **7,265,095** | **3,590,144** | **3,476,316** | **0.2** | **-3.2** |
| 35 | மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 1,650,889 | 1,675,083 | 1,672,370 | 845,046 | 840,718 | 1.4 | -0.5 |
| 36 | களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 1,313,312 | 1,325,233 | 1,372,116 | 661,176 | 686,566 | 0.5 | 3.8 |
| 37 | தபால், கூரியர்/ விரைவுத் தபால் செயற்பாடுகள் | 17,620 | 18,714 | 19,780 | 9,646 | 10,006 | 7.8 | 3.7 |
| 38 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 128,556 | 130,743 | 166,059 | 84,125 | 96,620 | 27.1 | 14.9 |
| 39 | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலி/ ஒளி தயாரிப்புக்கள் | 43,841 | 42,161 | 37,510 | 22,515 | 19,585 | -5.5 | -13.0 |
| 40 | தொலைத்தொடர்பு | 118,845 | 135,663 | 139,919 | 70,062 | 67,103 | 6.8 | -4.2 |
| 41 | தகவல் தொ.நு. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 194,893 | 243,971 | 238,455 | 124,263 | 114,525 | 3.3 | -7.8 |
| 42 | நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் | 557,357 | 596,106 | 530,274 | 302,360 | 221,744 | 1.7 | -26.7 |
| 43 | காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 117,595 | 148,665 | 78,509 | 48,001 | 36,766 | -34.6 | -23.4 |
| 44 | வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 604,259 | 630,570 | 554,473 | 295,187 | 260,286 | -2.0 | -11.8 |
| 45 | தொழில்வாய்மை சேவைகள் | 287,781 | 301,890 | 289,841 | 126,094 | 117,735 | -1.1 | -6.6 |
| 46 | பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 616,176 | 621,834 | 629,213 | 295,419 | 293,805 | 2.2 | -0.5 |
| 47 | கல்வி | 284,751 | 290,475 | 301,510 | 153,784 | 158,405 | 2.9 | 3.0 |
| 48 | மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 246,735 | 260,482 | 238,638 | 107,157 | 101,204 | 6.0 | -5.6 |
| 49 | ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 983,900 | 992,662 | 996,429 | 445,310 | 451,247 | -2.2 | 1.3 |
| | **மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில்** | **11,832,118** | **12,302,060** | **11,481,364** | **5,886,208** | **5,442,843** | **-2.5** | **-7.5** |
| | **(+) பொருட்கள் மீதான வரிகள் கழி – மானியங்கள்** | **763,432** | **735,874** | **536,485** | **313,266** | **268,784** | **-20.1** | **-14.2** |
| | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில்** | **12,595,550** | **13,037,934** | **12,017,849** | **6,199,474** | **5,711,627** | **-3.6** | **-7.9** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) திருத்தப்பட்ட*
*(ஆ) தற்காலிகமானது*

**விவசாயம்**

விவசாயத் துறை 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 6.2 சதவீத பாதகமான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2.2 சதவீத சாதகமான வளர்ச்சி நிலையைப் பதிவு செய்துள்ளது. இதற்கு தானியங்கள் (அரிசி தவிர), நெல், காய்கறிகள், தேயிலை, இறப்பர் மற்றும் பழங்கள் போன்ற துணைத் துறைகளின் சாதகமான வளர்ச்சி காரணமாகவுள்ளது. எவ்வாறெனினும் தென்னைப் பயிர்ச்செய்கை எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி மற்றும் மீன்பிடிப்பு போன்ற துணைப்பிரிவுகள் வீழ்ச்சியடைந்துள்ளது.

**வரைபு 2.3 : விவசாயத்துறை வகுதி – 2023 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**நெல்**

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் நெல் உற்பத்தி 19.8 சதவீதம் அதிகரித்துள்ளது. 2022/23 ஆம் ஆண்டின் பெரும்போக பருவத்தில் 2.63 மில்லியன் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இது சுமார் 1.65 மில்லியன் மெற்றிக்தொன் அரிசியின் அளவைக் குறிக்கும். எவ்வாறாயினும், மே முதல் செப்தெம்பர் வரையான மாதங்களில் நாட்டில் நிலவியகடுமையான வரட்சி நிலைமைகள் காரணமாக சிறுபோகத்தின் விளைச்சல் கணிசமாகக் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் 1.5 மில்லியன் மெற்றிக்தொன் நெல் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் சிறுபோகத்தில் 1.8 மில்லியன் மெற்றிக் தொன் நெல் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை**

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 0.1 சதவீத சிறிய அளவினால் அதிகரித்துள்ளது. இறப்பர் உப துறை 2.4 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகள் உபதுறை 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 13.8 சதவீத நேர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 6.6 சதவீதம் சுருங்கியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதியில் தேயிலை உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 153.2 மில்லியன் கிலோ உற்பத்தியுடன் ஒப்பிடும்போது 155.5 மில்லியன் கிலோவாக இருக்கின்றது. இரசாயனப் பசளைத் தடை நீக்கப்பட்டதன் மூலம் தேயிலை உற்பத்திதுறை படிப்படியாக மீண்டு வந்தமையே இந்த சிறிய விரிவாக்கத்திற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இறப்பர் உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 41.9 மில்லியன் கிலோவுடன் ஒப்பிடும்போது 43.3 மில்லியன் கிலோவாக சற்று அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் தேங்காய் உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 1,988.3 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 7.6 சதவீதம் குறைந்து 1,837 மில்லியனாகவுள்ளது.

**தானியவகை, காய்கறிகள், பழவகைகள், நறுமணப் பொருட்கள் மற்றும் மருந்தாக்கப் பொருட்கள்**

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தானியங்களின் (அரிசி தவிர) வளர்ச்சி 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது கணிசமாக 27.3 சதவீதமாக அதிகரித்துள்ளமை இக்காலகட்டத்தில் இரசாயன உரத்தின் கிடைப்பனவைப் பிரதிபலிக்கின்றது. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில், காய்கறிகள் மற்றும் பழங்களின் வளர்ச்சி பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில் முறையே 4.5 சதவீதம் மற்றும் 4.1 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வாசனைத்திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கற் பயிர்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது பாதியில் 7.2 சதவீதம் அதிகரித்துள்ளது,

**மீன்பிடி மற்றும் கால்நடை**

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில்,பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில், கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் துணைத் துறை 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 7.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 4.7 சதவீதம் சுருங்கியுள்ளது. மொத்த மீன் உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 2.0 சதவீதம் குறைந்து 222.1 மில்லியன் கிலோவாக இருந்ததுடன் இது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 226.5 மில்லியன் கிலோவாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வெளிப்படுத்தப்பட்ட 4.9 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் விலங்கு துணைத் துறையின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தி 5.9 சதவீதம் சுருங்கியதுள்ளது.

**கைத்தொழில் மற்றும் உற்பத்தித்துறை**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.5 சதவீதத்திற்கு காரணமான கைத்தொழில்துறை 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில், 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 6.6 சதவீத எதிர்மறை வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 18.3 சதவீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு காரணமாக கட்டுமானம், உற்பத்தி மற்றும் சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளின் கணிசமான சுருக்கங்களாக முறையே 31.6 சதவீதம், 5.1 சதவீதம் மற்றும் 37.4 சதவீதம் எதிர்மறை வளர்ச்சிகளைப் பதிவு செய்தமையாகும்

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் துணைத் துறைகளான உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் உற்பத்தி (4.8 சதவீதம்), புடவை உற்பத்தி,

ஆடை மற்றும் தோல் தொடர்பான பொருட்கள் (12.5 சதவீதம்), மரத் தளபாடங்கள் தவிர்ந்த பலகை மற்றும் மரத்தக்கை (30.2 சதவீதம்), காகித பொருட்கள் உற்பத்தி, ஊடக தயாரிப்புகளின் அச்சிடுதல் மற்றும் மறுவுற்பத்தி (11.1 சதவீதம்), பிற உலோகமல்லாத கனிம பொருட்கள் தயாரிப்புகளின் உற்பத்தி (13.6 சதவீதம்) அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோக பொருட்கள் உற்பத்தி (31.0 சதவீதம்), தளபாடங்கள் உற்பத்தி (22.4 சதவீதம்), இரசாயன பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாட்கல் பொருட்கள் உற்பத்தி (6.8 சதவீதம்), இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி (22.7 சதவீதம்), இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி (23.9 சதவீதம்) மற்றும் பிற உற்பத்தி (17.7 சதவீதம்) அனைத்தும், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது சுருக்கமடைந்துள்ளன.

மேலும், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் (4.7 சதவீதம்) மற்றும் மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் வளி சீராக்கி (8.3 சதவீதம்) ஆகியவை 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் எதிர்மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன, அதே நேரத்தில் கழிவுநீர், கழிவு சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் 0.3 சதவீதமாக சிறிதளவு அதிகரித்துள்ளன.

இருப்பினும், கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 56.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது.208.9 சதவீத குறிப்பிடத்தக்க நேர்மறையான வளர்ச்சியைக் காட்டுகின்றது.

2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த மின் உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 10,832 ஜிகாவோல்டாக இருந்து 4.5 சதவீதம் குறைந்து 10,341 ஜிகாவோல்டாக இருந்தது. எரிபொருள் மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையுடன் தொழில்துறை நடவடிக்கைகளில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தொழிற்சாலைகளுக்கான மின்சார விற்பனை 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 2,957 ஜிகாவோல்ட்டுடன் ஒப்பிடும்போது, 4.5 சதவீதம் குறைந்து 2,825 ஜிகாவோல்ட் ஆக குறைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நீர் மின்சாரம் மூலம் மின் உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 3,122 ஜிகாவோல்ட்டாக இருந்து 26.8 சதவீதம் குறைந்து 2,287 ஜிகாவோல்ட்டாக இருந்தது. நிலக்கரி (3.6 சதவீதம்) மூலம் மின் உற்பத்தியிலும் இதே போன்ற குறைப்பைக் காணலாம். 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் எரிபொருள் எண்ணெய் (52.7 சதவீதம்) மற்றும் காற்றாலை (13.9 சதவீதம்) மூலம் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

**சேவைகள்**

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பதிவு செய்யப்பட்ட 0.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது நிதிச் சேவைகள், தொழில்முறை சேவைகள் மற்றும் கணினி நிரலாக்க நடவடிக்கைகள் முறையே 26.7 சதவீதம், 6.6 சதவீதம் மற்றும் 7.8 சதவீதம் சுருங்கியதால், சேவைகள் துறை 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 3.2 சதவீதமாக சிறிய சுருக்கத்தைப் பதிவு செய்தது.

மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் (0.5 சதவீதம்), நிரலாக்க மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் (13.0 சதவீதம்), மற்றும் மனித சுகாதார நடவடிக்கைகள், குடியிருப்பு பராமரிப்பு மற்றும் சமூக பணி நடவடிக்கைகள் (5.6 சதவீதம்) ஆகியவற்றின் துணைத் துறைகள் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சுருக்கங்களைப் பதிவு செய்தன. இருப்பினும், அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் (3.7 சதவீதம்), கல்வி (3.0 சதவீதம்), தங்குமிடம் (14.9 சதவீதம்) மற்றும் பிற தனிப்பட்ட சேவைகள் (1.3 சதவீதம்) போன்ற துணைத் துறைகள் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் நேர்மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

**வரைபு 2.4 : கைத்தொழில்துறையின் வகுதி – 2023 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**வரைபு 2.5 : தயாரிப்புத் துறை வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**வரைபு 2.6 : சேவைத் துறை வகுதி - 2023 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**போக்குவரத்து மற்றும் அஞ்சல் சேவைகள்**

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் போக்குவரத்துத் துறை 5.4 சதவீத நேர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 16,014 ஆக இருந்த புதிய வாகன பதிவுகளின் மொத்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 7.3 சதவீதம் அதிகரித்து 17,176 ஆக உயர்ந்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மோட்டார் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பதிவு முறையே 20.6 சதவீதம், 77.1 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பேருந்துகள் (109.3 சதவீதம்) மற்றும் முச்சக்கர வண்டிகளின் பதிவு (53.1 சதவீதம்) குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. இருப்பினும், இரட்டை நோக்க வாகனங்கள், சரக்கு போக்குவரத்து வாகனங்கள் மற்றும் நில வாகனங்களின் பதிவு முறையே 45.5 சதவீதம், 82.1 சதவீதம் மற்றும் 9.4 சதவீதம் சரிவைக் காட்டியது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள் 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 5.2 மில்லியன் டி.இ.யூ.க்களுடன் ஒப்பிடும்போது 0.6 சதவீதமாக அதிகரித்து 5.3 மில்லியன் இருபது அடி சமமான அலகுகளாக (டி.இ.யூ) இருந்தன. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டு மற்றும் மறுசுழற்சிக்காக கையாளப்பட்ட கொள்கலன்கள் முறையே 10.2 சதவீதம் மற்றும் 8.1 சதவீதம் குறைந்துள்ள அதேவேளையில் கப்பலிலிருந்து கப்பலுக்கு மாற்றும் கையாளுகை 2.9 சதவீத்தால் அதிகரிதுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கையாளப்பட்ட மொத்த சரக்குகளின் எண்ணிக்கையும் 0.7 சதவீதம் அதிகரித்து 78.4 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 41.7 மில்லியன் மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 41.7 மெற்றிக் தொன் சரக்குகள் வெளியேற்றப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதமாக அதிகரித்து 42.2 மில்லியன் மெற்றிக் தொன் சரக்கு வெளியேற்றப்பட்டுள்ளது.

**தொலைத்தொடர்பு**

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தொலைத்தொடர்பு துணைத் துறையின் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் 4.2 சதவீத சுருக்கத்தைப் பதிவு செய்துள்ளன. 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 100 நபர்களுக்கு 146.9 ஆக இருந்த செல்லிடத் தொலைபேசிகள் உள்ளிட்ட தொலைபேசி ஊடுருவல் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 100 நபர்களுக்கு 6.8 சதவீதம் குறைந்து 137.0 ஆக குறைந்துள்ளது. கையடக்க இணைய இணைப்புகள் உள்ளிட்ட இணைய சந்தாதாரர்களும் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 1.0 சதவீதம் குறைந்து 21.9 மில்லியனாக குறைந்துள்ளனர். பயன்பாட்டில் உள்ள நிலையான இணைப்பு தொலைபேசிகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகளின் எண்ணிக்கையும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் முறையே 19.4 சதவீதம் மற்றும் 5.3 சதவீதம் குறைந்துள்ளது.

**நிதிச் சேவைகள், காப்புறுதி நிலைச்சொத்து (காணி விற்பனை) மற்றும் பிற சேவைகள்**

நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளின் பெறுமதி சேர் சேவைகள் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் 350.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 26.2 வீதத்தால் வீழ்ச்சியடைந்து 258.5 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வீட்டு உரிமை உட்பட நிலைச் சொத்து (ரியல் எஸ்டேட்) நடவடிக்கைகளின் பெறுமதி சேர் சேவைகள் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 295.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.8 சதவீதம் குறைந்து 260.3 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. காப்புறுதித் துறையின் மொத்த சொத்துக்கள் 2022 ஜுன் மாத இறுதியில் 906.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 ஜுன் மாத இறுதியில் 12.9 வீதத்தால் அதிகரித்து 1,023.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித சுகாதாரம் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் 556.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது 0.5 சதவீதத்தால் குறைந்து 553.4 பில்லியன் ரூபாவாகவும், தொழில்முறை, விஞ்ஞான, தொழில்நுட்ப, நிர்வாகம் மற்றும் ஆதரவு சேவை நடவடிக்கைகள் 6.6 சதவீதம் குறைந்து 117.7 பில்லியன் ரூபாவாகவும் இருந்தது.

**வரைபு 2.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்**

| சுட்டி | 2019 | 2020 | 2021[அ] | 2022 | 2022[அ] | 2023[அ] |
|---|---|---|---|---|---|---|
| **துறைமுக சேவைகள்** | | | | | சன-செப் | சன-செப் |
| வருகை தந்த கப்பல்கள் (இல) | 4,697 | 4,337 | 4,180 | 4,073 | 2,959 | 3,629 |
| மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ ’000) | 106,979 | 102,908 | 109,356 | 100,376 | 77,822 | 78,347 |
| மொத்த கொள்கலன் கையாடல் (TEU ’000) | 7,228 | 6,855 | 7,249 | 6,862 | 5,235 | 5,267 |
| இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU ’000)(ஆ) | 5,955 | 5,765 | 6,050 | 5,832 | 4,438 | 4,552 |
| **தொலைதொடர்பாடல் சேவை** | | | | | சன-யூன் | சன-யூன் |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண்.“000) | 2,300 | 2,613 | 2,852 | 2,651 | 3,031 | 2,442 |
| கையடக்க தொலைபேசி (எண். ’000) | 32,884 | 28,739 | 29,959 | 28,838 | 29,561 | 27,980 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். ’000) | 1,055 | 1,367 | 1,587 | 1,388 | 1,765 | 1,242 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் ’000) | 13,408 | 17,524 | 22,106 | 21,668 | 22,142 | 21,920 |
| **சுகாதாரத் துறை** | | | | | சன-யூன் | சன-யூன் |
| தனியார் வைத்தியசாலைகள் | 209 | 217 | 243 | 250 | 243 | 198 |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 603 | 609 | 618 | 617 | 617 | 617 |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 77,964 | 77,121 | 78,228 | 78,228 | 78,228 | 78,228 |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 18,130 | 18,218 | 20,209 | 21,045 | 20,209 | 21,045 |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 38,276 | 37,133 | 39,091 | 40,775 | 39,091 | 40,775 |
| **நிதித் துறை** | | | | | செப் இறுதி | செப் இறுதி |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 7,390 | 7,406 | 7,369 | 7,378 | 7,416 | 7,520 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 42 | 40 | 39 | 37 | 35 | 33 |
| விசேட குத்தகைக் கம்பனிகள் | 4 | 3 | 3 | 1 | 2 | 1 |
| | | | | | ஆகஸ்ட் இறுதி | ஆகஸ்ட் இறுதி |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 1,854,103 | 1,984,525 | 2,054,985 | 2,054,896 | 1,963,705 | 1,917,336 |
| **சுற்றுலாத்துறை** | | | | | சன-செப் | சன-செப் |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 1,913,702 | 507,704 | 194,495 | 719,978 | 526,232 | 1,016,256 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அடொ.மில்.) | 3,607 | 682 | 507 | 1,136 | 873 | 1,457 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 57.1 | 15.0 | 18.6 | 30 | த.இ. | த.இ. |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | சன-செப் | சன-செப் |
| பேருந்துகள் | 1,613 | 578 | 281 | 404 | 270 | 565 |
| கார்கள் | 38,232 | 21,021 | 3,495 | 1,489 | 1,141 | 1,376 |
| லொறிகள்(இ ) | 5,223 | 3,941 | 2,593 | 940 | 1,663 | 298 |
| மோட்டார் சைக்கிள்கள் | 284,301 | 151,634 | 8,011 | 9,060 | 7,067 | 12,518 |
| முச்சக்கர வண்டிகள் | 15,490 | 7,150 | 2,093 | 36 | 32 | 49 |
| நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள் (ஈ) | 7,666 | 8,302 | 12,616 | 5,285 | 5,841 | 2,370 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*
*(அ) தற்காலிக*
*(ஆ) மீள்புதுப்பிக்கப்பட்டமை உள்ளடங்கலாக*
*(இ) பிரத்தியேக நோக்கம் கொண்ட வாகனங்கள், மோட்டார் லொறி மற்றும் ஏனைய லொறிகள் உள்ளடங்கியுள்ளது.*
*(ஈ) நில வாகனங்கள், கைநில வாகனங்கள், இழுவை வண்டிகள் உள்ளடங்கலாக*
*(உ) ETI Finance Ltd. தவிர்ந்த*
*த.இ- தகவல் இல்லை.*

2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், வேலையின்மை வீதம் இதே ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 4.7 சதவீதத்திலிருந்து 5.2 சதவீதமாக உயர்ந்ததுள்ளது. இது பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மந்தநிலையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இதே வேளையில், தொழிலாளர் பங்கேற்பு வீதம், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் 49.9 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 48.6 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

இதற்கிடையில், 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இளைஞர்களின் வேலையின்மை வீதம் (வயது 15 - 24 வயது) 25.8 சதவீதமாக இருப்பதுடன் இது அனைத்து வயதினரிடையேயும் பதிவான மிக உயர்ந்த வேலையின்மை வீதத்தைக் குறிக்கின்றது. இது 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 22.4 சதவீதத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்துள்ளது.

**வரைபு 2.7 : தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**அட்டவணை 2.3 : சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை**

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023(அ) | 2019 | 2020 | 2021 | 2022(ஆ) | 2023(அ) |
| சனவரி | 244,239 | 228,434 | 1,682 | 82,327 | 102,545 | 460.3 | 307.0 | 4.4 | 151.7 | 153.5 |
| பெப்ரவரி | 252,033 | 207,507 | 3,366 | 96,507 | 107,639 | 475.0 | 278.9 | 8.8 | 169.4 | 161.6 |
| மார்ச் | 244,328 | 71,370 | 4,581 | 106,500 | 125,495 | 460.5 | 95.9 | 11.9 | 161.2 | 188.8 |
| ஏப்ரல் | 166,975 | – | 4,168 | 62,980 | 105,498 | 314.7 | - | 10.90 | 108.7 | 148.2 |
| மே | 37,802 | – | 1,497 | 30,207 | 83,309 | 71.2 | - | 3.90 | 43.5 | 100.0 |
| ஜூன் | 63,072 | – | 1,614 | 32,856 | 100,388 | 118.9 | - | 4.20 | 45.0 | 122.9 |
| ஜூலை | 115,701 | – | 2,429 | 47,293 | 143,039 | 218.1 | - | 6.30 | 85.0 | 219.0 |
| ஆகஸ்ட் | 143,587 | – | 5,040 | 37,760 | 136,405 | 270.6 | - | 13.10 | 67.9 | 210.5 |
| செப்தெம்பர் | 108,575 | – | 13,547 | 29,802 | 111,938 | 204.6 | - | 35.30 | 40.5 | 152.2 |
| ஒக்தோபர் | 118,743 | – | 22,771 | 42,026 | | 223.8 | - | 59.30 | 54.9 | |
| நவம்பர் | 176,984 | – | 44,294 | 59,759 | | 333.6 | - | 115.40 | 81.0 | |
| டிசெம்பர் | 241,663 | 393 | 89,506 | 91,961 | | 455.5 | 0.5 | 233.3 | 127.4 | |
| **மொத்தம்** | **1,913,702** | **507,704** | **194,495** | **719,978** | **1,016,256** | **3,606.8** | **682.4** | **506.8** | **1,136.3** | **1,456.7** |

*மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை*
*(அ) தற்காலிகமானது*
*(ஆ) திருத்தியது*

அட்டவணை 2.4 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%)

| துறை | 2018 | 2019 | 2020 | 2021 | 2022(ஆ) | முதல் அரையாண்டு 2022(ஆ) | முதல் அரையாண்டு 2023(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **விவசாயம்** | **6.3** | **0.5** | **-0.9** | **0.9** | **-4.6** | **-6.2** | **2.2** |
| தேயிலை | 2.0 | -3.3 | -6.5 | 8.5 | -15.9 | -17.4 | 0.1 |
| நெல் | 45.2 | 6.2 | 7.7 | -11.8 | -13.0 | -30.6 | 29.6 |
| இறப்பர் | 1.8 | -7.8 | 0.2 | 6.2 | -6.7 | -13.5 | 2.4 |
| தானியங்கள் | 2.1 | -9.0 | 59.8 | 2.8 | -21.6 | -32.2 | 27.3 |
| மரக்கறிகள் | 0.5 | -2.9 | 8.9 | -1.7 | -8.4 | -10.2 | 4.5 |
| கால்நடைகள் | 4.1 | -4.5 | -3.7 | 8.2 | -12.9 | -4.9 | -5.9 |
| காடாக்கம், விறகு | -13.6 | -3.3 | -1.3 | 4.4 | 16.1 | 17.8 | -19.2 |
| மீன்பிடி | -0.2 | -4.4 | -17.0 | 1.5 | -10.5 | -6.0 | -4.0 |
| **கைத்தொழில்** | **-1.1** | **-4.1** | **-5.3** | **5.7** | **-16.0** | **-6.6** | **-18.3** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | -2.7 | -1.2 | -10.9 | 1.4 | -31.0 | -13.4 | -37.4 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | 3.8 | 2.0 | -2.6 | -46.2 | -12.2 | -6.1 | -10.3 |
| ஏனைய கைத்தொழில்கள் | 7.1 | 4.3 | -1.3 | 2.2 | -4.3 | 2.9 | -7.0 |
| நிர்மாணம் | -8.0 | -14.8 | -9.4 | 4.4 | -20.9 | -7.5 | -31.6 |
| **சேவைகள்** | **4.3** | **2.9** | **-1.9** | **3.5** | **-2.0** | **0.2** | **-3.2** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 4.7 | 3.6 | 0.9 | 1.5 | -0.2 | 1.4 | -0.5 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | 2.1 | 2.0 | -6.1 | 0.9 | 3.5 | 0.5 | 3.8 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | 5.1 | -6.0 | -40.8 | 1.7 | 27.0 | 27.1 | 14.9 |
| தகவல், தொடர்பாடல் | 7.2 | 12.0 | 11.1 | 18.0 | -1.4 | 3.4 | -7.2 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 16.6 | 1.2 | 7.0 | 10.3 | -18.3 | -5.4 | -26.2 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | 5.6 | 5.1 | -1.0 | 4.4 | -12.1 | -2.0 | -11.8 |
| தொழிற்துறை சேவைகள் | 3.8 | 5.4 | -3.3 | 4.9 | -4.0 | -1.1 | -6.6 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | 1.4 | 4.6 | 2.5 | 3.7 | -2.0 | -0.9 | -0.5 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | 1.9 | 0.8 | 1.7 | 0.9 | 1.2 | 2.2 | -0.5 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக) | 1.5 | 2.0 | -6.6 | 0.9 | 0.4 | -2.2 | 1.3 |
| **மொ.உ.உ.** | **2.3** | **-0.2** | **-4.6** | **3.5** | **-7.8** | **-3.6** | **-7.9** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*
*(ஆ) திருத்தியது*

### 2.3 நாணயத் துறை அபிவிருத்திகள்

மத்திய வங்கி பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, 2023 சனவரியில், துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR), துணைநில் கடன் வழங்கல் வீதம் (SLFR) மற்றும் நியதி ஒதுக்கு வீதத்தை (SRR) முறையே 14.5 சதவீதம், 15.5 சதவீதம் மற்றும் 4.00 சதவீதத்தில் பராமரிப்பதன் மூலம் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தொடர்ந்தது. கொள்கை வீதங்கள் மார்ச் 2023 இல் 100 அடிப்படை புள்ளிகளால் உயர்த்தப்பட்ட, அதேவேளையில் நியதி ஒதுக்கு வீதத்தை 4.00 சதவீதமாக பராமரித்து, கொள்கை நிலைப்பாட்டை மேலும் கடுமையாக்கியது. எவ்வாறெனினும், இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை நிலைப்பாட்டை 2023 யூனில் மாற்றியமைத்து கொள்கை வீதங்களை 250 அடிப்படை புள்ளிகளால் குறைத்ததுடன் எட்டு மாதங்களுக்கு மேலதிகமாக காணப்பட்ட பணவீக்கமானது கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. 2023 யூன் இறுதியில் துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வீதம் மற்றும் நியதி ஒதுக்கு வீதம் ஆகியவை முறையே 13.0 சதவீதம், 14.0 சதவீதம் மற்றும் 4.00 சதவீதமாக காணப்பட்டன. ஆகஸ்ட் 2023 இல் நியதி ஒதுக்கு வீதம் 2.00 சதவீதமாகக் குறைக்கப்பட்டதன் மூலம் நாணயக் கொள்கை மேலும் தளர்த்தப்பட்டது.

நடுத்தர காலத்தில் திட்டமிடப்பட்ட 5.0 சதவீத மட்டத்தில் பணவீக்கத்தை ஸ்திரப்படுத்தி, அதன் மூலம் பொருளாதாரம் அதன் சாத்தியமான வளர்ச்சியை அடைய

உதவும் நோக்கத்துடன், இலங்கை மத்திய வங்கி 2023 ஒக்தோபரில் துணைநில் வைப்பு வசதி வீதத்தை 10.0 சதவீதமாகவும், துணைநில் கடன் வழங்கல் வீதத்தை 11.0 சதவீதமாகவும் பராமரிப்பதன் மூலம் கொள்கை வீதங்களை மேலும் 100 அடிப்படை புள்ளிகளால் குறைத்தது.

இலங்கை மத்திய வங்கி 2023 யூலையில் சந்தைக் கடன் வீதங்களின் கீழ்நோக்கிய இறுக்கத்தைக் கருத்தில் கொண்டு அடகு வைக்கும் வசதிகள், முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப்பற்றுக்கள் மற்றும் கடன் அட்டைகள் மீதான வட்டி வீத வரம்புகளை விதித்தது. அடகு வைப்பு வசதிகளுக்கு ஆண்டுக்கு 18 சதவீதமும், முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப்பற்றுக்களுக்கு ஆண்டுக்கு 23 சதவீதமும், கடன் அட்டைகளுக்கு ஆண்டுக்கு 28 சதவீதமும் வட்டி வீத வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன. வட்டி வீத வரம்புகள் நாணயக் கொள்கை தளர்வு நடவடிக்கைகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்வதற்கும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டன.

சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் (ALWR) திசெம்பர் 2022 இறுதியில் 18.7 சதவீதமாக காணப்பட்டது, இது ஆகஸ்ட் 2023 இறுதியில் 15.6 சதவீதமாகக் குறைந்த அதே நேரத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட வீதம் (AWDR) 2022 திசெம்பர் இறுதியில் 14.06 சதவீதத்திலிருந்து 2023 செப்தெம்பர் இறுதியில் 13.39 சதவீதமாகக் குறைந்ததுள்ளது

2022 திசெம்பர் இறுதியில் 12,290 பில்லியனாக இருந்த விரிந்த பணம் (M2b) 2023 ஆகஸ்ட் இறுதியில் 12,806 பில்லியன் ரூபாயாக 4.2 சதவீதம் அதிகரித்த, அதேவேளையில் தனியார் துறைக்கான கடன் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 7,414 பில்லியன் ரூபாவில் இருந்து

**வரைபு 2.8 : விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

3.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2023 செப்தெம்பர் இறுதியில் 7,168 பில்லியன் ரூபாயாக காணப்பட்டது. எவ்வாறாயினும், அரசாங்கத்திற்கான நிகர கடன் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 7,471 பில்லியன் ரூபாவிலிருந்து 2023 செப்தெம்பர் இறுதியில் 9.8 சதவீதம் அதிகரித்து 8,204 பில்லியன் ரூபாவாகவுள்ளது.

பணவீக்கம்

இலங்கை மத்திய வங்கி தனது நாணயக் கொள்கையை முன்னெடுப்பதற்கு ஏற்றுக்கொண்ட நெகிழ்வான பணவீக்க இலக்கு கட்டமைப்பின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் பணவீக்கத்தின் கணிசமான சரிவு பணவீக்க எதிர்பார்ப்புகளை எளிதாக்க உதவியது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு. (CCPI), 2021=100) அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) உணவு மற்றும் உணவல்லாத பணவீக்கத்தின் வீழ்ச்சியால் 2023 செப்தெம்பரில் நடுத்தர காலத்தின் இடை ஒற்றை இலக்க இலக்கத்தை விட கணிசமாகக் குறைந்து 1.3 சதவீதமாக இருந்தது. அதேபோன்று, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (தே.நு.வி.சு. (NCPI), 2021=100) அடிப்படையிலான முதன்மை பணவீக்கமும் (ஆண்டிற்கு ஆண்டு) 2023 செப்தெம்பரில் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் கொ.நு.வி.சு. (2021=100) அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2023 ஒக்தோபரில் 1.5 சதவீதமாக சற்று அதிகரித்துள்ளது.

பொருளாதாரத்தில் அடிப்படை தேவை அழுத்தங்களைப் பிரதிபலிக்கும் கொ.நு.வி.சு. அடிப்படையிலான மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2023 ஒக்தோபரில் மேலும் குறைந்து 1.2 சதவீதமாகக் குறைந்த, அதேநேரத்தில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2023 செப்தெம்பரில் 1.7 சதவீதமாக குறைந்தது

**வரைபு 2.9 : முதன்மைப் பணவீக்கம், மைய வீக்கம், உணவு பணவீக்க அசைவுகள்**



அட்டவணை 2.5 : நுகர்வோர் விலைப் பணவீக்கம்

| மாதம் | 2022 (அடிப்படை ஆண்டு 2013=100) | | | | 2023 (அடிப்படை ஆண்டு 2021=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதன்மைப் பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | மைய பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | முதன்மைப் பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | மைய பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | |
| | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு |
| சனவரி | 14.2 | 16.8 | 9.9 | 12.9 | 54.2* | 53.2 | 45.6* | 52.0 |
| பெப்ரவரி | 15.1 | 17.5 | 10.9 | 14.1 | 50.6 | 53.6 | 43.6 | 50.1 |
| மார்ச் | 18.7 | 21.5 | 13.0 | 17.3 | 50.3 | 49.2 | 39.1 | 44.2 |
| ஏப்பிரல் | 29.8 | 33.8 | 22.0 | 27.9 | 35.3 | 33.6 | 27.8 | 31.8 |
| மே | 39.1 | 45.3 | 28.4 | 37.7 | 25.2 | 22.1 | 20.3 | 21.6 |
| யூன் | 54.6 | 58.9 | 39.9 | 49.3 | 12.0 | 10.8 | 9.8 | 11.3 |
| யூலை | 60.8 | 66.7 | 44.3 | 57.3 | 6.3 | 4.6 | 5.9 | 6.3 |
| ஆகஸ்ட் | 64.3 | 70.2 | 46.6 | 60.5 | 4.0 | 2.1 | 4.6 | 4.1 |
| செப்தெம்பர் | 69.8 | 73.7 | 50.2 | 64.1 | 1.3 | 0.8 | 1.9 | 1.7 |
| ஒக்தோபர் | 66.0 | 70.6 | 49.7 | 62.4 | 1.5 | | 1.2 | |
| நவம்பர் | 61.0 | 65.0 | 49.4 | 60.1 | | | | |
| திசெம்பர் | 57.2 | 59.2 | 47.7 | 57.5 | | | | |

*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

* *(அடிப்படை ஆண்டு 2013=100)*

## 2.4 பங்குச் சந்தை

பங்குச் சந்தை செயலாற்றுகை, சந்தை குறிகாட்டிகளின் இயக்கத்தில் பிரதிபலித்தது போல, மே 2023 வரை ஒரு கலவையான செயலாற்றத்தை வெளிப்படுத்தியது. அனைத்து பங்கு விலை விலைச்சுட்டெண் (ASPI) ஆண்டின் தொடக்கத்தில் 8,510 ஆக இருந்து 2023 யூன் இறுதியில் 9,443 ஆக 10.3 சதவீத உயர்வைக் காட்டியது. இதற்கிடையில், எஸ் அன்ட் பி எஸ்.எல்20 சுட்டெண் சமகாலத்தில் 2,641 இல் இருந்து 2,714 ஆக மிகவும் மிதமான அதிகரிப்பை சந்தித்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், அனைத்து பங்கு விலை விலைச்சுட்டெண் அதன் உச்சப்புள்ளியான 11,724 இனை ஆகஸ்ட் 08 அன்றும் குறைந்தபட்சமான 8,263 இனை ஜனவரி 13 அன்றும் பதிவுசெய்தது, இதற்கிடையில் எஸ் அன்ட் பி எஸ்.எல்20 சுட்டெண் அதன் உச்சமான 3,470 இனை ஆகஸ்ட் 08 அன்றும் குறைந்தபட்சமான 2,421 இனை மே 30 அன்றும் எட்டியது.

எவ்வாறெனினும், 2023 ஜூன் தொடக்கத்திலிருந்து, அனைத்து பங்கு விலை விலைச்சுட்டெண் மற்றும் எஸ் அன்ட் பி எஸ்.எல்20 சுட்டெண் இரண்டும் காட்டிய நேரான உத்வேக எழுச்சியின் மூலம் சந்தை மீட்சியின் குறிப்பிடத்தக்க அறிகுறிகள் அவதானிக்கப்பட்டன. அனைத்து பங்கு விலை விலைச்சுட்டெண் 2023 யூலை தொடக்கத்தில் 10,077 ஆக இருந்து மூன்றாம் காலாண்டின் முடிவில் 11,336 ஆக உயர்ந்தது, அதேவேளையில் எஸ் அன்ட் பி எஸ்.எல்20 சுட்டெண் 2023 யூலை தொடக்கத்தில் 2,973 ஆக இருந்து மூன்றாவது காலாண்டின் முடிவில் 3,198 ஆக உயர்ந்தது.

2022 செப்தெம்பர் மாத இறுதியில் 4,341 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட சந்தை மூலதனமாக்கல் 2023 செப்தெம்பர் மாத இறுதிக்குள் 4,537 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது, 4.52 சதவீத உயர்வாகும். குறிப்பாக, 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் பங்குகளில் வெளிநாட்டு முதலீடுகள் 48.3 பில்லியன் ரூபாவிலிருந்து 33.8 சதவீதமாக குறைந்து 32 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது. அதேபோன்று, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான 33 பில்லியன் ரூபாவுக்கு மாறாக, 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் பங்குகளின் வெளிநாட்டு விற்பனை 28.3 பில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது.

அட்டவணை 2.6 : மூலதனச் சந்தை அசைவுகள்

| குறிகாட்டிகள் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | செப் இறுதியில் 2022 | செப் இறுதியில் 2023(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 6,369 | 6,052 | 6,129 | 6,774 | 12,226 | 8,490 | 9,931 | 11,336 |
| S&P SL 20 குறிகாட்டி | 3,672 | 3,135 | 2,937 | 2,638 | 4,233 | 2,636 | 3,165 | 3,198 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்) | 2,899 | 2,840 | 2,851 | 2,961 | 5,489 | 3,847 | 4,341 | 4,537 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 296 | 297 | 289 | 283 | 296 | 290 | 294 | 291 |
| வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்) | 221 | 200 | 171 | 397 | 1,173 | 687 | 567 | 345 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்) | 94,627 | 100,316 | 68,272 | 104,165 | 86,689 | 36,863 | 33,034 | 28,354 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 112,285 | 77,067 | 56,537 | 52,889 | 39,410 | 67,488 | 48,306 | 32,008 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 17,658 | -23,249 | -11,735 | -51,276 | -47,279 | 30,625 | 15,272 | 3,654 |

*மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி*
*(அ) தற்காலிகமானது*

### 2.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

நாட்டில் நிலவும் நிச்சயமற்ற பொருளாதார நிலைமை மற்றும் உக்ரைன்-ரஷ்யா மோதலுடன் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் இருந்தபோதிலும், வர்த்தக பற்றாக்குறையில் கணிசமான சுருக்கம், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாவிலிருந்து வரும் வருவாய் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஸ்திரத்தன்மையின் சாதகமான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதி செலவு 12.5 சதவீதம் குறைந்து 12,323.4 மில்லியன் ஐக்கிய .அமெரிக்க டொலராகவும் (ஐ.அ.டொ) ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் வருவாய் 10.1 சதவீதம் குறைந்து 8,010 மில்லியன் ஐ.அ.டொலராகவும் இருந்தது. எவ்வாறெனினும், மாதாந்த ஏற்றுமதி வருவாய் 2023 ஆகஸ்ட் வரை தொடர்ந்து நான்காவது மாதமாக 1.0 பில்லியன் ஐ.அ.டொலருக்கு மேல் காணப்பட்டதுடன் 2023 செப்தெம்பரில் சிறிதளவு குறைவடைந்து 972 ஐ.அ. டொலராக காணப்பட்டது.

அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்கான 4,093.3 மில்லியன் அமெரிக்க ஐ.அ.டொலருடன் ஒப்பிடும் போது 3,341.5 மில்லியன் ஐ.அ.டொலராக சுருங்கியது, இது. 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த வருவாய் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 9,992.0 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடும் போது 8,981.8 மில்லியன் ஐ.அ.டொலராக 10.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு கைத்தொழில்த்துறை ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக காரணமாகும். கைத்தொழில்த்துறை ஏற்றுமதி, விவசாய ஏற்றுமதி மற்றும் கனிம ஏற்றுமதி ஆகியவற்றின் வருவாய் முறையே 12.7 சதவீதம் குறைந்து 6,997.9 மில்லியன் ஐ.அ.டொலராகவும், 0.3 சதவீதம் குறைந்து 1,945.4 மில்லியன் ஐ.அ.டொலராகவும், 25.6 சதவீதம் குறைந்து 18 மில்லியன் ஐ.அ.டொலராகவுமிருந்தது. கைத்தொழில்த்துறை ஏற்றுமதி வருவாய் மொத்த ஏற்றுமதி வருவாயில் 77.9 சதவீதத்தையும், விவசாய ஏற்றுமதி வருவாய் மொத்த ஏற்றுமதி வருவாயில் 21.3 சதவீதத்தையும் பதிவு செய்துள்ளன. இதற்கிடையில், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த இறக்குமதி செலவு 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 14,085.2 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடும்போது கருத்தில் கொள்ளப்பட்ட காலகட்டத்தில் மோட்டார் வாகனங்கள் உள்ளிட்ட அவசரமற்ற இறக்குமதிகளுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்ந்ததுடன் 12.5 சதவீதம் குறைவடைந்து 12,323.4 மில்லியன் ஐ.அ.டொலராகவுள்ளது. நுகர்வோர் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவு 4.5 சதவீதம் அதிகரித்து 2,242.5 மில்லியன் ஐ.அ.டொலராகவும், இடைநிலை பொருட்கள் மற்றும் முதலீட்டு பொருட்கள் முறையே 14.7 சதவீதம் குறைந்து 8,105.3 மில்லியன் ஐ.அ.டொலராகவும், 19.3 சதவீதம் குறைந்து 1,963 மில்லியன் ஐ.அ.டொலராகவும் காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சென்மதி நிலுவை 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 2,927 மில்லியன் ஐ.அ.டொலர் பற்றாக் குறையுடன் ஒப்பிடும்போது 1,863 மில்லியன் ஐ.அ.டொலர் மிகையினைப் பதிவு செய்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரச பிணையங்கள் சந்தைக்கான மொத்த வரவு 709 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் செத்தெம்பர் 2023 இறுதியில் சீன மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட 1.3 பில்லியன் ஐ.அ.டொலர் பரஸ்பரப் பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக 3.5 பில்லியன் ஐ.அ.டொலராக இருந்தது. மேலும், உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 250 மில்லியன் ஐ.அ.டொலர்களும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறப்பட்ட 350 மில்லியன் ஐ.அ.டொலர்களும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அளவை அதிகரிக்க பங்களித்தன. இதேவேளை, 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று, ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 10.9 வீதத்தால் பெறுமதியேற்றமடைந்துள்ளது.

வரைபு 2.10 : வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**ஏற்றுமதிகள்**

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் காணப்பட்ட 9,992.0 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடும் போது 10.1 சதவீதம் குறைந்து 8,981.8 மில்லியன் ஐ.அ.டொலராகக் காணப்பட்டது. இதற்கு மந்தமான உலகளாவிய கேள்வி காரணமாக கைத்தொழில் ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி முக்கியமான காரணமாகும். அதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில்துறை ஏற்றுமதி வருவாய் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 8,011.5 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 12.7 சதவீதம் குறைந்து 6,997.9 மில்லியன் ஐ.அ.டொலராக காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் புடவை மற்றும் ஆடைகளிலிருந்து பதிவு செய்யப்பட்ட வருவாய் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 4,577.2 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடும் போது குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராட்சியம் உள்ளிட்ட முக்கிய ஏற்றுமதி சந்தைகளில் உலகளாவிய கேள்வியில் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சியுடன் 19.4 சதவீதம் குறைந்து 3,688.7 மில்லியன் ஐ.அ.டொலராக வீழ்ச்சியடைந்தமையாகும். மேலும், இறப்பர் பொருட்கள் மூலம் கிடைக்கும் வருவாய் 11.5 சதவீதம் குறைந்து 668.6 மில்லியன் ஐ.அ.டொலராகவும், பெற்றோலிய பொருட்கள் 15.6 சதவீதம் குறைந்து 371.4 மில்லியன் ஐ.அ.டொலராகவும், இரசாயன பொருட்கள் 16.8 சதவீதம் குறைந்து 142.6 மில்லியன் ஐ.அ.டொலராகவும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மெதுவான ஏற்றுமதி வருவாய்க்கு பங்களித்தது. அதேசமயம், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் 8.8 சதவீதம் அதிகரித்து 465.5 மில்லியன் ஐ.அ.டொலராகவும், நவரத்தினங்கள், வைரம் மற்றும் ஆபரணங்கள் ஆகியவற்றின் வருவாய் 17.1 சதவீதம் அதிகரித்து 394.3 மில்லியன் ஐ.அ.டொலராகவும் உள்ளது.

தேயிலை, வாசனைப்பொருட்கள், சிறு விவசாயப் பொருட்கள், மரக்கறிகள் மற்றும் பதனிடப்படாத புகையிலை ஆகியவற்றிலிருந்து அதிக வருமானம் பதிவு செய்யப்பட்ட போதிலும், தென்னை, கடல் உணவு மற்றும் இறப்பர் ஆகியவற்றிலிருந்து வருமானம் குறைந்ததால், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் விவசாய ஏற்றுமதியின் வருவாய் 2022 இல் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 1,939.8 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 0.3 சதவீதம் குறைந்துடைந்து 1,945.4 மில்லியன் ஐ.அ.டொலராகவுள்ளது. குறைந்த சராசரி தேயிலை விலைகள் இருந்தபோதிலும் அதிக தேயிலை ஏற்றுமதி அளவுகளுடன் தேயிலையிலிருந்து வருமானம் 5.7 சதவீதம் அதிகரித்து 937.1 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 903.3 மில்லியன் ஐ.அ.டொலராக உயர்ந்துள்ளது. மேலும், வாசனைப்பொருட்கள், சிறு விவசாயப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் பதனிடப்படாத புகையிலை ஆகியவற்றின் வருவாய் முறையே 8.9 சதவீதம் அதிகரித்து 298.5 மில்லியன் ஐ.அ.டொலராகவும், 3.3 சதவீதம் அதிகரித்து 143.5 மில்லியன் ஐ.அ.டொலராகவும், 3.2 சதவீதம் அதிகரித்து 20.5 மில்லியன் ஐ.அ.டொலராகவும், 11.4 சதவீதம் அதிகரித்து 19.8 மில்லியன் ஐ.அ.டொலராகவும் இருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கனிம ஏற்றுமதி வருவாய் 25.6 சதவீதம் குறைந்து 18 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 24.1 மில்லியன் ஐ.அ.டொலராகவும், அதே வேளையில் பிற வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி வருவாய் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 23.7 சதவீதம் அதிகரித்து 20.5 மில்லியன் ஐ.அ.டொலராக் காணப்பட்டது.

வரைபு 2.11 : ஏற்றுமதிகளின் வகுதி




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**இறக்குமதிகள்**

2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதிக்கான செலவு 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 14,085.2 மில்லியன் ஐ.அ.டொலருடன் ஒப்பிடும்போது இடைநிலை மற்றும் முதலீட்டு பொருட்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட இறக்குமதி செலவினங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக 12.5 சதவீதம் குறைவடைந்து 12,323.3 மில்லியன் ஐ.அ.டொலராக காணப்பட்டது.. இருப்பினும், உணவு மற்றும் பானங்கள் மற்றும் உணவு அல்லாத நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிச் செலவினங்கள் அதிகரித்ததன் காரணமாக நுகர்வோர் பொருட்களுக்கான இறக்குமதி செலவு 4.5 சதவீதம் அதிகரித்து 2,146.7 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2,242.5 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. சீனி மற்றும் இனிப்புப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் பால் உற்பத்திகள் ஆகியவற்றிலிருந்து அதிகரித்த இறக்குமதி செலவினங்களுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது

மாதங்களில் உணவு மற்றும் பானங்களுக்கான இறக்குமதி செலவு 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 1,227.7 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 3.2 சதவீதம் அதிகரித்து 1,266.6 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. ஆடை மற்றும் ஆபரணங்கள், வீட்டு மற்றும் தளபாட பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவனை உபகரணங்கள் மீதான இறக்குமதி செலவு குறைந்ததாலும், மருந்து மற்றும் மருந்தாங்கல் பொருட்கள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்களின் இறக்குமதி செலவினம் அதிகரித்ததால் உணவு அல்லாத நுகர்வோர் பொருட்களுக்கான செலவு 6.2 சதவீதம் அதிகரித்து 919.0 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 976.0 மில்லியன் ஐ.அ.டொலராக அதிகரித்துள்ளது. எரிபொருள் மற்றும் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதிக்கான செலவு குறைந்ததால், இடைநிலை பொருட்களுக்கான இறக்குமதி செலவு 9,497.4 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 8,105.3 மில்லியன் ஐ.அ.டொலராக 14.7 சதவீதம் குறைவடைந்துள்ளது. எரிபொருள் இறக்குமதிக்கான செலவு 3,476.3 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 3,694.3 மில்லியன் ஐ.அ.டொலராக 5.9 சதவீதம் குறைவடைந்த அதே வேளையில் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் 26.9 சதவீதம் குறைந்து 2,407.2 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 1,760.6 மில்லியன் ஐ.அ.டொலராவுள்ளது.

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டுமானப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் ஏனைய முதலீட்டு பொருட்கள் உள்ளிட்ட அனைத்து துணைப் பிரிவுகளிலும் இறக்குமதிச் செலவு குறைவடைந்ததால், முதலீட்டு பொருட்களுக்கான இறக்குமதி செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 2,433.0 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 1,963.9 மில்லியன் ஐ.அ.டொலராக 19.3 சதவீதம் குறைவடைந்துள்ளது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி செலவு 13.7 சதவீதம் குறைந்து 1,355.7 மில்லியன் ஐ.அ.டொலராகவும், கட்டுமான பொருட்கள் 26.7 சதவீதம் குறைந்து 547.4 மில்லியன் ஐ.அ.டொலராகவும், போக்குவரத்து உபகரணங்களின் இறக்குமதிச் செலவு 48.8 சதவீதம் குறைந்து 57.6 மில்லியன் ஐ.அ.டொலராகவுமுள்ளது.

**வரைப 2.12 : இறக்குமதிகளின் வகுதி**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**அட்டவணை 2.7 : வெளிநாட்டு வர்த்தகம்**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2020 | 2021 | 2022(ஆ) | சன – செப் 2022(ஆ) | சன – செப் 2023(அ) |
|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | **10,047** | **12,499** | **13,106** | **9,992** | **8,982** |
| **விவசாய ஏற்றுமதிகள்** | **2,336** | **2,730** | **2,568** | **1,940** | **1,945** |
| தேயிலை | 1,241 | 1,324 | 1,259 | 937 | 990 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,095 | 1,405 | 1,309 | 1,003 | 955 |
| **கைத்தெழில் ஏற்றுமதிகள்** | **7,672** | **9,702** | **10,465** | **8,012** | **6,998** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 4,423 | 5,435 | 5,952 | 4,577 | 3,689 |
| உணவு, குடிபானம், புகையிலை | 464 | 587 | 520 | 406 | 398 |
| இறப்பர் உற்பத்திகள் | 786 | 1,050 | 977 | 755 | 669 |
| இயந்திர மற்றும் உபகரணங்கள் | 338 | 501 | 581 | 428 | 466 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 374 | 506 | 568 | 440 | 371 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 1,288 | 1,625 | 1,868 | 1,406 | 1,406 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **25** | **45** | **50** | **24** | **18** |
| **வகுக்கப்படாதவை** | **14** | **23** | **23** | **17** | **21** |
| **இறக்குமதிகள்** | **16,055** | **20,637** | **18,291** | **14,085** | **12,323** |
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,402** | **3,849** | **2,813** | **2,147** | **2,243** |
| உணவும் குடிபானமும் | 1,554 | 1,667 | 1,608 | 1,228 | 1,267 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,847 | 2,182 | 1,205 | 919 | 976 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **9,077** | **12,309** | **12,439** | **9,497** | **8,105** |
| பெற்றோலியம் | 2,543 | 3,743 | 4,897 | 3,694 | 3,476 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 2,335 | 3,067 | 3,065 | 2,407 | 1,761 |
| கோதுமை மற்றும் சோளம் | 384 | 418 | 303 | 189 | 264 |
| ஏனையவை | 3,814 | 5,081 | 4,174 | 3,207 | 2,604 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **3,563** | **4,463** | **3,031** | **2,433** | **1,963** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,176 | 2,810 | 1,969 | 1,571 | 1,356 |
| கட்டிடப் பொருட்கள் | 1,036 | 1,249 | 926 | 747 | 547 |
| போக்குவரத்து உபகரணம் | 348 | 399 | 132 | 113 | 58 |
| ஏனையவை | 3 | 6 | 3 | 3 | 2 |
| **வகுக்கப்படாதவை** | **14** | **17** | **9** | **8** | **13** |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | **- 6,008** | **8,139** | **5,185** | **4,093** | **3,342** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*
*(அ தற்காலிகமானது.*
*(ஆ) திருத்தியமைக்கபட்ட*

#### சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்

உள்நாட்டு மற்றும் உலகளாவிய சுற்றுலாத் துறையின் வளர்ச்சியுடன் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 526,232 நபர்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க வகையில் 1,016,256 ஆக அதிகரித்துள்ளது. இந்தியா, ஐக்கிய இராட்சியம், சீனா, ஜேர்மனி, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து கருத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலாவிலிருந்து வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 873.1 மில்லியன் அமெரிக்க ஐ.அ.டொலரிலிருந்து 1,456.7 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. இதற்கிடையில், முறைசாரா அந்நிய செலாவணி சந்தையில் நடவடிக்கைகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுடன் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 2,574.1 மில்லியன் அமெரிக்க டாலருடன் ஒப்பிடும்போது 68.8 சதவீதம் அதிகரித்து 4,345.1 மில்லியன் ஐ.அ.டொலராகவுள்ளது.

#### 2.6 உலகப் பொருளாதாரப் பார்வைகள்

கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் ரஷ்ய-உக்ரைன் மோதலில் இருந்து உலகப் பொருளாதாரத்தின் மீட்சி, பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான கட்டுப்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் எதிர்பார்த்ததை விட மெதுவாக உள்ளது. பொதுவாக, உலகப் பொருளாதாரத்தின் அதிக பணவீக்கம் வீட்டுப்பாவனைப் பொருட்கள் வாங்கும் திறனைக் குறைத்துள்ளது. பணவீக்கத்திற்கு பதில்கூறுவதற்காக மத்திய வங்கிகளின் கொள்கை இறுக்கம், கடன் வாங்கும் செலவை அதிகரித்து, பொது மற்றும் தனியார் துறைகளுக்கான கடனைக் குறைத்துள்ளது. ஒக்தோபர் 2023 இல் வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் உலக பொருளாதார கண்ணோட்டத்தின்படி, உலகளாவிய வளர்ச்சி 2022 இல் 3.5 சதவீதத்திலிருந்து 2023 இல் 3.0 சதவீதமாகவும், 2024 இல் 2.9 சதவீதமாகவும் வருடாந்திர சராசரி அடிப்படையில் வீழ்ச்சியடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த எதிர்விளைவுகள் இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நிலவிய உலகப் பொருளாதாரத்தின் மீட்சிக்கு சேவைத் துறை பங்களித்தது, அதே வேளையில் உற்பத்தித் துறை உள்ளிட்ட சேவை அல்லாத துறைகள் பொருட்களின் நுகர்வு குறைதல், புவிசார் பொருளாதார நிலப்பரப்பில் அதிகரித்த நிச்சயமற்ற தன்மை, பலவீனமான உற்பத்தித்திறன் வளர்ச்சி மற்றும் சவாலான நிதிச் சூழல் ஆகியவற்றால் உற்பத்தித் திறன் குறைவடைந்துள்ளது.

#### பிராந்திய கணிப்புகள்

பன்னாட்டு நாணய நிதியத்தின் 2023 ஒக்தோபர் அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் முன்னேறிய பொருளாதாரங்களுக்கு கணிக்கப்பட்ட வளர்ச்சி மந்தநிலை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 2.6 சதவீதத்திலிருந்து 2023 இல் 1.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. சுமார் 90 சதவீத முன்னேறிய பொருளாதாரங்கள் 2023 ஆம் ஆண்டில் குறைந்த வளர்ச்சியுடன் போராடுகின்றன, மேலும் முன்னேறிய பொருளாதாரங்களின் வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து 1.4 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சி 2022 ஆம் ஆண்டைப் போலவே 2023 ஆம் ஆண்டில் 2.1 சதவீதமாக இருக்கும் என்றும் 2024 ஆம் ஆண்டில் 1.5 சதவீதமாக குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. வலுவான நுகர்வு மற்றும் தொழில் வளர்ச்சி இருந்தபோதிலும், ∴பெடரல் ரிசர்வ் வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கையின் விளைவாக உண்மையான செலவழிக்கக்கூடிய வருமானத்தில் சரிவு காரணமாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க பொருளாதாரம் ஒரு லேசான மந்தநிலைக்குள் நுழையும் என்று "∴பிட்ச்" தெரிவித்துள்ளது. 2024 இல் வளர்ச்சியை 1.2 சதவீதமாக உயர்த்துவதற்கு முன்பு ஐரோப்பிய மத்திய வங்கியின் வலிதான நாணயக் கொள்கை இறுக்கத்தின் காரணமாக, ஐரோப்பிய பகுதியின் வளர்ச்சி 2022 இல் 3.3 சதவீதத்திலிருந்து 2023 இல் 0.7 சதவீதமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானின் வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 1.0 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 2.0 சதவீதமாக அதிகரிக்கும் என்றும் தேவை அதிகரிப்பு மற்றும் இணக்கமான கொள்கைகளின் விளைவாக, பின்னர் 2024 ஆம் ஆண்டில் 1.0 சதவீதமாக குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 4.1 சதவீதத்திலிருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 4.0 சதவீதமாக ஒப்பீட்டளவில் மிதமாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த பிரிவின் கீழ் உள்ள 61 சதவீத பொருளாதாரங்கள் குறிப்பிட்ட நிலையான சராசரியை விட வேகமாக வளரும், அதே நேரத்தில் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவின் வளர்ச்சி மற்றும் துணை சஹாரா ஆபிரிக்கா வீழ்ச்சியடையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஆசியாவின் வளர்ச்சி 2022 இல் 4.5 சதவீதத்திலிருந்து 2023 இல் 5.2 சதவீதமாக அதிகரித்து பின்னர் 2024 இல் 4.8 சதவீதமாக குறைவடையும்

சீன பொருளாதாரத்தின் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 5.0 சதவீதமாக சற்று குறைந்து 2024 ஆம் ஆண்டில் 4.2 சதவீதமாக மேலும் குறையும். வலுவான உள்நாட்டு முதலீட்டின் விளைவாக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி 6.3 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் ரஷ்யா உட்பட வளர்ந்து வரும் மற்றும் வளரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 2.4 சதவீதமாக அதிகரிக்கும் என்றும், 2024 இல் 2.2 சதவீதமாக குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய-உக்ரைன் மோதல் தீவிரமாக இருந்தபோதிலும் பாரிய அரசிறைத்தூண்டுதல், வலுவான முதலீடு மற்றும் இறுக்கமான தொழிலாளர் சந்தையில் நெகிழ்வான நுகர்வுடன் ரஷ்யாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2022 இல் 2.1 சதவீத சுருக்கத்திலிருந்து 2023 இல் 2.2 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

#### உலகளாவிய வர்த்தகம் மற்றும் பொருட்கள் சந்தை

ஒட்டுமொத்த உலகளாவிய தேவையின் வீழ்ச்சி மற்றும் உள்நாட்டு சேவைகளை நோக்கிய கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக உலக வர்த்தக வளர்ச்சி 2024 இல் 3.5 சதவீதமாக அதிகரிக்க முன்னர் 2022 இல் 5.1 சதவீதத்திலிருந்து 2023 இல் 0.9 சதவீதமாக வீழ்ச்சியடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஐக்கிய அமெரிக்க டொலர் மதிப்பேற்றத்தின்

பின்விளைவுகள், ஐ.அ.டொலர் மேலாண்மை வர்த்தகத்தை குறைத்ததுடன் அதிகரித்து வரும் வர்த்தக தடைகள் வர்த்தக வளர்ச்சி தடங்கலிற்கும் காரணமாக பின்தங்கியுள்ளது. சீனாவில் எதிர்பார்க்கப்பட்டதை விட பலவீனமான தேவை மற்றும் ஐரோப்பாவில் எரிவாயு இருப்புகளின் உருவாக்கம் காரணமாக, எண்ணெய் விலை 2023 ஆம் ஆண்டில் 16.5 சதவீதம் வீழ்ச்சியடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் அறிக்கையின்படி மேலும் வீழ்ச்சி அடையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய இராட்சிய பிரெண்ட், துபாய் ∴பதே மற்றும் மேற்கு டெக்சாஸ் இடைநிலை விலைக் குறிகாட்டிகளின் எதிர்கால விலைகளின் எளிய சராசரியின் அடிப்படையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் சராசரி விலை 80.50 ஐ.அ.டொலராகும். வரும் ஆண்டுகளில், 2026 ஆம் ஆண்டில் ஒரு பீப்பாய்க்கு 72.7 ஐ.அ.டொலர் வரை விலைகளில் மேலும் வீழ்ச்சியேற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

விநியோகச் சங்கிலிகளின் இயல்பாக்கத்திற்கு மேலதிகமாக, கூறப்பட்ட காரணிகள் முதன்மைப் பணவீக்கத்தின் விரைவான வீழ்ச்சிக்கு பங்களித்தன. எவ்வாறாயினும், மைய பணவீக்கம் மத்திய வங்கியின் இலக்குகளை விட அதிகமாக நீடிக்கின்றது, எனவே, தீவிரமான மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கைகளின் தொடர்ச்சி கடன் வளர்ச்சியை தொடர்ந்து கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டில் 9.2 சதவீதமாக இருந்த பணவீக்கம், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் இந்த ஆண்டு 5.9 சதவீதமாகவும், 2024 இல் 4.8 சதவீதமாகவும் தொடர்ந்து குறைவடைந்து வருகின்றது. உணவு மற்றும் எரிசக்தி விலைகளைத் தவிர, முதன்மைப் பணவீக்கம் மையப்பணவீக்கத்தினை விட 2024 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாக மெதுவாகக் குறைவடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**உலகப் பொருளாதாரத்தில் மத்திய கிழக்கின் அண்மைய அபிவிருத்திகளின் தாக்கம்**

மத்திய கிழக்கு மோதல், இப்பிராந்தியம் ஒரு முக்கியமான எரிசக்தி வழங்குனராகவும் ஒரு முக்கிய கப்பல் பாதையாகவும் காணப்படுவதால் உலகம் முழுவதும் அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடும். இஸ்ரேல் காஸா மீது படையெடுக்க தயாராகி வரும் நிலையில், இஸ்ரேல் காஸா மற்றும் பாலஸ்தீன பகுதிகளுக்கு அப்பால் வான்வழித் தாக்குதல்களை விரிவுபடுத்தியுள்ளதால் அண்டைய அரபு நாடுகளில் உள்ள போராளிகள் சண்டையில் இணைவார்கள் என்ற ஊகங்கள் உள்ளன.

மத்திய கிழக்கில் உள்ள முக்கிய பங்குதாரர்களுக்கு இடையே நேரடி மோதல் ஏற்பட்டால் மிக மோசமான சூழ்நிலையாக, உலக உற்பத்தியில் இருந்து சுமார் 1 டிரில்லியன் ஐ.அ.டொலர்களை இழக்கும் மந்தநிலைக்கு வழிவகுக்கும், எனவும் உலகளாவிய வளர்ச்சி 1.7 சதவீதமாக குறைவடையும் எனவும் எண்ணெய் விலைகள் ஒரு பீப்பாய்க்கு 150 ஐ.அ.டொலராக கடுமையாக உயரக்கூடும் எனவும் ப்ளூம்பெர்க் எகனாமிக்ஸ் மதிப்பிடுகின்றது. காஸாவில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட போர் கூட கச்சா எண்ணெய் விலையை 4 ஐ.அ.டொலரினால் அதிகரிக்கக்கூடுவதோடு உலகளாவிய வளர்ச்சி 0.1 சதவீதத்தால் வீழ்ச்சியடையக்கூடும். ஏவ்வாறெனினும், மோதல் இன்னும் உருவாகி வருவதால், நிலவும் நிச்சயமற்ற தன்மைகள் உலகளாவிய வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

**அட்டவணை 2.8 : உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் – 2023 (கணிப்பு)**

| நாடு | மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம் | பணவீக்கம் (சதவீதம்) | வேலையின்மை (சதவீதம்) | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதம்) | தேறிய கடன் (மொ.உ.உ. சதவீதம்) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜன்டீனா | -2.5 | 121.7 | 7.4 | -4.0 | 89.5 |
| அவுஸ்திரேலியா | 1.8 | 5.8 | 3.7 | -1.4 | 51.9 |
| பிரேசில் | 3.1 | 4.7 | 8.3 | -7.1 | 88.1 |
| கனடா | 1.3 | 3.6 | 5.5 | -0.7 | 106.4 |
| சிலி | -0.5 | 7.8 | 8.8 | -1.6 | 38.4 |
| சீனா | 5.0 | 0.7 | 5.3 | -7.1 | 83.0 |
| பிரான்ஸ் | 1.0 | 5.6 | 7.4 | -4.9 | 110.0 |
| ஜேர்மனி | -0.5 | 6.3 | 3.3 | -2.9 | 65.9 |
| கிரீஸ் | 2.5 | 4.1 | 10.8 | -1.6 | 168.0 |
| இந்தியா | 6.3 | 5.5 | த.இ | -8.8 | 81.9 |
| இந்தோனேஷியா | 5.0 | 3.6 | 5.3 | -2.2 | 39.0 |
| இத்தாலி | 0.7 | 6.0 | 7.9 | -5.0 | 143.7 |
| ஜப்பான் | 2.0 | 3.2 | 2.5 | -5.6 | 255.2 |
| கொரியா | 1.4 | 3.4 | 2.7 | -1.2 | 54.3 |
| மலேசியா | 4.0 | 2.9 | 3.6 | -4.7 | 66.9 |
| மெக்சிகோ | 3.2 | 5.5 | 2.9 | -3.9 | 52.7 |
| ரஷ்யா | 2.2 | 5.3 | 3.3 | -3.7 | 21.2 |
| சிங்கப்பூர் | 1.0 | 5.5 | 1.8 | 3.2 | 167.9 |
| தென்னாபிரிக்கா | 0.9 | 5.8 | 32.8 | -6.4 | 73.7 |
| ஸ்பெயின் | 2.5 | 3.5 | 11.8 | -3.9 | 107.3 |
| தாய்லாந்து | 2.7 | 1.5 | 1.2 | -2.9 | 61.4 |
| ஐக்கிய இராச்சியம் | 0.5 | 7.7 | 4.2 | -4.5 | 104.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.1 | 4.1 | 3.6 | -8.2 | 123.3 |
| வியட்நாம் | 4.7 | 3.4 | 2.1 | -1.3 | 34.0 |

*மூலங்கள் : உலக பொருளாதார பார்வை, சர்வதேச நாணய நிதியம், 2023 ஒக்தோபர் அரசிறை கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2023 ஒக்தோபர், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி*
*த.இ - தகவல் இல்லை.*

# அரசுடைமைத் தொழில் முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகை

# 03

### 3.1 மேன்நோக்கு

செலவு அடிப்படையிலான மின்சார கட்டணத்திருத்தம், எரிபொருள் விலை சூத்திரத்தினை செயற்படுத்தல் மற்றும் நீர்க் கட்டணத் திருத்தம் போன்ற சில திருத்தங்கள் உள்ளடங்களான 2022/23 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக நிதித்துறையில் அரசுடமை தொழில்முயற்சிகள் முன்னேற்றத்தினை பதிவாக்கியுள்ளன. இந்த மறுசீரமைப்பு முன்னெடுப்புகள் மூலம் அரசுடமை தொழில்முயற்சிகள் வங்கித்துறையிலிருந்து பெறப்படும் கடன்கள் மீதான கடன் ஆபத்துக்களை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்ற நடுத்தர காலப்பகுதியில் அரசிறைத் தொழில்பாடுகள் மீதான சுமையினை இலகுபடுத்துகின்ற தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை மீள்கட்டமைப்புச் செய்வதற்கு விரிவான உபாயத்திட்டமொன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. 2023 இன் முதல் எட்டு மாதங்களின் பெற்றோலிய சில்லறைச் சந்தையில் இரண்டு புதிய நிறுவனங்கள் நுழைந்ததுடன் இத்தொழிற்றுறையின் போட்டித்தன்மை அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது.

அரசுடமை தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்புக்கான கட்டாயத் தேவை ஏற்பட்டதன் காரணமாக அரசுடமை தொழில்முயற்சிகளுக்கான மீள்கட்டமைப்புக் கொள்கை, உரித்துமாற்றல் தொடர்பான விசேட வழிகாட்டல்கள், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கா ரெலிகொம், லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பிரேசன், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கான்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேற் லிமிறெட், ஹோட்டல் டெவலெப்பஸ்ர் லிமிற்றெட், லிற்றோ காஸ் லங்கா லிமிறெட் போன்ற பிரதான ஏழு அரசுடமை தொழில்முயற்சிகளுக்கான உரித்துமாற்று செயன்முறைக்கு கொடுக்கல் வாங்கல் ஆலோசகர்களை நியமித்தல் ஆகியவற்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதேவேளை, செயலாற்றுகை மையப்படுத்தப்பட்ட கலாசாரத்தினூடாக செயலாற்றுகையை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறுவன உடன்படிக்கைக் கூற்றில் பொதுத் திறைசேரி கைச்சாத்திட்டுள்ளது.

அரசுடமை தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையினைக் கருத்திற்கொண்டு 2022 இன் முதல் எட்டுமாதங்களில் பிரதான 52 தொழில்முயற்சிகளின் மொத்த நட்டம் ரூபா 726.9 பில்லியன் என்பதுடன் 2023 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 311.5 பில்லியன் மொத்த இலாபமாக மாற்றப்பட்டது. இதில் 38 தொழில்முயற்சிகள் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 338.5 பில்லியனை பதிவாக்கிய அதேவேளை மீதி 14 தொழில்முயற்சிகள் தேறிய நட்டமாக ரூபா 27.0 பில்லியனை பதிவாக்கியது. இக்காலப்பகுதியில் 38 தொழில்முயற்சிகளின் மொத்த இலாபத்தில் 26.2 சதவீதத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பங்களிப்புச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. தீர்வை / பங்கிலாப அறவீடானது 2022 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 17.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் எட்டு மாதங்களில் ஏறக்குறைய ரூபா 22.2 பில்லியனாக அதிகரித்தது.

### 3.2 பத்து பிரதான அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மீளாய்வு

இந்தப் பிரிவானது நிதி மற்றும் காப்புறுதி, மின்சாரம், நீர் மற்றும் விமானப் போக்குவரத்து போன்றவற்றை உள்ளடக்கி, முக்கிய பத்து அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகையை மீளாய்வு செய்கிறது.

#### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்துத் தளமானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 4,336.4 பில்லியனாக இருந்து 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 4,137.3 பில்லியனாக 4.5 சதவீதத்தினால் அதிகரித்தது. எவ்வாறாயினும், வங்கியின் வைப்புத் தளம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 3,334.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 3,571.9 பில்லியனாக 7.1 சதவீதமாக சிறிதளவு அதிகரிப்பினை அடையப் பெற்றுள்ளது. மொத்தக் கடன்களுக்கான III ஆம் நிலைக் கடன்களின் வீதமானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 5.27 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் 7.1 சதவீதம் அதிகரித்தது. இலங்கை வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம், 2022 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 27.0 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 16.1 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இந்த காலகட்டத்தில் ரூபாவின் மதிப்பு அதிகரிப்புடன் அவர்களின் வணிகங்களை புதுப்பிக்கவும், வட்டி அல்லாத வருமானத்தைக் குறைப்பதற்கும் வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதில் சந்தை நலன்களின் அதிகரிப்பின் முழு தாக்கத்தையும் மாற்றாத அதேவேளையில் அதிக வீதத்தில் வைப்புத்தொகை மீள் விலை நிர்ணயம் செய்யப்பட்டதன் விளைவாக அதிக நிதிச் செலவுடன் நிகர வட்டி வருமானத்தில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி இதற்கு பிரதான காரணமாகும்.

#### மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துத் தளம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,972 பில்லியனாகக் காணப்பட்டு 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 2,909.9 பில்லியனாக 2.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்புத் தொகை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,284.3 பில்லியனாக இருந்துடன், இது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 2,456.6 பில்லியனாக 7.5 சதவீதத்தினால் அதிகரித்தது. கடன்கள் மற்றும் முற்பணங்கள் காணப்படுகின்ற உயர் வட்டி வீதம் காரணமாக, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,715.2 பில்லியனாகவிருந்து 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் 9.1 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 1,557.9 பில்லியனைப் பதிவுசெய்தது. மொத்தக்

கடன்களுக்கான III ஆம் நிலைக் கடன்களின் வீதமானது 2022 இறுதியில் 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் 5.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மக்கள் வங்கியானது முக்கியமாக இந்த காலப்பகுதியில் நிலவிய உயர் வட்டி வீத சூழலின் கீழ் நிகர வட்டி வருமானத்தில் கூர்மையான குறைவு காரணமாக 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 15.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்தைய இலாபமாக ரூபா 7.3 பில்லியனினைப் பதிவுசெய்துள்ளது.

#### தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளம், 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 1,677.1 பில்லியன் ஆகும். இது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,616.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது 3.7 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர் வைப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,476.7 பில்லியன் தொகையிலிருந்து 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 1,475.5 பில்லியனாக சிறிதளவு அதிகரித்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்கு, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 553 பில்லியனிலிருந்து 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 536.4 பில்லியன் வரை சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. தேசிய சேமிப்பு வங்கி, நிகர வட்டி வருமானத்தில் வீழ்ச்சி மற்றும் நிதியின் அதிக செலவு மற்றும் நிகர கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் குறைவடைந்ததினால் 2022 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 6,574.7 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 316.7 மில்லியனை வரிக்கு முந்தைய நட்டமாக பதிவுசெய்துள்ளது. எவ்வாறெனினும், தேசிய சேமிப்பு வங்கியானது 2023 செப்தெம்பர் 30 முடிடைந்த காலப்பகுதிக்கான வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 500 மில்லியனை பதிவு செய்யக்கூடியதாயிருந்தது.

#### வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 2022 ஆம் நிதியாண்டில் ரூபா 12.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 19.5 பில்லியனினை வரிக்கு முந்தைய இலாபமாகப் பதிவு செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 44.8 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில், சந்தையில் முதலீடுகளின் மீதான வருமானம் அதிகரித்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 42.6 பில்லியனாக வருமானம் 5 சதவீதத்தால் குறைந்திருந்தது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதன் சொத்துத் தளத்தை 2022 இறுதியிலுள்ளவாறு ரூபா 273.7 பில்லியனிலிருந்து, 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 301.6 பில்லியனாக விரிவடையச்செய்தது. குறிப்பாக ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத நிதிகள் முறையே ரூபா 175 பில்லியனாகவும் ரூபா 20.3 பில்லியனாகவும் காணப்பட்டன. மேலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உரித்துமாற்றல் செயன்முறை தொடங்கப்பட்டுள்ளதுடன் இந்த உரித்துமாற்றல் செயன்முறையை எளிதாக்குவதற்கு கொடுக்கல்வாங்கல் ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

#### இலங்கை மின்சார சபை

2023 யூலை 01 ஆந் திகதியிலிருந்து மின்சாரக் கட்டணம் 14.14 சதவீதமாக குறைக்கப்பட்ட போதும் 2023 இன் முதல் எட்டு மாதங்களுக்கான பெறப்பட்ட வருமானம் 2022 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்டதனைவிட இருமடங்கு அதிகமாகக் காணப்பட்டது. இதற்குக் காரணம் 2023 பெப்ரவரி 15 ஆந்திகதி 66 சதவீத சராசரியாக மின்கட்டண விலைத்திருத்தம் அதிகரிக்கப்பட்டமையாகும். இதற்கமைவாக இலங்கை மின்சார சபையினால் பெறப்பட்ட வருமானம் 2022 இன் அதே காலப்பகுதியில் பதிவான ரூபா 172 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் எட்டு மாதங்களில் ரூபா 402 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் மின்சாரத்திற்கான கேள்வி 2022 இல் காணப்பட்ட 9,854 ஜி.வோ. இலிருந்து குறித்த காலப்பகுதியில் 9,465 ஜி.வோ ஆக 4 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

எரிபொருள் மற்றும் நிலக்கரி என்பவற்றின் அதிகரித்த விலை காரணமாக 2022 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 209.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் எட்டு மாதங்களில் நேரடி மின் உற்பத்திச் செலவினம் ரூபா 324 பில்லியனாக 55 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேபோன்று வங்கி கடன் பெறுகைகளின் வட்டி வீத அதிகரிப்பு காரணமாக நிதிச் செலவினம் 2022 இல் ரூபா 18.2 பில்லியனிலிருந்து 2023 இன் முதல் எட்டு மாதங்களின் 42.2 பில்லியனாக அதிகரித்தது. அதேபோன்று இ.மி. சபையானது உற்பத்திச் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கான போதியளவு ஏற்பாடு செய்யாத வகையில் தாமத மற்றும் வரையறுக்கப்பட்ட கட்டணம் காரணமாக 2023 இன் முதல் எட்டு மாதங்களில் ரூபா 20.8 பில்லியன் நட்டத்தினை எதிர்கொண்டது. இதற்கமைவாக விற்பனைப் புள்ளியில் அலகொன்றுக்கான செலவினம் கி.வோ. ஒன்றுக்கு ரூபா 29.17 இலிருந்து கி.வோ. ஒன்றுக்கு ரூபா 45.71 ஆக அதிகரித்தது.

மேலும், உற்பத்திக் கலவையானது நீர்: அனல் (எரிபொருள்): அனல் (நிலக்கரி): NCRE மற்றும் காற்று 2022 இன் இதே காலப்பகுதியில் பதிவான 29:20:34:17 என்ற வீதத்திலிருந்து 2023 இன் முதல் எட்டு மாதங்களில் 22:26:35:18 ஆக மாற்றமடைந்தது.

மேலும், இ.மி. சபையிலிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் மொத்த நிலுவை கடப்பாடுகள் 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 212.3 பில்லியனாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நீண்டகால கடன் பெறுகைகள் 2022 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 396 பில்லியனிலிருந்து 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 230.6 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

அதேவேளை, கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட எதிர்பாராத வறட்சி நிலைமை மற்றும் இ.மி. சபையின் பாதகமான நிதி நிலைமை, என்பவற்றைக் கருத்திற்கொண்டு 2023 இல் இ.மி. சபையின் நிதிக் கட்டமைப்பினை உறுதிப்படுத்துவதற்கு 2023 ஒக்டோபர் 20 இலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் சராசரி மின்கட்டணம் 18 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 3.1 : மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி மற்றும் ஆற்றல்

| | 2022 சனவரி – ஆகஸ்ட் | | | 2023 சனவரி – ஆகஸ்ட் (தற்காலிக) | | |
|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | | | உற்பத்தி | |
| | கொள்திறன் (மெ.வோ) | மொத்த மின்னுற்பத்திச் சதவீதம் (%) | தேறிய உற்பத்தி ஜி.வோ | கொள்திறன் (மெ.வோ) | மொத்த மின்னுற்பத்திச் சதவீதம் (%) | தேறிய உற்பத்தி ஜி.வோ |
| நீர் மின்னுற்பத்தி | 1,413 | 29 | 3,122 | 1,413 | 22 | 2,287 |
| அனல் மின்னுற்பத்தி - இ.மி.ச. எ.பொ. | 654 | 10 | 1,098 | 811 | 16 | 1,677 |
| அனல் மின்னுற்பத்தி - ஐ.பி.பி. எ.பொ. | 550 | 10 | 1,028 | 294 | 10 | 990 |
| காற்று - இ.மி.ச. | 104 | 2 | 236 | 104 | 3 | 268 |
| அனல் மின்னுற்பத்தி - நிலக்கரி | 900 | 34 | 3,707 | 900 | 34 | 3,574 |
| என்.சி.ஆர்.இ. மற்றும் காற்று | 732 | 12 | 1,294 | 769 | 11 | 1,112 |
| கூறை மீதுள்ள சூரிய மின்கலம் | 515 | 3 | 347 | 610 | 4 | 433 |
| **மொத்தம்** | **4,868** | **100** | **10,832** | **4,901** | **100** | **10,341** |

*மூலம் : இலங்கை மின்சார சபை*

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

வாயு, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றுக்கான செலவினத்தினை பிரதிபலிக்கின்ற மாதிரியினைப் பின்பற்றியதன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2022 இல் காணப்பட்ட ரூபா 716.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் எட்டு மாதங்களின் ரூபா 921.8 பில்லியனாக 28.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக, 2022 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய ரூபா 23.2 பில்லியன் மொத்த நட்டமானது 2023 இன் முதல் எட்டு மாதங்களில் ரூபா 121.6 பில்லியன் மொத்த இலாபமாக மாற்றமடைந்தது. 2023 இன் முதல் எட்டு மாதங்களின் போது ரூபா மதிப்பேற்றத்துடன் வருமான வளர்ச்சி காரணமாக அடையப் பெற்ற நன்மையினால் 2022 இன் அதே காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 632 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 88.6 பில்லியன் தேறிய இலாபமாக பதிவாகியது.

2023 இன் முதல் எட்டு மாதங்களின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் இறக்குமதிச் செலவினம் 1.8 பில்லியன் ஐ.அ. டொலராக வீழ்ச்சியடைந்தது. இந்நிலைமை உலக சந்தையில் மசகு எண்ணெயின் சராசரி விலை 2022 காலப்பகுதியில் பீப்பாயொன்று 105 ஐ.அ. டொலரிலிருந்து பீப்பாயொன்று 86 ஐ.அ. டொலராக வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும் கேள்விக் காரணிகளை சாதாரணமயப்படுத்தியதன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விலை ரூபா 737.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 768.1 பில்லியனாக 4.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.

2023 ஆகஸ்ட் இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்திய கடன் வசதியின்கீழ் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிக்காக ரூபா 228.8 பில்லியனை வழங்க வேண்டியிருந்தது. மேலும், 2023 ஆகஸ்ட் இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈரானிய எண்ணெய்க் கம்பனிக்கு ரூபா 82.1 பில்லியனை வழங்க வேண்டியிருந்தது.

இ.பெ. கூட்டுத்தாபனத்தின் மொத்த நிலுவையிலுள்ள வர்த்தகப் படுகடன் இ.பெ. கூட்டுத்தாபனத்தின் பிரதான பெறுகையாளர்களான இ.மி. சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் என்பவற்றின் திரவத்தன்மை நெருக்கடி காரணமாக 2022 இன் இறுதியில் ரூபா 268.8 பில்லியனிலிருந்து 2023 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 292.6 பில்லியனாக 8.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

இதற்கு மேலதிகமாக, பிரதான பெற்றோலிய உற்பத்தியாளர்களான சினோபெக் எண்ணெய்க் கம்பனி மற்றும் ஆர் எம் பார்க்ஸ் ஆகிய இரண்டு பாரிய வியாபார அமைப்புகள் இலங்கையில் முன்னரே தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களின் தொழிற்பாட்டினூடாக பெற்றோலிய பொருட்களின் இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனை என்பவற்றில் சந்தையில் பிரவேசித்தன. இதன் மூலம் போட்டித்தன்மை ஏற்பட்டு சேவை தராதரங்கள், நுகர்வோர் நன்மையடைதல் என்பன அதிகரிக்குமெனஎதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை துறைமுக அதிகாரசபை**

கொழும்பு துறைமுகமானது உலகத்தில் சமுத்திர வர்த்தகம் மற்றும் சர்வதேச வியாபாரத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற நிலையிலுள்ள துறைமுகமொன்றாகும். அல்பா லைனர் தரப்படுத்தலுக்கு அமைவாக இது உலகத்திலுள்ள அனைத்து துறைமுகங்களிலும் 23 ஆவதாக தரப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் கொழும்பு மேற்கு சர்வதேச

முனையம் போன்ற தற்பொழுது இடம்பெற்றுவருகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு அமைவாக தற்பொழுது காணப்படும் இருபது அடி கொள்கலன்கள் (TEUs) கையாளுகைத்திறன் 8.5 மில்லியனிலிருந்து 14 மில்லியனாக அதிகரிக்குமெனவும் பூகோள ரீதியான வழங்கல் சங்கிலியின் சிறந்த தொழிற்பாட்டுக்கான உத்தரவாதத்தினை வழங்குகின்ற நிலையில் காணப்படும் அதேவேளை உலகில் சிறந்த 14 துறைமுகங்களில் ஒன்றாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபை 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதத்தில் சுமார் 1,357,104 இருபது அடி கொள்கலன்களையும் 5,306,166 மெட்ரிக் தொன் வழமையான சரக்குகளையும் கையாண்டுள்ளது. 2023 இன் முதல் எட்டு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 24.5 பில்லியனை பதிவாக்கியதுடன், 2022 இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 36.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 32.5 சதவீதமான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும். இதற்கு 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 3.5 பில்லியன் செலாவணி இழப்பு முக்கிய காரணமாக இருந்தது என்பதுடன், 2022 இன் அதே காலப்பகுதியில் ரூபா 4.6 பில்லியனாக இருந்த செலாவணி இலாபத்துடன் ஒப்பிடுகையில், மேலும் இந்த குறைப்பினால் நாட்டின் இறக்குமதி இடைநிறுத்தங்களும் பாதிக்கப்படுகின்றன.

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் குழாய் நீர் மற்றும் ஒட்டுமொத்த பாதுகாப்பான குடிநீருக்கான மக்கள் அணுகையினை முறையே 61 சதவீதம் மற்றும் 96.7 சதவீதமாக விரிவுபடுத்துவதன் மூலம் அதன் சேவையைத் தொடர்ந்தது, இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் முறையே செய்யப்பட்ட 55.5 சதவீதம் மற்றும் 95.6 சதவீதம் ஆகும். இந்த காலகட்டத்தில், மொத்தம் 2.9 மில்லியன் இணைப்புகளுடன் 113,904 புதிய இணைப்புகள் நீர் வழங்கல் முறைமையில் சேர்க்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானம் ரூபா 33.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 18.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 84 சதவீத அதிகரிப்பாகும். 2002 இன் அதே காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 7.2 பில்லியன் மொத்த இலாபம் மற்றும் ரூபா 1.8 பில்லியன் தொழிற்பாட்டு நட்டம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் முக்கியமாக நீர் மற்றும் கழிவு நீர்க் கட்டணத்தின் மேல்நோக்கிய திருத்தத்தின் காரணமாக. 2022 செப்டம்பர் 01 மற்றும் 2023 ஆகஸ்ட் 02 இதன் மூலம் மொத்த இலாபம் 2023 இன் முதல் எட்டு மாதங்களில் ரூபா 15.3 பில்லியன் மற்றும் ரூபா 5.5 பில்லியன் தொழிற்பாட்டு இலாபமாகும்.

இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், நீர் உற்பத்தி மற்றும் நீர் விற்பனை முறையே 2 சதவீதம் மற்றும் 3 சதவீதம் குறைந்துள்ளதுடன் முறையே 540 மில்லியன் கன மீற்றர் மற்றும் 403 மில்லியன் கன மீற்றர் ஆக இருந்தது. மேலும், வருவாய் அல்லாத நீர் (Non-Revenue Water - NRW) 2022 ஆகஸ்ட் இறுதியில் 24.87 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஆகஸ்ட் இன் இறுதியில் 25.32 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் (தனியார்) லிமிடெட்.**

இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் (தனியார்) லிமிடெட் நிறுவனமானது, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதக் காலப்பகுதியில் வருமானமாகப் பதிவாக்கிய ரூபா 16 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்காக இந்நிறுவனம் ரூபா 25.3 பில்லியனினை வருமானமாகப் பதிவுசெய்துள்ளதுடன், இதில் ரூபா 20.2 பில்லியன் வான் பயணம் சாராத வருமானமாகவும் காணப்பட்டது. இக் கால பகுதிக்காக ஏற்பட்ட மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் ரூபா. 11 பில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய, இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் (தனியார்) லிமிடெட் நிறுவனம் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்காகவும் ரூபா 14.2 பில்லியனினை அதன் தொழிற்பாட்டு இலாபமாக அறிக்கையிட்டுள்ளது. தேறிய நிதிசார் வருமானம் மற்றும் அந்திய செலாவணி ஈட்டம் என்பனவற்றின் மீதான சரிசெய்கையின் பின்னர், இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் (தனியார்) லிமிடெட் நிறுவனமானது, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது பதிவாக்கிய ரூபா 2.5 பில்லியன் வரிக்கு முன்னைய நட்டத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்காக இந் நிறுவனம் ரூபா 26.6 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாகப் பதிவாக்கியிருந்தது.

நாட்டின் இடைக்கால படுகடன் கொள்கை காரணமாக, குறிப்பிடத்தக்க பொருளாதார பிரதிபல்களைக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகின்ற பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய டேர்மினல் 2 இன் அபிவிருத்திப் பணிகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ்**

ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் மற்றும் அதன் துணைக் கம்பனிகளை மீள்கட்டமைப்பதற்கான அமைச்சரவையின் ஆரம்ப கட்ட அங்கீகாரத்துடன் இணைந்த வகையில், 2023 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் உரித்து நீக்கத்திற்கு வசதியாக சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினை பரிவர்தனை ஆலோசகராக நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் இறுதியிலுள்ளவாறான, ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையான ரூபா 102.5 பில்லியனானது, ஒரு சில அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை மீள்கட்டமைப்பதற்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயத்தின் அடிப்படையில் தீர்த்து வைக்கப்படவுள்ளது.

அந்நியச் செலாவணி ஈட்டத்துடன் இணைந்த வகையில் சுற்றுப் பயணங்களுக்கான உலகளாவிய ஆர்வம் விரிவடைந்ததன் காரணமாக ரூபா 79.8 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாகப் பதிவாக்கி, ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம், 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களிலும் மேம்பட்ட செயலாற்றுகை

ஒன்றினைப் பிரதிபலித்தது. ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் மொத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது ரூபா 238.9 பில்லியனுக்கு 27.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, 2022 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதிக்காக இந் நிறுவனம் ரூபா 187.8 பில்லியனினைப் பதிவாக்கி இருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு ஏற்பட்ட மொத்த செலவினமான ரூபா 192.2 பில்லியனானது, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 207.5 பில்லினுக்கு 8 சதவீத்தினால் அதிகரித்துள்ளது. விமான நிலையம், பயணப் பாதை மற்றும் பயணிகள் செலவினங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இதற்கு காரணமாக அமைந்தது.

எவ்வாறாயினும், உள்நாட்டு அரச வங்கிகள், திரட்டிய செலுத்தப்படாத எரிபொருள் கட்டணங்கள், சர்வதேச நாணய முறிகள் மற்றும் குத்தகைக்குப் பெறப்பட்ட வானூர்திகளுக்கான நிலுவைக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட நிறுவனங்களுக்காக ஐ.அ.டொ.1.2 பில்லியன் படுகடனினையும் ரூபா 594.4 பில்லியன் திரட்டிய நட்டத்தினையும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் சுமக்கிறது.

அட்டவணை 3.2 : 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டல் தன்மை

ரூபா.மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2021 உண்மையான | 2022 தற்காலிக | 2023.08.31 தற்காலிக |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 43,190 | 30,977 | 16,116 |
| 2 | மக்கள் வங்கி | 30,387 | 21,338 | 7,353 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 28,381 | 4,510 | -317 |
| 4 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 422 | -48 | -786 |
| 5 | எச்.டி.எப்.சி. வங்கி | 878 | 303 | 2,092 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 776 | 359 | 743 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதிய சபை | 33,159 | 43,428 | 43,246 |
| 8 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 11,725 | 12,476 | 19,451 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 5,936 | 8,010 | 9,933 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 334 | 1,884 | 379 |
| 11 | விவசாயம் மற்றும் கமநல காப்புறுதிச் சபை | 1,780 | 2,651 | 1,094 |
| 12 | இலங்கை மின்சார சபை | -34,139 | -261,869 | -20,789 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | -81,816 | -615,053 | 88,646 |
| 14 | இலங்கைத் துறைமுக அதிகார சபை | 25,601 | 57,026 | 24,464 |
| 15 | தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை | -3,054 | -3,064 | 5,639 |
| 16 | விமான நிலைய, விமான சேவைகள் கம்பனி (இலங்கை) | -961 | 6,433 | 26,626 |
| 17 | ஸ்ரீலங்கன் எயார்லைன் லிமிட்டெட் | -166,370 | -74,673 | 79,789 |
| 18 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | -3,054 | 484 | -2,198 |
| 19 | இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம் | -1,597 | -940 | -568 |
| 20 | மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் | 48 | 69 | 88 |
| 21 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 43 | 37 | 114 |
| 22 | மில்கோ லிமிட்டெட் | 114 | -391 | -265 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 160 | 133 | 65* |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | -232 | 19 | -78 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | -490 | -5 | -20 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 468 | 511 | 397 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 511 | 514 | 293 |
| 28 | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பனி | -3 | 347 | 28 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | -16 | 14 | 1 |
| 30 | லங்கா மினரல்ஸ் சான்ட்ஸ் லிமிட்டெட் | 1,387 | 6,160 | 510 |
| 31 | லங்கா பொசுப்பேற்று லிமிட்டெட் | 157 | 58 | 29* |
| 32 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டெட் | 11 | 60 | 30* |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,953 | 3,267 | 2,221 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,004 | 1,390 | 734 |
| 35 | அரச மருந்தாக்கல், உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 1,235 | 1,586 | 2,139* |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் | -15 | 15 | 38 |
| 37 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 3,199 | 854 | -402 |
| 38 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை | -254 | 247 | 470 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு லிமிடெட் | -344 | -370 | -172 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | -229 | -541 | -279* |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 11 | -236 | -384 |
| 42 | இலங்கை கைப்பணிச் சபை | -59 | -101 | 25 |
| 43 | அரச மரக் கூட்டுத்தாபனம் | 1,496 | 1,016 | 153 |
| 44 | எஸ்டிசி ஜெனரல் ரேடிங் கம்பனி | 473 | 735 | 427** |
| 45 | லங்கா சதொச லிமிட்டெட் | -840 | -687 | -124 |
| 46 | அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | -208 | -381 | 996 |
| 47 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | -166 | -150 | 26 |
| 48 | இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் | -136 | 370 | 91 |
| 49 | இலங்கை உரக் கம்பனி லிமிட்டெட் | 65 | 401 | 115 |
| 50 | கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி லிமிட்டெட் | 234 | 501 | 205 |
| 51 | ஹோட்டல் டிவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி | -976 | -633 | -628 |
| 52 | லங்கா சீனிக்கம்பனி லிமிட்டெட் | 445 | 2,917 | 3,702 |
| | **மொத்தம்** | **-98,376** | **-748,042** | **311,459** |

*மூலம் : அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

* *சன - யூலை*

** *சன - யூன்*

அட்டவணை 3.3: அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் அறவீடுகள் / பங்கிலாபம் — ரூபா மில்லியன்

| | உண்மையான | | | எதிர்வுகூறல் | |
|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2022.08.31 வரை | 2024 | 2025 |
| **அறவீடு** | **25,919** | **22,004** | **17,142** | **64,945** | **68,200** |
| தேசிய சேமிப்பு வங்கி | 3,500 | - | - | - | - |
| இலங்கை வங்கி | 1,500 | - | - | 7,500 | 7,875 |
| மக்கள் வங்கி | 1,977 | 441 | - | 7,260 | 7,623 |
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 8,500 | 13,200 | 8,000 | 15,000 | 15,750 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | - | - | - | 300 | 315 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | - | - | - | 180 | 189 |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 100 | 320 | 191 | 100 | 105 |
| அரச மருந்தாக்கல், உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 100 | 100 | - | 150 | 158 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 1,824 | 1,608 | 450 | 2,000 | 2,100 |
| புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 2,000 | 1,000 | 1,500 | 3,000 | 3,150 |
| தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை | 15 | 35 | 40 | 50 | 53 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | - | - | - | 15,000 | 15,750 |
| முதலீட்டுச் சபை | - | 416 | 500 | 350 | 368 |
| கைத்தொழில் அபிவிருத்திச் சபை | - | - | - | 5 | 5 |
| இலங்கை காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு | - | - | - | 9 | 9 |
| தேசிய லொத்தர் சபை | 900 | 361 | 1,000 | 410 | 431 |
| இலங்கை தர நிர்ணய நிறுவனம | - | 10 | - | 15 | 16 |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம | 25 | 50 | 500 | 300 | 315 |
| தேசிய காலநடை அபிவிருத்திச் சபை | - | - | - | 50 | 53 |
| மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் | 25 | - | - | 10 | 11 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் | - | - | - | 500 | 525 |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | 50 | 1,000 | 1,000 | 750 | 788 |
| அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | - | 350 | - | 200 | 210 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் | 110 | 290 | 150 | 200 | 210 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | - | 1,200 | 3,000 | 1,000 | 1,050 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | - | 10 | 100 | 50 | 53 |
| இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | - | - | - | 10 | 11 |
| இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு | - | - | - | 25 | 26 |
| இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | - | - | - | 50 | 53 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | - | 1,015 | - | 10,000 | 10,500 |
| தேசிய மருந்துப்பொருள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை | 147 | 400 | 646 | 250 | 263 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 4,000 | - | - | - | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 1,100 | - | - | 15 | 16 |
| கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபை | 25 | 50 | 15 | 20 | 21 |
| வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவகம் | 16 | 33 | - | 70 | 74 |
| இலங்கை ஆயுர்வேத மருத்துவ கூட்டுத்தாபனம் | 5 | - | - | 10 | 11 |
| முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் | - | 90 | - | 30 | 32 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | - | - | - | 10 | 11 |
| இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | - | - | - | 5 | 5 |
| இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் | - | - | - | 15 | 16 |
| இலங்கை மாநாட்டு பணியகம் | - | - | - | 15 | 16 |
| இலங்கை தேயிலைச் சபை | - | - | - | 30 | 32 |
| ஏனைய அரசுடமை தொழில்முயற்சிகள் | - | 25 | 50 | 1 | 1 |
| **பங்கிலாபங்கள்** | **4,672** | **6,087** | **5,060** | **5,055** | **5,310** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 30 | 60 | 63 |
| இலங்கை வங்கி | 346 | 346 | 173 | 350 | 368 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 158 | 300 | 315 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | 0.9 | - | 2 | 2 |
| வர்த்தக வங்கி | - | 0.17 | - | 2 | 2 |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 899 | 1,511 | 1,001 | - | - |
| விமான நிலைய, விமான சேவைகள் லிமிடெட் | - | 500 | 500 | 1,000 | 1,050 |
| இலங்கை கனிப்பொருள் மணல்கள் | 700 | 759 | 1,726 | 1,500 | 1,575 |
| இலங்கை பொஸ்பேர்ட் லிமிடெட் | 20 | 20 | 20 | 25 | 26 |
| லங்கா லெய்லண்ட் லிமிடெட். | 3 | 13 | - | 3 | 3 |
| ரக்ணா ஆரக்சக லங்கா லிமிடெட் | - | - | 25 | 46 | 48 |
| மாந்தை உப்பு லிமிடெட் (தேறிய உப்புக் கம்பனி) | 15 | - | 20 | 15 | 16 |
| லங்கா பேர்டிலைஸர் லிமிடெட் | 29 | 15 | - | 15 | 16 |
| வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் பேர்டிலைஸ | - | 10 | - | 50 | 53 |
| கொழும்பு லோடஸ் ரவர் மெனேஞ்மன்ட் லிமிடட் | - | - | - | 12 | 13 |
| பிசிசி லங்கா லிமிடட் | - | - | - | 25 | 26 |
| கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடட் | - | - | - | 5 | 5 |
| பரந்தன் கெமிகல் கம்பனி லிமிடெட் | 3 | 50 | 30 | 40 | 42 |
| எஸ்ரிசி ஜெனரல் ட்ரேடிங் கம்பனி | - | 11 | - | 50 | 53 |
| ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சி | 1,331 | 1,805 | - | - | - |
| டி லா ரூ லங்கா லிமிட்ட் | 345 | 313 | - | 300 | 315 |
| இலங்கை மின்சாரக் கம்பனி லிமிடெட் | 327 | 218 | 436 | 350 | 368 |
| லங்கா இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் லிமிடெட் | 82 | - | 86 | 100 | 105 |
| மிறன்கள் அபிவிருத்தி நிதிய லிமிடட் | - | - | - | 5 | 5 |
| சிலோன் எக்றொ இன்டஸ்றீஸ் | 95 | 24 | 119 | 120 | 126 |
| லங்கா சுகர் கம்பனி லிமிடெட் | - | - | 352 | 100 | 105 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 98 | 95 | 349 | 445 | 467 |
| லங்கா திரிபோஷ லிமிடெட் | - | 10 | 10 | 10 | 11 |
| இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் | - | - | - | 15 | 16 |
| செலசினி மீடியா சொலுசன்ஸ் விமிடெட் | - | - | - | 100 | 105 |
| லங்கா கெனரிஸ் லிமிடெட் | - | - | - | 10 | 11 |
| ஏனைய | 2 | 10 | 25 | - | - |
| **மொத்தம்** | **30,591** | **28,091** | **22,202** | **70,000** | **73,510** |

*மூலம் : அரசுடமை தொழில்முயற்சி நிறுவனங்கள் மற்றும் அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்*

# 2024 - வரவுசெலவுத் திட்ட தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்

# 04

### 2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்

2024 – வரவுசெலவுத் திட்டத்திலுள்ள பேரண்டப் பொருளாதார மற்றும் அரசிறை மதிப்பீடுகள் வரவுசெலவுத் திட்டத் தயாரிப்பின் போதுள்ள தொடர் அனுமானங்கள், பகுப்பாய்வுகள் மற்றும் தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்தப் பிரிவு, மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வெளித்துறை முன்னேற்றங்கள் மற்றும் வேலையின்மை போன்ற வருமான மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள் பற்றிய அனுமானங்களின் விவரங்களுடன், மதிப்பீடுகளின் உணர்திறன்களையும் வழங்குகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளப்புக்களின் கீழ் 2024 - வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. அதற்கிணங்க, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.1 சதவீத வரி வருவாயையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.8 சதவீத ஆரம்ப மிகையையும் அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி

2024 - வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் நேரத்தில், அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தோன்றிய ஒருபோதுமில்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை பொருளாதார மீட்சிபெறும் அறிகுறிகளைக் காட்டுகிறது. இருப்பினும், மேலும் பல இடர்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பொருளாதாரமானது கைத்தொழில் துறையில் 18.3 சதவீத குறிப்பிடத்தக்க சுருக்கத்துடன் 7.8 சதவீதம் சுருங்கியது.

2023 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, 2024 ஆம் ஆண்டில் 1.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் பொருளாதார மீட்சியானது, இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து உற்பத்தி மற்றும் தயாரிப்புத் துறையை மேலும் இயல்புநிலைக்கு கொண்டுவருவதன் மூலமும், உள்ளீடுகளின் கிடைப்பனவை அதிகரிப்பதன் மூலமும் உந்தப்படும். எவ்வாறாயினும், மத்திய கிழக்கில் சமீபத்திய புவிசார் அரசியல் பதட்டங்களின் காரணமாக் பொருட்களின் விலைகளின் அதிகரிப்புடன், வழங்கல் பகுதியின் அதிர்ச்சிகள் உள்நாட்டு விலைகளைப் பாதிக்கலாம். உர மானியம் மற்றும் பிற உள்ளீட்டுப்பொருட்கள் தடையின்றி வழங்கல் செய்யப்படுவதால் விவசாயத் துறையும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் சேவைத் துறை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை அடையக்கூடியவாறு சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என்றும், தொழிலாளர்களின் பண வனுப்பல்கள் தொடர்ந்து அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் முதலீடு உட்பட பிற நிதிப் பாய்ச்சல்கள் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### நுகர்வோர் விலைகள்

2022, செப்தெம்பர் மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட 69.8 சதவீத உச்சத்தைத் தொடர்ந்து, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI, 2021=100) மூலம் அளவிடப்படும் பணவீக்கம் 2023 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 1.5 சதவீதமாக குறைவடைந்துள்ளதுடன் பணவீக்கமானது ஒற்றை இலக்க அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளாவிய பணவீக்கம் 2022 ஆம் ஆண்டில் 8.7 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 6.9 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் 5.8 சதவீதமாகவும் குறையும். பணவீக்கமானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் 2025 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் உலகளாவிய பணவீக்கம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், கடந்த ஆண்டு பதிவான தசாப்த உயர் பணவீக்கம் காரணமாக விலை மட்டங்கள் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் உலகளாவிய விலை மட்டங்கள் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உருவாகி வரும் புவிசார்- அரசியல் பதட்டங்களால் மேலும் பாதிக்கப்படலாம்.

### வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை

2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளால் வேலையின்மை வீதம் 5.2 சதவீதமாகவும் தொழிலாளர் பங்கேற்பு வீதம் 48.6 சதவீதமாகவும் குறைந்துள்ளது. இருப்பினும், பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான அதிகரிப்புடன், வேலையின்மை வீதம் 2024 ஆம் ஆண்டில் 5 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயத் துறையானது உரத்திற்கான உறுதியான அணுகலுடன் புத்துயிர் பெறவுள்ளதுடன் இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டு மூலப்பொருட்களின் கிடைப்பனவு காரணமாக கைத்தொழில் துறை பெரிதும் மீட்சியடையும். இத்தகைய முன்னேற்றங்கள் 2024 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் உதவும்.

### வெளிநாட்டுத்துறை

